0111,3LS0,1:
N11
120108

ரா. ராமானுஜம்
செப்பனிடுவதற்காக எடுத்துக்
கொள்ளப்பட்ட
நவம்பர் மாதம் வருடம் 83
செப்பனிட்டு முடித்த
டிசம்பர் மாதம் வருடம் 83
ஆராய்ச்சி உதவியாளரின்
கையொப்பம்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
22 NOV 1911
MADRAS
594
544
4. 1911

ஸ்ரீ:

# ஐவன்ஹோ

ஸாரஸங்க்ரஹம்

— பிற்பகுதி

BY

V. RAJAGOPALA AIYANGAR

*Sub-Editor, Swadesamitran*

*and*

*Author of the Tamil 'Talisman'*

*etc., etc.*

MADRAS: G. C. LOGANADHAM BROS.

THE "GUARDIAN PRESS," MOUNT ROAD

1911

*[Re]gistered Copyright]* *[Price As*

2416
ஐவன்ஹோ

MADRAS: G. C. LOGANADHAM BROS.,
THE GUARDIAN PRESS, MOUNT ROAD.

0111,3L-50,I-9
N11
120108



## PREFACE.

In placing before the public this completed and revised rendering of Scott's "Ivanhoe," the author begs to tender his thanks to the Tamil reading public for their generous appreciation of his efforts in the direction of popularising in the vernacular some of the most famous of the classic fictions in English literature. The second part of the story "of Ivanhoe". has been attempted to be told in the same simple form as the first part, which—originally published nearly two years ago,—has now been revised in the light of some suggestions and criticisms made.

No attempt, however, has been made to achieve the impossible task of giving a local or Oriental colouring to a story so peculiarly feudal and madiæval in conception and so redolent of the Crusaders as well as of the historical process of fusion of the Saxon and the Norman in the days of the successors of William the Conqueror. But the essentially human interest of the story is for all time and place and despite unfamiliar names and scenery, has always appealed to readers of "Ivanhoe."

The humble attempt of the author to bring this popular story within the comprehension of the average Tamil reader will, it is hoped, prove of some educative value.

V. R.

ஸ்ரீ:

# தந்துரை

பொன்மதிற்சனகைச் சன்மதி முனியருள் பன்னருஞ் சிறப்பிற் பவணந்தியாரும், தொல்காப்பியனாரும், அகத்தியனாரும், இவர்போன்ற தொல்லாசிரியர் பலரும் தம்நூற்குத் தாமே பாயிரங்கூறியதோடு, 'ஆயிரமுகத்தான் அகன்றதாயினும் பாயிரமில்லது பனுவலன்றே' என்றுபிறர்க்கும் அவர் விதித்துப் போந்தமையானும், அப்பாயிரங்கள் நூலுக்கு இன்றியமையாத பல விஷயங்களை அறிவித்து, அதன் பெருமை முதலியவற்றை விளக்கிக் காட்டுவதனாலும், எந்நூற்கும் அத்தகைய பாயிரங்கள் அவசியம் கூறப்படவேண்டுமென்பது துணிபு.

ஐவன்ஹோ வென்னும் இத்தமிழ்வசன நூலோ இப்பெயரையேகொண்ட ஓராங்கிலக் கற்பிதக்கதையின் வழியாப்புற்றதாகும். 'முதல்நூல், கருத்தன், அளவு, மிகுதி, பொருள், செய்வித்தோன், தன்மை முதல நிமித்தினும், இடுகுறியானும் நூற்கெய்தும் பெயரே' என்பவாகலின், இது முதனூற் பெயரைக் கொண்டதென்க. ஆங்கில முதல்நூலான ஐவன்ஹோவுக்கு ஆசிரியர் ஸர் வால்டர் ஸ்காட்டு என்ற சீர்த்திமான். இவர் இற்றைக்கு ஸுமார் நூற்றைம்பது வருஷத்திற்கு முன் இங்கிலாந்தின் வடக்கேயுள்ள ஸ்காத்லாந்தின் தலைநகராகிய எடின்பரோ என்ற பட்டணத்திற் பிறந்து, கல்வி கேள்விகளில் வல்லவராய், புலவர்திலகமெனப் புகழ்பெற்றவர். இவர் இந்நூலை 1819-ம் வருஷம் வெளியிட்டனரென்பர்.

இவ்வாசிரியர் தமது நூலின் கதைப்போக்கை மிகுதியும் மனோகரமாக்குவதோடு, அக்கதையிற் பிரஸ்தாபித்துள்ள காலத்தின் வருணனை, தேயத்தின் வருணனை, ஜனங்களின் நடை-

யுடையாவனை என்ற எல்லாவற்றையும் வெகு அழகாய்க் கூறி விடுபவர். இவ்வைவன்ஹோ ஸுமார் எண்ணூறு வருடங்களுக்கு முன் இங்கிலாந்தில் நடந்த சில விஷயங்களைக் கதா ரூபமாக அறிவித்தலால், இது அத்தேயம் அக்காலத்தில் எத்தன்மைத்தா யிருந்ததென்பதை விளக்கும் ஒரு கண்ணாடிபோன்றிருக்கின்றது. உள்ளதுகொண்டு இல்லது புணர்த்தல் என்னும் நயம்பற்றி, சரித்திர ஸம்பந்தமான வற்றோடு இல்லனவற்றைச் சேர்த்து, வீரரஸமே தலையெடுக்கவும், மற்ற ரஸங்கள் இடை இடையே விரவிவரவும் இந்நூலாசிரியர் இதைப் பண்படுத்தி யிருக்கிறார்.

ஸுமார் தொள்ளாயிரம் வருஷங்களுக்கு முன் இங்கிலாந்து தேசத்திலே ஸாக்ஸன் என்ற ஒரு ஜாதியார் பல வருஷங்களாக அரசாண்டு வந்தனர். இவர்கள் தேசாபிமானம் மிக்கவர்கள். சொல்லுறுதிக்காரர்கள். ஆனால் முதிர்ந்த நாகரிகர்களல்லர். விஷயத்தை ஸூக்ஷ்மமாக அறியாத ஸ்தூலபுத்தியுடையவர்கள். இவர்கள் கபடு சூதுதெரியாத வெள்ளையர்களென்றும், டாம்பீகமற்ற ஸாதுக்களென்றும் பெயர் வாங்கியவர்கள். இவர்களை நார்மன் என்ற ஒரு ஜாதியார் யுத்தத்தில் முறியடித்து, இவர்கள் நாட்டைப் பிடுங்கிக்கொண்டு, இவர்களுக்கு ஒரு சுதந்திரமும் இல்லாது செய்துவிட்டார்கள். இந்த நார்மன் ஜாதியார் பிரான்ஸு தேசத்தைச் சேர்ந்த நார்மண்டி என்னும் நாட்டில் வஸித்தவர்கள். சௌரியத்திலும் வீரா வேசத்திலும் மிக்கவர்கள். டாம்பீகம், நாகரிகம், கர்வம் எல்லாம் படைத்த ஸாமர்த்தியசாலிகள். இத்தகையினோர் அநாகரிகர்களும் ஸாதுக்களுமான ஸாக்ஸன் ஜாதியாரை ஆளுவோர்களாயேற்பட்டு விட்டால், எவ்வளவு தௌவ்டிகர்களாகவும் கர்விஷ்டர்களாகவும் இருந்திருக்க வேண்டும்! இந்த ஸாக்ஸன்கள் ராஜஸ்தானங்களிலோ, அல்லது பொது ஸபைகளிலோ வந்தணுகுவாரானால், அவர்களை இந்த நார்மன் ஜாதியார் ஏளனம் செய்வ



தும், வஞ்சகமாகப் புகழ்ந்து சிரிப்பதும், நேரேயும் துடுக்காய்ப் பேசுவதுமாகத் தங்களுடைய அலக்ஷியத்தைக் காட்டி வந்தார்கள். ஸாக்ஸன் ஜாதியாரும் கேவலம் பயங்காளிகளல்லராதலால், இந்த நார்மன் ஜாதியாரை அப்போதைக்கப்போது சிக்ஷித்துக் கொண்டே வந்தார்கள். இதனால் இவ்விருதிறத்தாருக்கும் ஸதா சச்சரவே யுண்டாகிக்கொண்டு வந்தது. நார்மன் ஜாதியாருக்கு 'நாம் ஆளும் ஜாதியன்றோ!' என்ற கர்வமும், ஸாக்ஸன் ஜாதியாருக்கு 'அன்னியநாட்டுத் துரோகிகள்' என்ற வெறுப்பும் உண்டாயிருந்தபோது, இவ்விரு ஜாதியாருக்கும் அன்யோன்ய மென்பது எங்கே?

நிற்க, அக்காலத்தில் சண்டையென்பதையே தொழிலாகக் கொண்ட ஒருவகை வீரருண்டு. இவர்கள் ஆபாதகேசபரியந்தம் இருப்புக்கவசம் தரித்துச் சூலம், கத்தி, கோடாலி, கேடகம் என்ற ஆயுதங்களைத் தாங்கி, போர்க்குதிரை யேறி ஊரூராய்த் திரிவார்கள். இவ்வீரர்களுக்குப் பொதுவாக நைட் (Knight) என்று பெயர். இவர்களுள் 'கோயில் நைட்' என்றும், 'ஸெயின்டு ஜான்மடத்து நைட்' என்றும் பெயர்கொண்ட இருவகையினரே முக்கியமானவர். கோயில்வீரரென்று பேர் வந்த காரணம்சிறிது கூறுவாம்.

நமது ஆசியா கண்டத்தின் ஸிரியா தேசத்திலே பாலஸ்தீன நாட்டிலுள்ள ஜருஸலம் நகரத்திலே ஏசுகிறிஸ்து பிறந்து மரித்துப்போயினர். அவருடைய சரீரம் புதைக்கப் பெற்றிருக்கும் கல்லறையின்மீது கிறிஸ்துவின் தாயான கன்னிமரியாளுக்கு ஒரு கோயிலுண்டு. இக்கோயிலிருக்கும் ஸிரியாதேசம் துருக்கநாடாகையால், மகம்மதிய மதாவேசிகள் அடிக்கடி இக்கோயிலைக் கைப்பற்றி விடுவதுண்டு. அதனால் சில வீரர்கள் அக்கோயிலைக் காப்பதற்குச் சிலவீரர் ஏற்பட்டார்கள். இவ்வீரர்கள் கல்யாணம் பண்ணிக்கொள்வதில்லையென்றும், மதுமாம்ஸாதிகளைப்புஜிப்பதில்லை யென்றும், விரதங்கொண்டு, உலக இன்

டம்ஸைதயும் ஒழித்து, எப்பொழுதும் தரித்திரராகவே இருந்து, இம்மரியாளின் கோயிலைத் துருக்கர் யூதர் முதலிய அன்னிய மதத்தினரிடத்திருந்து காத்துக்கொண்டு பாலஸ்தீனாவில் தங்கியிருந்தார்கள். பிறகு இக்கோயில் வீரர்கள் தொகையில் பெருகவே, கிறிஸ்தவர் தேசமாகிய ஐரோப்பா முழுவதும் இவ்வகுப்பு வீரருக்கு மடங்கள் ஏற்பட்டன. இவர்கள் வீரர்களாயிருத்தலோடு மனைவிமக்களைக் கொள்ளாமலும், போகபோக்யாதிகளை அனுபவிக்காமலுமிருத்தலால், ஸந்யாஸிகளாகவும் கருதப்பட்டார்கள். ஆகவே கோயில்வீரரென்றால், பாதிவீரரும் பாதிஸந்யாஸியுமாவார்கள். இவ்வீரஸந்யாஸிகளுக்கு ஏற்பட்ட மடங்களில் ஒரு மடாதிபதியுண்டு. இம்மடாதிபதி அரசனுக்குக் கீழ்ப்பட்டவனல்லன். நமது ஐவன்ஹோக் கதையில் விளங்கும் போமனார் இக்கோயில்வீரர் மடத்துளொன்றுக்கு அதிபதி. (Grand master) பேராசிரியன் என்பது இவனுக்குப் பெயர். நமது கில்பர்ட்டோ மேற்கூறியபடி விருதங்கொண்ட ஒரு கோயில் வீரன் அல்லது வீரஸந்யாஸி.

இவர் விருத்தாந்தம் நிற்க, யூதர்என்ற ஒரு ஜாதியார்ஐரோப்பாவில் எவ்விடங்களிலும்உண்டு. இவர்கள் நம்தேயத்து நாட்டுக்கோட்டைச் செட்டிகளைப்போல் கொடுக்கல் வாங்கல் வியாபாரம் செய்துகொண்டு, தனவந்தர்களாயிருப்பவர்கள். இவர்கள் இப்பொழுதும் மிக்க உழைப்பாளிகளாய் வியாபாரத்தில் மிகவும் ஸமர்த்தர்களாயிருக்கின்றார்கள். அக்காலத்தில் ஐரோப்பாவிலுள்ள கிறிஸ்தவர்கள் பரம ஏழைகளானமையால், இவ்யூதர்களிடத்தில் கடனுக்கு அடிக்கடி வருவார்கள். இவர்களோ நூற்றுக்கு இருபது இருபத்தைந்து வட்டிக்குக் குறைந்து பணம் கொடுப்பதில்லை; தம்மிடத்தில் கடன்பட்டவர்களை இவர்கள் இலகுவில் விடுவதுமில்லை. இதனால் கிறிஸ்தவர்களுக்கு இவர்களிடத்தில் மிகவும் துவேஷம். எங்கேயாவது இவ்யூதர்களை ஒன்றியாய்ப் போகக்கண்டால், கிறிஸ்தவர்கள் இவர்க



ளைப் பிடித்துச் சிறைப்படுத்தி ஏராளமான பணம் பறிப்பதுண்டு. ஒரு காலத்தில் ஒரு கிறிஸ்தவப் பிரபு ஒரு யூதனைச் சிறையிலிட்டு, அவனுடைய பற்களை ஒவ்வொரு நாளைக்கு ஒவ்வொன்றாகப் பிடுங்கிவந்து, கடைசியில் இரண்டு பல்மட்டும் எஞ்சுகிற வரையில் சித்ரவதை செய்து வந்தானாம். அவ்யூதன் இனி இம்சை பொறுக்காதென்று, ஏராளமான பணம் வருவித்துக் கொடுக்க, அக்கிறிஸ்தவப் பிரபு அவனை விடுவித்தானாம். இவ்யூதர்களுடைய கதி இவ்வாறிருந்தாலும், இவர்களும் இலகுப்பட்டவர்களல்லர். ஸமயம் சிக்கியபோது இக்கிறிஸ்தவர்களை இவர்கள் மிகக் கொடுமையாக நடத்தி வந்தார்கள். தம்மிடத்தில் கடனுக்கு வரும் கிறிஸ்தவர்களை இவர்கள் கைவசப்படுத்தி, பணத்திற்குப் பதிலாக அவர்களுடையபெண்டாட்டி பிள்ளைகளையாகிலும், அல்லது அவர்களையே யாகிலும் ஈடாகப் பெற்று, கேவலம் கீழான அடிமைகள்போல அவர்களை நடத்திப் பழிக்குப் பழி வாங்குவார்கள்.

யூதர் விருத்தாந்தம் இம்மட்டோடு நிற்க, பணம் பெற்றுக் கொண்டு ராணுவ ஊழியம் செய்துவந்த ஒரு வகையினரைப் பற்றிப் பேசுவோம். அக்காலம் வலுத்தவன் கக்ஷிதான் நியாயக் கக்ஷி என்றிருந்தமையால், ஒரு நாட்டிற்கும் மற்றொரு நாட்டிற்கும் அடிக்கடி யுத்தம் விளைந்துகொண்டே இருக்கும். இதனால் யுத்தத்தொழிலில் தேர்ந்தவர்க்குப் பிழைப்புக்கிடமிருந்தது. சில வீரர்கள் தம்மிடத்தில் பல காதகர்களைக் கூட்டிவைத்துக் கொண்டு, அவர்களுக்கு ராணுவம் பயிற்றி, அவர்களுக்குத் தாம் தலைமைவகித்து, எந்த அரசன் தம்முடைய துணையை அபேக்ஷிக்கிறானோ அவனுக்குத் தம் சிறுபடையோடு ராணுவ ஊழியஞ் செய்து பொருள்பறித்து வந்தார்கள். இவர்களுக்குப் ப்ரீகம்பானியன்ஸ் Free Companions (= ஸ்வதந்திரஸகாக்கள்) என்று பெயர். இந்த ஸ்வதந்த்ரஸகாக்களுக்குப் போர்த் தொழில் உத்தியோகம் சிக்காத ஸமயங்களில் கூட்டுக் கொள்

ளையடிப்பதும், வழிமறிப்பதும் விருத்திகளாயிருந்தன. நம் தேசத்திலும் பாளையக்காரர்களென்ற பேருடன் சிலர் இத்தொழில் நடத்திவந்தனர். நமது டப்ரேஸி இந்த ஸ்வதந்த்ரஸேனாக்களின் தலைவரில் ஒருவன். இவனைத்தான் ஜான் தன்னிடத்தில் அமர்த்திக்கொண்டு, தன் தமயன் ரிச்சேர்டு திரும்பி வருவானானால், அவனை யுத்தத்தில் ஜயித்துச் சிங்காதனத்தைக் கைப்பற்றிக் கொள்ளலாமென்று எண்ணியிருந்தான்.

மேற்கூறியவாறு 'வலுத்தவன்கக்ஷி நியாயக்கக்ஷி' என்ற கோட்பாடுபற்றித்தான் ரெபெகா தன்வழக்கு தீர்மானிக்கப்படுவதற்குத் தன்மீது குற்றஞ்சாட்டுவோரும் தானும் யுத்தஞ்செய்ய வேண்டுமென்றும், தான் ஜயித்தால் தன்மீது குற்றமில்லையென்றும், தன் விரோதி ஜயித்தால், தான் சிக்ஷைக்குள்ளாவாளென்றும் சொல்லினர். ரெபெகா ஸ்திரீயாதலால், அவளை நேரில் யுத்தஞ்செய்யாது, அவளுக்காக ஏற்றுக்கொண்டு ஒருவீரன் யுத்தம் செய்யலாம் என்று தீர்மானிக்கப்பட்டது. இப்படி ஸ்திரீகளுக்கு வேறொருவன் ஏற்றுக்கொண்டு வரலாமென்று ஒப்புக்கொள்வது அக்காலத்துவழக்கம்.

மேற்குறித்த விஷயங்களை இந்நூலைப் படிக்கும் மாணவர்கள் இந்நூலிலிருந்தே அறிந்துகொள்வது கூடாமைபற்றி, இப்பாயிரத்தில் இவற்றைத் தந்துரைக்கலானேம். கலாசாலைகளிலும் ஸெகண்டரிஸ்கூல் என வழங்கும் இடைத்தரப் பாடசாலைகளிலும் கல்விபயிலும் மாணவர்கள் தற்காலத்தில் தமிழில் மிகக் குறைந்த ஞானத்தையே யுடையவர்களாய் வியாஸம் எழுதும் பரீக்ஷையில் இரண்டு வாக்கியங்கள் கூடச் சேர்த்து எழுத இயலாது இடர்ப்படுகின்றதை யாம் தமிழ்ப்போதகரா யிருந்த காலத்திற் கண்கூடா அறிந்தமையால், அந்நெறியில் அவர்களுக்குப் பயன்படும்படி ஒரு வசனநூல் எழுதத்துணிந்தோம். 'வினையான் வினையாக்கிக் கோடல் நனைகவுள் யானையால் யானையாத் தற்று' என்பவாகலின், எழுத எடுத்த நூலினால் தமிழ் நூற்



பயிற்சிக்குப்பயன்விளைவதோடு, ஆங்கில நூற்பயிற்சிக்கும் சாதகமாகும்படி, ஆங்கிலத் தொல்லாசிரியர் யாத்த யாதாயினுமொன்றைத் தமிழில்-மொழிபெயர்க்க வேண்டுமெனக் கருதினேம். இக்கருத்துக்கேற்பஎமது நண்பரான ஊ.பஞ்சாபகேசஐயர் அவர்கள் B. A. ஸர் வால்டர் ஸ்காட்டின் ஐவன்ஹோக்கதையை எழுதலாமென யோசனை சொல்லி, தாம் சிலகாலத்திற்கு முன் தமிழிற் குறித்திருந்த அக்கதையின் ஒரு பகுதியை எமக்கீதலும், அதை யாம் சோதிக்கப் புகுந்து இரண்டு மூன்று அத்தியாயம் வரைச் செப்பம் செய்தோம். அப்பாகம் பிறகு 'விக்யானு'ப்பத்திரிகையில் தோன்றிற்று. அது நயமாகத் தோன்றியதால், அவ்வழியேமேலும் எழுதவதென்று துணிந்து, அக்கதையை ஸங்க்ரஹமாக எழுதினேம். 'டார்க்விலஸ்டன்' (Torquilstone) என்னும் ப்ராண்டிபோவின் மாளிகை ராபின் ஹூடுடன் கைவசப்படும் கதையளவு ஒரு பகுதியாகவும், அதன் பிறகுள்ள கதையை வேறொரு பகுதியாகவும் எழுதி முற்பகுதியை ஒரு முழுக்கதையெனத் தோன்றுவண்ணம் பண்படுத்தி வெளியிட்டோம். கும்பகோணத்தில் அச்சியந்திரசாலையில் சீக்கிரமாக வேலை நடந்தமையாலும், எமக்குப் பாடசாலையில் அதிக வேலை இருந்தமையாலும் எழுத்துப்பிழைகள் பல பொதுளியதாய் முற்பகுதி வெளியாயிற்று. ஆயினும் பல நண்பர்களுடைய அன்பினாலும், எமது கல்லாசிரியர்களின் பேருதவியாலும், அப்பொழுது பதிப்பித்த பிரதிகள் சீக்கிரம் செலவாயின. இப்பொழுது இதைச் சோதித்தும், பலவிஷயங்கள் சேர்த்தும் பதிப்பித்துள்ளோம். இப்பொழுதும் இதில் சில குறைகள் காணப்படுகின்றன வென்றே எண்ணுகிறோம். ஆயினும் அன்பர்கள் தயைகூர்ந்து அவற்றைப் பாராட்டாது விடுதலோடு, எமக்கு முன்போல ஊக்கத்தையும் தந்தருள்வார்களெனநம்புகிறோம்.

V. R.

ஸ்ரீ:

# ஐவன்ஹோ

## அத்தியாயம் 1

மகாவீரனான ஸாக்ஸிலியின் கையில் பிராண்டிபோயின் மாளிகை சிக்கி விட்டமையால், அதிலிருந்த விலையுயர்ந்த பொருள்கள் எல்லாவற்றையும் அவன் வாரிக்கொண்டுகாட்டுக்குட் சென்று, மறுநாள்பொழுது விடிந்ததும், ஒரு பெரிய விருக்ஷத்தினடியில் தன் பரிவாரங்கள் சூழ உட்கார்ந்து, தன் இருபுறத்திலும் ஸிட்ரிக்கையும் கருப்பு வீரனையும் உட்கார்த்திவைத்துக்கொண்டு, அவர்களோடு சந்தோஷத்துடன் அளவளாவிய பின்பு அத்திரவியக் குவியலை இரண்டாகப்பங்கிட்டு, ஸிட்ரிக்கை நோக்கி, "ஐயரே! இதில் உமக்கிஷ்டமான பாகத்தை எடுத்துக்கொள்ளும். உம்முடைய பலத்தினாலேதான் எனக்கு இவ்வளவு ஐச்வரியமும் கிடைத்தது" என்று சொல்ல, ஸிட்ரிக்கு, "நல்லதப்பா! உன்னுடைய மரியாதைக்கு வந்தனம். இப்பொருளோ ஒரு மகா துரோகியினது. அதில் ஒட்டிய ஒரு துரும்பும் நான் தொடமாட்டேன். நான் உனக்கு வந்தன மளிக்கும்பொருட்டே இதுவரையில் தாமதித்திருந்தது. என் விஷயமாக உன் உயிரையும் உன் மனிதர்களின் உயிரையும் துரும்பாக மதித்து இக்காரியத்தை முடித்தாயே! உன்னைக் கடவுள்

ஒன்றும் கைவிடார்" என்று வாழ்த்தி, அவனைத் தழுவிக் கொண்டான்.

இத்தருணத்தில் வாம்பா அவ்விடத்தில் வந்து சேர, ஸிட்ரிக்கு எழுந்து, அவனைத் தன் மார்போடணைத்துக்கொண்டு, "அப்பா! உனக்கு நான் என்ன வெகுமதி யளிப்பேன்! உன்னை எவ்வாறு புகழ்வேன்! என் ஸந்தோஷத்தை எப்படிக் காட்டுவேன்! எல்லாரும் என்னைக் கைவிட்ட ஸமயத்தில் நீ மாத்திரம் வந்து உடையிழந்தவன் கைபோல உதவினாயே!" என்று ஆனந்தக் கண்ணீர் பெருக்கினான். அதற்கு விகடன், "ஐயரே! நான் செய்தது ஒரு அருமையா? கர்த்து எடுத்துக்கொண்ட முயற்சிக்கு நான் செய்தது எவ்வளவு? என்னை வேண்டி அவனை நீங்கள் மன்னித்துவிடவேண்டும். அவன் செய்த குற்றம் உம்முடைய மகனிடத்தில் இரண்டு மூன்று நாள் வேலை செய்தானென்பதுதானே!" என்று வேண்டிக்கொண்டான். அதற்கு ஸிட்ரிக்கு, "ஆ! கர்த்தை மன்னிப்பது மட்டுமா? அவனை மன்னிப்பதோடு ஸன்மானமுமன்றோ பண்ணவேண்டும்!" என்று சொல்லி, "அப்பா கர்த்து!" என்று கூப்பிட்டதும், அவன் வந்து எஜமானன் காலில் விழுந்தான். உடனே ஸிட்ரிக்கு, "ஓ! கர்த்து! இன்றோடு உன் அடிமைத்தனம் நீங்கிற்று. இன்றுதொட்டு நீ சுயேச்சையுள்ளவனானாய். உனக்குப் பயிரிட ஒரு வேலி நிலம் தருவேன், அதை நீ ஆசந்திரார்க்க ஸ்தாயியாய் புத்திர பௌத்திர பாரம்பரியமாய் ஆண்டனுபவித்துக்கொள்ளு" என்று மனப்பூர்வமாகச் சொல்லிக்கொடுத்தான்.



இதைக்கேட்ட கர்த்து ஸந்தோஷத்தால் உடல் பூரித்து, ஆடுவதும், பாடுவதும், ஓடுவதும், உலாவுவதுமாக, எழும்பி எழும்பி விழுந்து, தன்னுடைய ஆனந்தத்தை வெளிப்படுத்தினான். தன்னுடைய அருமை நாயைக் கூப்பிட்டு, "என்னருமை நண்பா! இப்பொழுது நான் யார் தெரியுமா?" என்றான். இவையெல்லாவற்றையும் சாவகாசமாகக் கவனித்துக்கொண்டு, மகிழ்ந்து பார்த்திருந்தவாம்பா, "ஓ! கர்த்து! நானும் உன் நாயும் உன்னை எப்பொழுதும்மறவோம். நீதான் எங்களைமறந்துவிடுவாய். அது உன் குற்றமன்று. எவருக்கும் அந்தஸ்து உயர உயர பழைய நட்பினரை மறந்துவிடுவது ஸகஜந்தான். அப்பொழுது அவர்கள் தமக்கு ஸமானமானவரை நட்புக்கொள்ளுகின்றனர்" என்றான். அதற்குக் கர்த்து, "என்னருமை நண்பா! என்னை அப்படி எண்ணாதே! என்னைப்பற்றிய ஞாபகம் எனக்கிருக்கும்வரையில் உன்னை மறவேன்" என்று அவனைத் தழுவிக்கொண்டான்.

இவ்வாறு எல்லாரும் தம்தம் துக்கங்கள் தீர்ந்து, மகிழ்ச்சியுடன் சம்பாஷணை செய்துகொண்டிருக்கையில், பலர் சூழ்வர ரொவேனா சீமாட்டி ஓர் அழகிய குதிரையின்மேல் ஏறிக்கொண்டு, கம்பீரத்துடன் அங்கு வந்து சேர்ந்தாள். அவளுக்கு மரியாதை செய்ய லாக்ஸிலி முதலான எல்லோரும் எழுந்து வணங்கினார்கள். அவளும் அவர்களுக்குப் பிரதி மரியாதை செய்து 'ராதர்வூட்' மாளிகைக்குப் போகப் புறப்பட்டாள். கில்பர்ட்டின் அடியினால் இறந்துபோன அதெல்ஸ்டேனை நினைத்துத் துக்கித்துக் கொண்டு, ஸிட்ரிக்கும் வீட்டுக்குப் புறப்பட்டான்.

இவ்வாறு எல்லாரும் பிரயாணப்படும்பொழுது, கறுப்புவீரன் ஆஜ்ஞைக்குட்பட்டு அருகே நின்றுகொண்டிருந்த டீப்ரேஸி சென்று, ரொவேனாவின் குதிரையின் கடிவாளத்தைப் பிடித்து நிறுத்திக்கொண்டு, "ஓ! உத்தமீ! தோற்று அவமானமுற்று வருந்தும் ஒரு வீரனைக் கண்ணெடுத்துப் பாராயா?" என்று வேண்டிக்கொள்ள, அவள், "வீரா! நீ பிரவர்த்தித்த இப்படிப்பட்ட துஷ்க்ருத்யம் ஒன்றில் ஜயித்தால் அவமானமே ஒழிய தோற்பால் அவமானமே இல்லை" என்றாள். ஸிட்ரிக்கு புறப்படுமுன் கறுப்புவீரனை நோக்கி "ஐய! உமக்கு நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டவன். உம்மை என் வீட்டில் வருவித்து உபசரிப்பதில் பெரிதும் திருப்தியுடையவனாக இருப்பேன்" என்று உரைத்தான். அதற்கு அவ்வீரன், "ஓ! பிரபு! நீர்தாம் எனக்கு எல்லா உபசாரமும் செய்துவிட்டீரே! இனி என்ன? ஆயினும் உம்முடைய இஷ்டப்படியே நான் உமது மாளிகைக்கும் வருவேன். இப்பொழுது மட்டும் அவகாசமில்லை. ஒரு ஸமயம் நான்வந்தேனே, உமது வள்ளன்மையைச் சோதிக்கும்படியான ஒரு அபூர்வ வரத்தைக் கேட்பேன்" என்றான். அதற்கு ஸிட்ரிக்கு, "நீர் எதைக் கேட்பீரானாலும் ஸரி, அது இன்னது என்று அறிந்துகொள்ளு முன்னமே தந்துவிட்டேன்" என்று, அவனுடன் கை குலுக்கிவிட்டுப் பிரயாணமாயினான்.

அவன் தலை மறைந்தவுடனே, லாக்ஸிலி கறுப்பு வீரன் கையைப் பிடித்துக்கொண்டு, "மகாதீரா! உம்முடைய வல்லமையினாலன்றோ இப்பெருங்காரியம் நிறை



வேறிற்று? நீர் என்னையும் இம்மகாவிருக்ஷத்தையும் என்றும் மறவாதிருக்க இப்பொருளில் உமக்கிஷ்டமான ஒன்றை எடுத்துக்கொள்ளும்" என்றான். அதற்கு வீரன், "அப்படியே; இந்த டீப்ரேஸியை எனக்குக் கொடும்: அவனை நான் என்னிஷ்டப்படி செலவு செய்யவேண்டும்" என்றான். லாக்ஸிலி, "ஆ! அவர் உம்முடையவரே! என்னுடைய அனுமதி எதற்கு?" என்றான். உடனே கறுப்புவீரன், "டீப்ரேஸி! இனி நீ ஸ்வேச்சையாகப் போகலாம். நட. உன்னை எவன் சிறைபிடித்தானோ அவன் கழிந்த விஷயங்களுக்காகப் பழிவாங்குங் குணமுடையவனல்லன் ஆனால் ஜாக்ரதை. என்ன சொல்லுகிறேன் தெரியுமா? ஜாக்ரதை" என்றான். அவன் தலைகுனிந்த வண்ணமாகப் புறப்பட்டுப் போய்விட்டான்.

லாக்ஸிலி அவன் தலை மறைந்தவுடனே, கறுப்பு வீரனை நோக்கி, "உத்தமரே! உம்முடைய சிநேகம் எனக்கு என்றும் நிலைத்திருக்கும்படி இந்தக் கொம்பைப் பெற்றுக் கொள்ளும். எப்பொழுதாவது ஆபத்துக் காலத்தில் இக்காட்டிற்குள் இதை ஊதினீரானால், யானும் என் ஆட்களும் உடனே வந்து உதவுவோம். எங்கே, சற்று ஊதும் பார்ப்போம்" என்றான். வீரன் மகிழ்ச்சியுடன் அதைப் பெற்றுக்கொண்டு ஊத, அதைக் கேட்ட லாக்ஸிலி தன் ஆட்களைக் கூப்பிட்டு, "கேட்டீர்களா, இத்தொனியை, இதைக்கேட்ட எவனும் அதே க்ஷணத்தில் ஒலி கேட்டவிடத்திற்கு ஓடி, இவர்க்கு உதவ வேண்டும். எவன் அப்படிச் செய்யத் தவறுவானோ அவனை நான் லகுவில் விடமாட்டேன்" என்றான். அதைக்கேட்ட அக்

ள்வரெல்லோரும், “எஜமானன் நீடூழிவாழ்க! எஜமானன் கட்டளையையாம் அவமதியாதிருப்போமாக! கறுப்பு வீரருக்கு யாங்கள் சீக்கிரத்தில் உதவி செய்யும்படி கடவுள் அனுக்ரகிப்பாராக!” என்று கோஷித்தார்கள். கோஷிக்கவே,

‘ஆரிடைப் புகுதுநாமென்று அமரர்கள் கமலத்தோன்றன்
பேருடை அண்டகோளம் பிளந்ததென்று எங்கிகைத்தார்
பாரிடை உற்றதென்னும் பகர்வதென் பாரைத்தாங்கி
வேரிடைக் கிடந்தநாகம் இடிஎன வெருவிற்றன்றே.’

பிறகு லாக்ஸிலி குவித்து வைத்திருந்த திரவியத்தைத் தன் ஆட்களுக்குப் பங்கிட ஆரம்பிக்கையில் முதலில் அதில் பத்திலொரு பாகம் கோவிலுக்கும், மற்றொரு கூறு சேஷமதனத்திற்கும், வேறொன்று ஸந்ததியற்று இறந்தவர்களுடைய உத்தரக்கிரியைகளுக்குச் செலவிடுவதற்கும் பிரத்தியேகப் படுத்திவைத்தான். பிறகு மிகுந்ததை அவரவர்களுடைய அந்தஸ்துக்குத் தக்கபடி பிரித்துக் கொடுத்தான். இவ்வாறு பங்கிட்டுக்கொண்டு வரும்பொழுது, சந்நியாசியைக் காணாமல், அவன் எங்கே என்று கேட்க, ஒருவருக்கும் தெரியவில்லை. லாக்ஸிலி வருத்தமுற்று, “ஒருவேளை அவர் பிராண்டிபோவின் மாளிகையில் தீயில் மாண்டாரோ, என்னவோ!” என்று துக்கிக்க, கறுப்புவீரன், “ஹா! அவர் எனக்கு ஓரிரவு நல்ல உணவு அளித்தாரே! அவர் இப்போது எங்கே போயினர்? அவரைத் தேடுங்கள். சும்மா இராதீர். சீக்கிரம் போங்கள்” என்று துரிதப்படுத்தினான்.

இந்த வார்த்தை சொல்லி முடிந்ததும், “நகருங்



கள், நகருங்கள்” என்று அதட்டிக்கொண்டும், ஒருகையில் ஐஸாக்கு யூதனைப் பிடித்துக்கொண்டும், மற்றொரு கையில் தம்முடைய அருமைத்தடியை ஓங்கிக்கொண்டும் அச்சந்நியாசியே வந்து தோன்றினான். அவனைக் கண்ட லாக்ஸிலி, “என்ன ஐயா! சந்நியாசியாரே! இரவு முழுமையும் எங்கே இருந்தீர்?” என, அவன், “அதை ஏன் கேட்கிறாய்? நான் பிராண்டிபோவின் மாளிகையில் எங்கேயாயினும் நல்ல சாராயம் கிடைக்குமா வென்று பார்த்துக்கொண்டு வருகையில், இந்த யூதனைக் கண்டேன். இவன் கண்ணுக்கு மாம்ஸ பிண்டமாகத் தோற்றினும், உண்மையில் ஸ்வர்ண விக்ரகமன்றோ? இவனை வைத்துக் கொண்டு எவ்வளவோ ஸம்பாதித்து விடலாமே!” என்றான். உடனே கறுப்புவீரன், “பிராண்டிபோவின் ஆட்களில் யாராயினும் ‘கைதி’யாக்கப்பட்டிருக்கிறார்களோ?” என்று கேட்க, லாக்ஸிலி, “இல்லை, இனி அவன் ஆட்களைப் பிடிப்பதால் என்ன பயன்? ஒரு சந்நியாசிமட்டும் அகப்பட்டிருக்கிறார். அவர் பெயர் ‘ஐமேர்.’ அவர்மிகவும் தனிகர்; மிகவும் விட புருஷர்” என்றான். இவ்வாறு சொல்லிக்கொண்டிருக்கும்பொழுதே, இரண்டு திருடர்கள் அந்த ஐமேர் ஸந்யாஸியைப் பிடித்துவந்து, தம் தலைவர் முன்னே நிறுத்தினர்.

# அத்தியாயம் 2

வந்துநின்ற ஐமோர்முகமோ சொல்லவேண்டியதில்லை. அவமானமும் பயமும் உடையவனாய் அங்குள்ளார் எல்லாரையும் பார்த்து, "ஐயன்மீர்! நீவிர் யாவிர்? துருக்கரா, கிறிஸ்தவரா? உம்மைப் பார்த்தால் கிறிஸ்தவர் போலிருக்கிறதே! இல்லை என்று துருக்கராக இருந்தால்தான் என்ன! இவ்வாறு ஒரு துறவியை ஹிம்ஸிப்பது தர்மமா? அன்றியும் என் பொருளையும் என் சரிகை உடைகளையும் இவ்வாறு சேதஞ்செய்யலாமா? என்னைத் தவிர வேறொருவரைமட்டும் இவ்வாறு நீங்கள் செய்திருந்தால், அப்பொழுதே உங்களை அவர் ஜாதி ப்ரஷ்டம் செய்திருப்பாரே. என் மனஸு சற்று இளகினதாகையால், இன்று நீங்கள் பிழைத்தீர்கள். இப்பொழுதே என் குதிரைகளையும் மற்ற சொத்துக்களையும் திருப்பிக்கொடுத்து, 'ஜோர்வால்' மடத்துப் பூஜைக்காக நூறு பொன் அபராதமும் செலுத்தி, அடுத்த 'பெண்டிகாஸ்டு' விருந்து வரையில் மான் மாம்ஸமும் உண்ணுவதில்லை என்று விரதமும் கொண்டீராகில் உங்களை மன்னிப்பேன்" என்று கபமும் பயமுமாகச் சொன்னான். அதற்குக் கள்வர்தலைவன் கபடமாக, "பூஜ்யரே! அடியேனுடைய மனிதர்களா தங்களை மரியாதைக்குறைவாக நடத்தினார்கள்? யார் அவ்வாறு செய்தது? அதைக்கேட்க எனக்கு வெகு விசனமாக இருக்கிறதே!" எனலும், சந்நியாசி சற்றுத் தேறிச் சலிகையுடன், "ஆ! மரியாதைக்குறைவு மட்



டுமா! அதையேன் கேட்கிறாய்? அவர்களிடத்தில் நான் பட்டபாடு ஒரு நாய் பட்டிருக்குமா? ஒரு கிறிஸ்தவனை! அதிலும் ஒரு துறவியை! அதிலும் ஜோர்வால் மடத்துத் துறவியை, துறவியிலும் மதிச்ரேஷ்டரை! இவ்வாறு செய்கிறதென்றால், நான் என்ன சொல்லுகிறது! அது மட்டுமா! எவனோ ஒரு பாணனும், அவன் என்னை அடிப்பேனென்று கூட பயமுறுத்தினானே. இன்னும் ஒன்று கேள்! நான் கைதியாம்! விடுதலைப்பணமாக நூறு பொன் கொடுத்தால்தான் என்னை அவன் விடுவானாம். இல்லாவிட்டால், என்னை அவன் இந்த மரத்தில் தலை கீழாகக் கட்டித்தொங்கவிட்டு விடுவானாம்! நான் எதைச்சொல்லுகிறது!" என்று வெகு ஆத்திரத்துடன் சொல்ல, பின்னும் லாக்ஸிலி கபடமாகவே, "ஹா! நம் பாணன் அல்லானா? அவரா தங்களை அப்படிச் சொன்னது! அது உண்மைதானா?" எனலும், சந்நியாசி, "என்ன! நான் தான் சொல்லுகிறேனே! என் எதிரேதான் அவன் அவ்வாறு சொன்னான். வெறுமையாகவா சொன்னான்? 'இந்த க்ஷணத்தில் அத்தொகையை நீ கீழே வைக்காவிட்டால், உடனே உன்னைத் தலைகீழாகக் கட்டித் தொங்க விடுவேன்' என்று ஆயிரம் தேவதையின்மேல் ஆணையிட்டு மன்றோ சொன்னான்!" என்றான். அதற்கு மேல் லாக்ஸிலி இனி இடங்கொடுக்கக் கூடாதென்று, "ஆ! அப்படியா! அப்பாணனார் இன்னுமவர் சொன்னபடி செய்யவில்லையோ! சுவாமி! நீங்கள் அவர் கேட்டதைக் கொடுத்து விடுங்கள். ஏனெனில், அல்லான் என்பவர் தாம் ஒருவாறு வாக்குத்தத்தம் செய்து விட்

டான், பிறகு ஒருகாலும் தவறுவதே இல்லை" என்றான். சந்நியாசி திடுக்கிட்டு, "இது என்னடா இவ்வாறு பேசுகிறானே!" என்று யோசித்து, மனத்தைத் தைரியஞ் செய்துகொண்டு சமத்காரமாக, "ஹூரா! ஹூரா! ஹூரா! நல்லது நல்லது! எனக்கும் பரிஹாஸமென்றால் திருப்தி தான். ஆயினும் சிறிதுநேரம் வேடிக்கை பண்ணினால், சிறிதுநேரம் வினையாக இருக்கவேண்டுமல்லவா?" என, கள்வன், "நான் வேடிக்கையாகப் பேசவில்லை. நீர் அவர் சொன்னபடி கொடுத்தாகவேண்டும். இல்லாவிடில், உம்முடைய மடத்தில் உமது ஸ்தானத்திற்கு வேறு ஒருவர் எழுந்தருள வேண்டியதுதான்" என்றான். பின்னும் சந்நியாசி இன்னுமொரு தரம் பார்ப்போமென்று, "நீர் கிறிஸ்தவர்களா? ஒரு சந்நியாசியைப் பார்த்து இப்படியும் பேசுவாருண்டா?" என்று கோபக்குறியோடுசொல்ல, கள்வன், "நீர் ஸந்நியாஸியா? உம்மைப் போல ருத்திராக்ஷப்பூனை இல்லவே இல்லையே!" என்றான்.

அப்பொழுது பக்கத்தில் நின்றுகொண்டிருந்த ஒரு கள்வன், "வீணான பேச்சு எதற்கு? ஐஸாக்கு யூதன் சந்நியாசியின் விடுதலைப் பணத்தைத் தீர்மானிக்கட்டும், சந்நியாசி யூதனுடையதைத் தீர்மானிப்பார்" என்றான். கள்வன், "அதுவே சரி" என்று சொல்லி, "ஓ! யூதா! முன்னேவா! இந்தச் சந்நியாசியைப் பார். அவருக்கு எவ்வளவு தொகை கொடுக்க நிர்வாஹமுண்டு? சொல்" என்றான். அவன் முன்வந்து, "ஓ! இந்தச் சந்நியாசியா? இவர் கொழுத்த பணக்காரன்றோ! இவர் அறுநூறு பொன் கொடுக்கலாமே!" என்றான். கள்வன்,



"ஸரி! அப்படியே, ஐயோ! அறுநூறு பொன்" என, அவன், "ஆ! உங்களுக்கு ஏதோ பைத்தியம்போலிருக்கிறது. என் மடத்து ஸொத்தை எல்லாம் விற்றாலும் அதில் பாதியும் சேகரமாகாதே!" என, ஐஸாக்கு கள்வனைத் தன் வசமாக்கிக்கொள்ளலாமென்று, ரகசியமாக, "ஐயா! கள்வர் தலைவரே! அந்த ஸந்நியாஸி சொத்து எவ்வளவு இருந்தாலும் ஸரி, அவர்மட்டும் எனக்கு அந்த மடத்து ஸொத்தின்மேல் ஒரு பந்தகப்பத்திரம் எழுதிக் கொடுத்துவிட்டும், நான் எங்கிருந்தாவது அந்தப் பணத்தைத் தந்துவிடுகிறேன்" என்றான். கள்வன், "அது ஸரி" என்று, சந்நியாசியை நோக்கி, "இவ்யூதனுக்கு எவ்வளவு விதிக்கலாம்?" என்றவுடன், அவன், "ஆயிரம் பொன் தாராளமாகவிதிக்கலாமே!" என்றான். அதைக்கேட்ட ஐஸாக்கு, "ஐயோ! நான் ஸொத்தையெல்லாம் பறிகொடுத்து விட்டு அவஸ்தைப்படுகிறேனே! இன்னும் என்னை ஏழையாக்கி, பிக்ஷுகனாய் விட்டுவிடுவீர் போலிருக்கிறதே! 'பட்டகாலிலே படும் கெட்டகுடியே கெடும்' என்னும் பழமொழிக்கு இலக்காக நான் என் அருமை மகளையும்பறி கொடுத்து அவஸ்தைப்படுகிறேனே!" என்று, தன் மகளை நினைத்துக்கொண்டு, "ஆ! ரெபெகா! உன்னை என்று காண்பேன்! ஓ! தெய்வமே! என்னைப் பலவிதத்திலுஞ் சக்கியில் நிறுத்துகிறாயே!" என்று புலம்பலுற்றான்.

இதைக் கேட்டவுடன் அங்கிருந்த ஒரு கள்வன், "ஓ! யூதா! உன் மகள் இரண்டு குழலுடையாள் தானே? அவள் ஒரு ஜரிகைப்புடவையை உடுத்துக்கொண்டிருக்கவில்லை? அழகிய சுந்தரியல்லவா அவள்?" என்று கேட்

டான். ஐஸாக்கு அதைக் கேட்டு, நடுக்கடலில் திசை தப்பி மயங்கும் மாலுமிக்கு ஒரு துறைமுகந் தோற்றினாற் போல மிகவும் மகிழ்ந்து, "ஆம் அப்பா! உன்னைக் கடவுள் ரக்ஷிப்பார். எங்கே அப்பா அவள்?" என்று ஆவலுடன் கேட்க, அவன், "ஓ! அவள்தான் அந்தக் கில்பர்ட்டு தூக்கிக்கொண்டு போன பெண். நான் ஒரு பாணம் விடலாமென்று வில்லை வளைத்தேன். எங்கே அவளையுங் கொன்றுவிடுவேனோ என்று நினைத்துப் பாணப்பிரயோகஞ் செய்யாதுவிட்டேன்" என்றான். ஐஸாக்குக்கு வந்த துக்கத்திற்கு அளவே இல்லை! "ஐயோ! நீ அவளை அந்தப்பாணத்தால் கொன்றிருக்கக்கூடாதா? கில்பர்ட்டுப் பாவிக்குப் பெண்டாயிருப்பதிலும் அவள் இறந்துவிடுவது நலமாயிற்றே! அது எனக்கு நிரம்பவும் திருப்திகரமாயிருக்குமே! ஐயோ! மானக்காரனே என் குலத்துக்கு அணி! இந்தக் காலத்தில் என்னைக் காப்பார் ஆர்? ஓ! ரெபெகா! கண்மணி! அப்பாதகன் கையில் அகப்பட்டு எவ்வாறு தவித்தாயோ! எவ்வாறு அழுதாயோ! என்ன நினைத்தாயோ! எவ்வாறு கதறினையோ! தெய்வத்தைப் பிரார்த்தித்தாயோ! என்னை நினைத்தாயோ! உன் கையில் ஆயுதமொன்றும் அகப்படவில்லையோ! அகப்பட்டிருந்தால் உடனே நீ உயிரை மாய்த்துக்கொண்டிருப்பாயே! என்ன செய்வேன்! என்ன செய்வேன்!" என்று கதறிக் கதறிப் பூமியில் விழுந்து புரண்டு புரண்டு, அழுது அழுது, மூர்ச்சித்துப் போய்விட்டான்.

இதைக் கண்டு எல்லாரும் மனமுருகி, கண்களில் நீர் பெருக நின்றனர். லாக்ஸ்லி ஐஸாக்கைக்



களைத் தெளிவித்து, அவனுக்கு ஆறுதலாக, "நீ ஆயிரம் பொன் கொடுக்கவேண்டியதில்லை. ஐந்நூறு கொடுத்தாற் போதும். பாக்கிப் பணத்தைக் கில்பர்ட்டுக்குக் கொடுத்து, உன் மகளை விடுவித்துக்கொள்ளு. அவன் அடுத்தாற்போலிருக்கிற [illegible]காயில் மடத்திலேதான் இருப்பான். அவனிடத்தில் பணத்துக்குக் கசக்கிக்கொண்டிராதே! சீக்கிரம் புறப்படு" என்றான். லாக்ஸ்லி இவ்வாறு சொன்னதும், அவனுடைய ஆட்கள் எல்லாருக்கும் திருப்தியாய்விட்டது. அப்பொழுது யூதன் கள்வன் காலில் விழுந்து, "புண்ணியவானே! நீர்தாம் என்னை ரக்ஷிக்கவேண்டும்" என்று பிரார்த்திக்க, அவன் ஐமேரை, "ஓ! சந்நியாசியாரே! உமக்கு ஐஸாக்கு நூறு பவுன் கொடுப்பான். ரெபெகாவை விட்டு விடும்படி நீர் கில்பர்ட்டுக்கு ஒரு சிபார்சுக் கடிதம் எழுதிக்கொடும். உமது சிபார்சினால் ஐஸாக்கு தன் மகளை மீட்பானானால், உமது மடத்துக்கு அப்பணம் தானே வந்துசேரும்" என்றான்.

சந்நியாசி சம்மதித்து கில்பர்ட்டுக்கு ஒருசிபார்சுக் கடிதமும் ஐஸாக்குக்கு ஒரு பந்தகப்பத்திரமும் எழுதிக் கொடுத்தான். இஃதெல்லாம் ஆனவுடன், கள்வன் ஐமேரின் குதிரையைக் கொண்டுவரச்சொல்ல, அது வந்தவுடன் அவனுக்கு யார்க்கு வரையில் பிரயாணம் போகச் செலவுக்குப் பணமும் கொடுத்துப் போய்வாரும் என்றனுப்பினான். அவன், "என்ன ஐயா! என் சங்கிலி, மோதிரம் முதலியவைகளை எடுத்துக்கொண்டு விட்டீரே!" என, அவன், "ஓ! ஓ! துறவிக்குத் தங்கச் சங்கிலி வேறே! மோதிரம் வேறே! சுதா! மெய்மெல் எல்லாம்

கேட்பீர்போலிருக்கிறதே? போம்போம்" என்று அதட்டி அனுப்பிவிட்டான். பிறகு ஐஸாக்கு தன்னுடைய கூட்டாளியான ஸேவா என்பவனுக்கு அறுநூறு பொன்னும் பின்னுஞ் சில துணிமணி ஸாமானும் லாக்ஸ்லிக்கு அனுப்பும்படி கடிதம் எழுதிக் கொடுத்துவிட்டு, கில்பர்ட்டைத் தேடிக்கொண்டு புறப்பட்டான்.

இவை எல்லாம் [illegible]ர்த்திருந்த கறுப்புவீரன் லாக்ஸ்லியின் வீரம், சௌரியம், கருணை, புத்திக்கூர்மை முதலிய எல்லாவற்றையும் கண்டு, மகிழ்ச்சியுடன், "கள்வர் பெருமானே! நீர் செய்யுந் தொழில் கேவலம் திருட்டுத் தொழிலாயினும், உம்மிடத்தில் பேரறச் செயல்களைக் காண்கிறேன். நீர் ஓரரசனாக இருக்கவேண்டும். உம்மை ஒத்த ஒரு புருஷரை நான் பார்த்ததே இல்லை" என்று புகழ, அவன், "சிரசிங்கமே! என்ன பாபஞ் செய்தோ இந்தக்கதியை அடைந்திருக்கிறேனே! இது போதாதா? எம்மில் சிலர் 'ஐயோ! இத்தொழில் செய்யும்படி ஈசுவரன் விதித்துவிட்டானே' என்று துக்கிக்கிறவர்களுமுண்டு" என்றான், அதற்கு வீரன், "ஆனால் அப்படி நினைப்பவர்களுள் நீரும் ஒருவர்தாம்போலும்?" என்றான். உடனே லாக்ஸ்லி, "வீர! நாமிருவரும் நமது பிரவாங்களை மறைத்துக்கொண்டு இருக்கிறோம். நான் உம்முடைய விருத்தாந்தத்தை அறிய முயலாததுபோல நீரும் என்னுடையதை விசாரிக்க வேண்டாம்" என்றான். வீரனுக்கு முகஞ்சுண்டிப்போயிற்று. தான் சொன்னது பிசகென்று அறிந்துகொண்டு, "ஐயா! என்னை மன்னிக்கவேண்டும். நீர் சொல்வது உண்மையே! மற்றொரு ஸமயம் நாம்



சந்திக்கும்பொழுது இருவரிடத்திலும் ஒளிமறைவே இராது என்று நம்புகிறேன். இப்பொழுது எனக்குச் செலவு கொடும், நான் போய்வருகிறேன்" என்று வீரன் கள்வனை அணைத்துக்கொண்டு, "அகிருத்தியஞ் செய்யக் கூடிய நிலையிலிருக்கிற திருடன் அதைச் செய்யாது தவிர்தலோடு ஸத்க்ருத்தியமும் செய்வானானால், அவனை மகா புருஷனென்றன்றோ சொல்லவேண்டும்! அவ்வாறான ஒருவனுடைய நட்பை நான் பெற்ற பாக்யமே பாக்யம்! நான் கிருதார்த்தனானேன்" என்று மகிழ்ச்சியுடன் சொல்லிவிட்டு, ஒரு குதிரையில் ஏறிக்கொண்டு போய்விட்டான்.

## அத்தியாயம் 3

ஆஷ்பியிலே போலிச்சண்டை முடிந்தபிறகு அங்கிருந்து புறப்பட்டுப்போன ஜான்யார்க்கில் தன்னுடைய அரண்மனையில் வீரர்கள், தலைவர்கள், பிரபுக்கள் என்ற எல்லாரையும் வருவித்து, ஒரு பெரிய விருந்திட்டான். இதைச் செய்வதால் அவர்களுடைய துணைவலியைத் தான் பெற்றுத் தன் தமையன் ரிச்சேர்டின் சிங்காதனத்தைப் பறித்துக்கொள்ளலாமென்று நினைத்தான். இந்த அரசனுடைய மந்திரி வால்டிமரோ மகாதந்திரி. அவன் விருந்துக்கு வந்தவெல்லாரையும் உற்சாகப்படுத்தி, அவருக்குப் பெரிய வெகுமதி யளிப்பதாகவும் சொல்லி, ரிச்சேர்டு திரும்பிவந்து சேர்ந்தால் அவன் கட்சியில் சிலரே இருப்பாரென்றும் அவர்களை யடக்க அடித்துவிடுதல் எளிதென்றும் துணிவு புகட்டியிருந்தான். அந்த விருந்துக்குப் பிராண்டிபோ, டீப்ரேஸி, கில்பர்ட்டு இவர்கள் வாராமையால், பெரிய யுத்தத்தில் அஞ்சா நெஞ்சராய் எதிரிகளைத் தாக்கும் அம்மூவருமில்லாமல், பயிரங்கமாகத் தான்கொண்ட எண்ணத்தை வெளியிட அஞ்சினான். போதாக்குறைக்கு ஜானுக்கும் பணமுமகப்படவில்லை. பணமில்லாது ஒரு காரியமும் நடவாதாகையால், முன்னும் போகமாட்டாமலும் பின்னும் போகமாட்டாமலும் தவித்தான்.

இவ்வாறிருக்க, பிராண்டிபோவின் மாளிகை எரிந்து சாம்பலாய்ப் போயிற்றென்றும், டீப்ரேஸி, கில்பர்ட்டு,



பிராண்டிபோ முதலியவர்கள் சிறைபிடிக்கப்பட்டார்களென்றும் பராபரியான ஒரு வதந்தி அவன் காதில் எட்டியது. இதைக்கேள்வியுற்றதும், அவன் ஜானுக்கு அதை அறிவித்து, என்னசெய்யலாம் என்று மயங்க, ஜானும் வருத்தமுற்று, "நீதான் யோசனைசொல்? எனக்குப் புதிதாகவொன்றும் செய்யத் தோன்றவில்லை. நான் செய்திருப்பதைக் காட்டிலும் இந்த சமயத்தில் அதிகஞ்செய்ய முடியாது" என்றான். இச்சொல் அவன் வாயினின்றும் வந்ததும், அவிழ்ந்த உடையோடும், சரிந்த குழலோடும் இரைக்க இரைக்க வந்து டீப்ரேஸியே எதிரில் நின்றான். அவனைக் கண்ட, ஜான் மிக்க ஆவலோடும் வியப்போடும், "டீப்ரேஸி! இது என்ன? கில்பர்ட்டு எங்கே? பிராண்டிபோ எங்கே?" என்று கேட்க, அவன், "கில்பர்ட்டு ஓடிவிட்டான். பிராண்டிபோ சாம்பலாய் விட்டான். நான் மாத்திரம் தப்பி, செய்தி சொல்ல வந்தேன்" என்றான். வால்டிமர், "இது ஒன்றும் பிரமாதமில்லையே!" என, அவன், "நான் இன்னும் பிரமாதத்தை வெளிப்படுத்தவில்லையே!" என்று சொல்லி, ஜான் கிட்டப்போய், "ரிச்சேர்டு இப்பொழுது இங்கிலாந்தில்தான் இருக்கிறான். நான் அவனை நேரில் கண்டு பேசினேன்" என்றான். இதைக்கேட்டவுடனே ஜான் நடுநடுங்கிப்போய், முகம் வெளுத்து, கண் கலங்கி, உடல் வெயர்த்து, நிற்கச் சக்தியற்று, பக்கத்திலிருந்த ஓர் ஆஸனத்திலே ஹ்ருதயத்தில் அம்புருவியவன் போலத் தடுமாறிச் சாய்ந்தான். வால்டிமர், "டீப்ரேஸி! நீ பிதற்றுகிறாய்! அது ஒருநாளுமிராது" என, அவன், "நான்தான்

அவன் கையிலகப்பட்டுக் கைதியா யிருந்தேனே! பேசவும் பேசினேனே!" என்றான். வால்டிமர், "ஆனால் அவன் ஒரு பெரும் படையைச் சேர்த்துவைத்திருக்கிறானோ?" என, டிப்ரேஸி, "இல்லை திருடர் சிலரே அவனைச் சூழ்ந்திருக்கிறார்கள். அவர்களுக்கும் அவன் இன்னானெனத் தெரியாது. அவன் வரும் வழியில் பிரான்டிபோவின் மாளிகையை முற்றுகைபோட எத்தனித்த அக்கள்வருடன் தானும் சேர்ந்துகொண்டதாகத் தெரிகிறது" என்றான். அதற்கு வால்டிமர், "ஆ! அது ரிச்சேர்டினது வழக்கந்தான். உண்மையான வீரன் அவன் தான். தன்னுடைய தோள்வலி ஒன்றையே நம்பி மூர்க்கமான யுத்தங்களில் தலையிட்டுத் திரிந்த முற்காலத்திய ஸர் கே, ஸர் லான்ஸ்லட் முதலிய வீரர்களைப் போலத் திரிவான். அவன் இராச்சியத்தின் நிலையோ தத்தளித்துத் தடுமாறிக் கலங்கும்; அவன் பிராணனுக்கும் ஆபத்து வரும். அவன் ஒன்றையும் கவனிப்பதில்லை. எல்லாம் ஜயமுள்ள வரையில் பயமில்லை. ஸரி! இப்பொழுது என்ன யோசனை சொல்லுகின்றாய், டிப்ரேஸி?" என்று கேட்க, அவன், "யார்? நானா? நிரம்ப நன்றாயிருக்கிறது! நான் ரிச்சேர்டை நோக்கி, 'உனக்கு உதவி செய்யட்டுமா?' என்று கேட்டேன். அவன் வேண்டாமென்று மறுத்துவிட்டான். நான் இப்பொழுது என் ஆட்களை அழைத்துக்கொண்டு கப்பலேறித் தேசாந்திரம் போக நிச்சயஞ் செய்துவிட்டேன். நீயும் என்னுடன் புறப்படு, அன்று தலையில் எழுதிய ஈசன் இன்று அழித்து வேறு எழுதப்போவதில்லை. 'கருப்



பைக்குள் முட்டைக்கும் கல்லினுள் தேரைக்கும், விருப்புற்று அமுதளிக்கும்' அப்பெருமான் நம்மைக் கைவிட்டுவிடுவானா? உன்னுடைய ராஜதந்திரங்களை எல்லாம் மூட்டை கட்டிவை. வா, புறப்படு" என்றான். அவன், "ஐயோ! எனக்கு விருத்தாப்பியம் வந்துவிட்டதே! எனக்குக் கால்கட்டு ஒரு மகளு மிருக்கிறாளே!" என்று கூற, அவன், "அவளை எனக்குக் கொடுத்துவிடு, நான் அவளைத் தக்கபடி வைத்து ரக்ஷிக்கிறேன். என்னுடைய ஆயுதங்களைக்கொண்டு நான் பிழைக்க முடியும்" என்றான். அதற்கு வால்டிமர், "அதுகூடாது. அவளை நான் மடத்தில் அபயமாக விட்டுவிட்டுப் போகிறேன்" என்றான்.

இவ்விருவரும் பேசிக்கொண்டிருப்பதைக் கேட்டிருந்த ஜான், "ஓ! வித்துவான்களே! கன்னியஸ்தர்களே! வீரர்களே! வெண்ணெய் திரண்டுவருஞ் சமயத்தில் தாழியை உடைத்துவிடுவது போல ஒரே அடியில் ஜயம் கைகூடுவதாயிருக்க, இப்பொழுது ஓடுகிறீர்களே!" என்றான். அதற்கு டிப்ரேஸி, "இறக்கும்போது பிளக்கும் வாயைச் சிரித்தல் என்று நினைத்தல் போல எல்லாம் தட்டுக்கெட்டுத் தடுமாறும் ஸமயத்தில் ஏதோ பிதற்றுகிறீரே! இப்பொழுதே புறப்பட்டுப் பிரான்சுக்கு ஓடிப்போய் உமது தாயாரிடத்தில் சரணம் புகுவீர். அப்பொழுதுதான் உமது உயிர் தப்பும்" என்றான். அதற்கு ஜான், "என்னைப்பற்றி எனக்கு ஒரு பயமுமில்லை. ஜயம் கைவசமாகும் பொழுது வீணாக அஞ்சுவது தீங்குவிளைக்கும். நமக்குத் திகிலை விளைப்பவன் ஒன்றியாகப் பிரயாணம் செய்கிறான். அவனை எதிர்ப்

பது சுலபம்" என்றான். உடனே டிப்ரேஸி, "நான் அதற்கு உடன்படமாட்டேன். நான் அவன் கையில் அகப்பட்டிருக்கையில் அவன் எனக்குப் பிராணதானம்பண்ணியிருக்கிறான். அவனைத் தொடமாட்டேன்?" என்றான். அதற்கு வால்டிமர், "டிப்ரேஸி! உனக்கு என்ன இப்படிப் பைத்தியம் பிடித்தது?, சம்பளங் கொடுத்து எதற்காக உன்னை வைத்திருக்கிறது? சத்துரு வந்து நெருக்குஞ் ஸமயத்தில் தத்துவம் பேசவா?" என்று தூஷிக்க, அவன், "அதுதான் நான் சொல்லுகிறேனே அவன் எனக்குப் பிராணதானஞ் செய்ததுமன்றி, நான் உதவி செய்கிறேன் என்றபொழுதும் வேண்டியதில்லை என்று மறுத்துவிட்டான். அதனால் அவனுக்கு நான் தீங்கு புரிவதால் ஸத்தியந் தவறினவனாகமாட்டேனென்றாலும், நன்றி கொல்வது பெரும் பாதகமாதலால், அவன் தலைமயிரில் ஒன்றைக்கூட சேதஞ்செய்ய நான் உடன்படமாட்டேன்" என்றான். அதற்கு வால்டிமர், "நீ ஒன்றும் செய்யவேண்டாமே! உன் சேனாதிபதியுடன் நாற்பது வீரரை அனுப்பப்படாதா?" என, அவன், "அடா! உன்னிடத்தில் எத்தனையோ கொலைபாதகர்கள் இருக்கிறார்களே! என் மனுஷ்யர்கள் எதற்கு? அவர்களில் ஒருவரும் அந்த வேலைசெய்யமாட்டான்" என்றான். உடனே ஜான், "டிப்ரேஸி! நீ இப்படித்தான் பிடிவாதஞ் செய்வாயோ? நீ இப்படித்தான் என்னைக் கைவிடுவாயோ?" என்றான். அவன், "நான் ஒன்றும் கைவிடவில்லையே! ஒரு வீரனுக்கு யோக்கியமான எதையும் நான் செய்யத் தயார். இப்படி வழிபறிக்குந் துரோகம் ஒருநாளும் செய்ய



மாட்டேன்" என்றான். உடனே ஜான், "வால்டிமர்! ஒன்றுகேள், நான் மகா துர்ப்பாக்கியன்! என் தகப்பனார் ஹென்றி (Henry)யின் சேவகர்கள் எஜமான விச்வாஸமுள்ளவர்களாய், எஜமானன் விஷயத்தில் பிராணனையும் விடத் துணிந்தார்கள். அவர் 'இந்தச் சந்நியாசி உபத்திரவம் பொறுக்கப்படவில்லையே!' என்றுதான் ஒரு வார்த்தை சொன்னார், உடனே தாமஸ்-எ-பெக்கெட்டின் (Thomas-A-Becket) உதிரம் பெருக்கெடுத்தோடிற்று. ஓ! யஜமான விசுவாசமுள்ள சேவகர்களே! நீங்கள் இப்பொழுது தெய்வமாகிவிட்டீர்கள்! உங்களில் ஒருவர் மகனான இந்த வால்டிமர் ஜீவித்திருந்தும், தகப்பனைப் போல யஜமான விச்வாஸமும் துணிவுமுடையவனாய் இருக்கவில்லையே!" என்று புலம்பலுற்றான். உடனே வால்டிமர், "அரசே! நீங்கள் அப்படிச் சொல்லவேண்டாம். என் ஜீவன் உள்ளளவும் யஜமானனுக்குத் துணிவுடன் உழைத்தே தீருவேன். நான் இதோ போகிறேன்" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டான்.

சிறிது நேரங் கழித்து, ஜான் தன் சேவகனைக் கூப்பிட்டு, "வால்டிமர் எங்கே?" என்றான். "அவர் நாற்பது ஆட்களுடன் ஆயுதபாணியாக எங்கேயோ புறப்பட்டுப்போகிறாரே" என்று சேவகன் சொல்லக்கேட்டு, "ஆ! வால்டிமர் நம்மிடத்தில் எப்பொழுதும் அன்புடையவன்தான்" என்று நினைத்துக்கொண்டு, அச்சேவகனிடத்தில், "டிப்ரேஸியின் காரியங்களை இரகசியமாகக் கவனித்து வந்து எனக்குச் சொல்லு" என்று கட்டளையிட்டு அனுப்பினான்.

# அத்தியாயம் 4

திருடனிடத்திலிருந்து புறப்பட்டுக் கில்பர்ட்டைத் தேடிச்சென்ற ஐசாக்கைப்பற்றி இப்பொழுது கவனிப்போம். கள்வனளித்த ஒரு நல்ல குதிரையில் ஏறிக்கொண்டு வேகமாகப் பிரயாணஞ்சென்று அவன் துக்கத்தாலும் பலஹீனத்தாலும் களைத்துப்போய், மேலே பிரயாணஞ்செய்யமாட்டாமல், கோயில்வீரர் மடத்துக்கு நான்கு மைல் தூரத்திலே இருந்த தன் நண்பன் ஒருவன் வீட்டில் தங்கினான். உடனே அவனுக்கு ஜுரம் வந்துவிட்டது. அவன் நண்பன் ஒரு நல்ல வைத்தியனாகையால் கொஞ்சம் மருந்துகொடுத்து, அதைச் சிறிது சமனப்படுத்தினான். அதனால் அவன் சிறிது சௌக்கியப்பட்டு, மறுநாளே புறப்பட்டுக் கோயில்மடத்துக்குப் போய்ச்சேர்ந்தான்.

அந்தமடமோ துறவிகள் வசிப்பதற்கு ஏற்றதான ஒரு ஏகாந்த இடம். நாற்புறமும் புல்லுத்தரை பரந்து கோரைப்பாயை விரித்தாற்போல விளங்க, அதன் மத்தியில் ஒரு உறுதியான கோட்டையும், அதைச் சுற்றி அகழி முதலிய காப்புக்களும் இருந்தன. உள்ளேவசித்தவர்கள் பிரபல யுத்தவீரர்களானமையால், அவர்கள் அவ்வாண்மனையைப்பல காப்புக்களோடு அமைத்து, பகைவர் தாக்கற்கு உறுதியாக நிற்குமாறு செய்திருந்தார்கள்.

இவ்வாறான கோட்டைவாயிலை ஐசாக்கு அடைந்ததும், தலைவாயிலில் ஒரு சேவகனைக் கண்டு, கில்பர்ட்டோடு ஏதோ சில விஷயம் பேசவேண்டுமென்று தெரிவித்தான். அச்சேவகன் போய் அம்மடத்துப் பெரிய குருவாகிய (Grand Master) போமனூர் (Beaumanor) என்பவனிடத்தில் விண்ணப்பஞ் செய்தான். அவன், கோபமுற்று, "ஒரு மிலேச்சயூதனுடன் கில்பர்ட்டுக்கு என்ன வேலை?" என்று சொல்லி, அவ் யூதனைத் தன் முன்னே கொண்டுவந்து நிறுத்தும்படி உத்திரவுகொடுத்தான். உடனே அச்சேவகன் போய் அவ்வாறு அவனைக் கொண்டுவந்து நிறுத்த, போமனூர் யூதனைப் பார்த்து, "அடா! உனக்கு இம்மடத்தில் என்ன வேலை? உண்மையாகச் சொல், இல்லாவிடில், நாவை அறுத்து விடுவேன்" என்று பயமுறுத்தினான். யூதன் நடுநடுங்கி, "ஐயரே! நான் ஐமேர் அனுப்பிய ஒரு தூதன். அவர் கில்பர்ட்டுக்குக்கொடுத்த ஒரு கடிதத்தைக்கொணர்ந்திருக்கிறேன்" என்றான். போமனூர் அதைக்கேட்டதும் முன்னினும் அதிக்கோபமுற்றுத் தன் பக்கத்திலிருந்த தன் நண்பன் ஒருவனைப்பார்த்து, "ஆ! ஒரு சந்நியாசிக்கு வேறு ஆளகப்படவில்லையா? ஒரு யூதனைக்கொண்டு கோயில் வீரனொருவனுக்குக் கடிதம் அனுப்பும் மகாபாவியைப்பார். இப்படிப்பட்ட உருத்திராக்ஷப் பூனைகள் காட்டில் நிறைந்திருந்தால், தர்மம் எங்கே நிலைத்தோங்கும்? துருக்கரிடத்திலிருந்து புண்ணிய க்ஷேத்திரம், ஜருஸலம் எப்படிக் கைவசமாகும்? ஐயோ! இந்த மடத்தில் எதைப்பார்த்தாலும் சனியனாகத் தோன்றுகிறதே! முற்காலத்தில் கோயில் வீரரெல்லாரும் கந்தையைத்தவிர வேறு எதை உடுத்துக்கொண்டார்கள்? பொன் வெள்ளிகளை

தொடுவார்களா? ஸ்திரீகளுடன் அளவுக்குமிஞ்சி ஸம்பா
ஷிப்பார்களா? ஸுராபானம் பண்ணுவார்களா? மாமிஸத்
தைத் தின்றுமுண்பார்களா? அவர்களுடைய வைராக்கிய
மென்ன? இவர்களுடைய சபலமென்ன! எனக்கு இதை
நினைக்க நினைக்க ஏனடா அப்பா இந்த மஹா பாதகத்
தைப் பார்க்க ஈசன் தலையிலெழுதினான் என்று தோன்று
கிறது!" என்று சொல்லி யூதன் கொணர்ந்த கடி
தத்தைத் தன் நண்பனிடத்தில் கொடுத்துப் படிக்கச்
சொன்னான். அதில்:—"கோயில் வகுப்பு மகா வீரான
கனம் கில்பர்ட்டு அவர்களுக்குச் சரீராரோக்கியமும்
செல்வமும் பெருகும்படி ஆசீர்வதித்து, ஜோர்வால்
மடத்துச் சந்நியாசி ஈசன் திருவருளை முன்னிட்டு எழு
திக்கொண்டது. இப்போது நம்முடைய நிலைமையைப்பற்
றியோ என்றால், நாம் மஹா பாதகரான சில திருடர்கள்
கையில் சிக்கிக்கொள்ள, அவர்கள் அச்சமும் பக்தியுமின்றி
நம்மைச் சிறைப்படுத்தியது மன்றி, விடுதலை செய்யப்
பணமும் அபேக்ஷிக்கிறார்கள். அவர்கள்மூலமாகப் பிரான்
டிபோனின் கதியையும் கேள்வியுற்றோம். தாங்களும் அவ்
வழகிய யூதஸ்திரீயின் கண்வலையில் சிக்கி, அவளோடு
ஈசனருளால் தப்பிப்போய் விட்டதாகவும் அறிந்தோம்.
தங்களுடைய க்ஷேமத்தைக் கேட்கச் சந்தோஷப்படு
கிறோம். ஆயினும் இந்த இரண்டாம் மோகினியைப்
பற்றி நீங்கள் ஜாக்கிரதையாக இருக்கும்படி கேட்டுக்
கொள்ளுகிறோம். ஏனெனில் நார்மண்டியிலிருந்து வருகிற
உங்கள் பட்டத்துப் பேராசிரியர் கடுந்துறவியாதலால்,
நீல விழியையும், கன்னாடிக் கன்னத்தையும் லக்ஷியஞ்



செய்பவரன்றாம். அவருடைய நோக்கமெல்லாம் தங்களைத்
திருத்தித் தங்கள் குதூகலத்தைக் குறைப்பதுதானும்.
இது நமக்கு ரகஸ்யமாகத் தெரிந்த விஷயம். ஆகையால்
எப்பொழுதும் ஜாக்கிரதையாக இருக்கும்படி வேண்டு
கிறோம். வருகிற புது நண்பன் தன்மகளை விடுவிக்
கும்படி கேட்டுக்கொள்ளுகிறான். அவன் கொடுக்கும் விடு
தலைப்பணத்தால் இவளைப்போல ஐம்பது கன்னிகை
களைப் பெற்று அச்சமில்லாமல் அநுபவிக்கலாம். அவன்
நம்மை ஒரு 'சிப்பாயிக் கடிதம்' கேட்டதனால், இது
எழுதலானோம். இப்பொழுது அச்சுந்தரியை விட்டு
விடுவதே நலம். மறுபடி நாம் சந்திக்கும்போது புதிது
புதிதான இன்பங்களை அநுபவித்து மகிழலாம். அந்த
நாள் வரையில் உம்முடைய க்ஷேமத்தைப் பிரார்த்தித்துக்
கொண்டிருப்போம். உம்முடைய தங்கச் சங்கிலி அத்
திருடன் கழுத்தில் தொங்கிக்கொண்டிருக்கின்றது.

இங்ஙனம், தங்கள் அருமை நண்பர்,

ஐமேர்"

என்று எழுதியிருந்தது.

இதைப்படித்தவுடன் பேராசிரியன் ஐஸாக்கை
நோக்கி, "உன் மகள் கில்பர்ட்டின் கையில் சிறைப்பட்
டிருக்கிறாளா?"

யூதன்—"ஆம்! விடுதலைக்கு எவ்வளவு பணம்
விதிக்கிறீர்களோ—"

பேராசிரியன்—"சும்மா இரு. உன்னுடைய மகளு
க்கு வைத்தியம் தெரியுமா?"

யூதன்—"ஆம்"

போரிசிரியன்—"யாரிடத்தில் அவள் அதைக் கற்றுக் கொண்டாள்?"

யூதன்—"மிரியாம் (Miriam) என்ற ஒரு கிழவியினிடம்."

போரிசிரியன்—"உன் மகள் எந்த மருந்தைக் கொண்டு சொஸ்தப்படுத்துகிறாள்?"

யூதன்—"ஐயா! அது அபூர்வத் தைலமொன்று. அதன் முறை ஒருவருக்கும் தெரியாது. என் மகள் மட்டும் அதைக் கற்றுக்கொண்டாள்."

போரிசிரியன் கடுங் கோபமுற்று—"அடா யூதப் பயலே! உன் மகள் மந்திரவாதி மிரியாம் என்றவள் சிஷ்யைதானே. அவள்செய்த அக்கிரமத்தால் அவளைச் சிதையில் கட்டி, எரித்துவிட்டார்களன்றோ! அவள் சிஷ்யை உன் மகளும் அதேகதியை அடையட்டும். இனி உன்மகள் எப்படி என்வீரர்களைச் சூனியம் வைத்துக் கெடுப்பாள் பார்ப்போம். அடா! சேவகா இவனை மயிரைப்பிடித்து இழுத்துக்கொண்டுபோய் தலைவாயிலுக்கு அப்புறம் தள்ளு. திரும்பிப் பார்த்தானோ, ஒரே வெட்டாக வெட்டி விடு."

உடனே ஐஸாக்கு வெளியே தள்ளப்பட்டு, அடக் கொணாத் துயரத்துடன் ஓடினான்.

## அத்தியாயம் 5

கோயில் படைத்தலைமை உத்தியோகஸ்தன் ஆல்பர்ட் மல்வாய்ஸின் (Albert Malvoisin) என்பவன் நமது கில்பர்ட்டுக்கு ஆப்த நண்பன். கோயில் வீரர் எல்லாரையும்போல இவனும் பெருந் துன்மார்க்கன். ஆயினும் இவனுக்கும் கில்பர்ட்டிக்கும் சிறிது வித்தியாசமுண்டு. கில்பர்ட் 'எந்தப்பயல் என்னைக்கேட்கலாம்?' என்று மனம்போனபடியெல்லாம் துன்மார்க்கஞ்செய்வான். இவனோ அப்படியல்லன், சற்று மறைந்துப்பால்குடிப்பவன். ஆளைக்கண்டால் வேஷம் போடுவதற்கு இவனை விட்டால் வேறு ஒருவரும் இல்லை. அச்சமயத்தில் இவன் பேசும் தத்துவமும், உபதேசிக்கும் ஞானமும், எல்லாரையும் மயங்கச்செய்யும். இந்தப் பூனையும் இந்தப்பாலைக் குடிக்குமோவென்று அவர்கள் நினைக்கும்படி இருக்கும். இவன் போடும் வேஷம் முற்காலத்திய ஆஷாட பூதியின் வேஷத்தினும் மேலானது.

இவனது படைத்தியாளாருடைய போக்கியதையோ சொல்லவேண்டியதில்லை; மத்தியபானமும், துன்மார்க்கமுமே அவர்களுடைய தொழில். கில்லாலிப்பாட்டும் இல்லாத கூத்துமே அவர்களுடைய பொழுதுபோக்கு. இவ்வாறான வேஷதாரிகளும் பரம அயோக்கியர்களுமான வீரர்களைக் கண்டித்தடக்கும் பொருட்டே பிரான்ஸியிருந்து போமனுர் மடாதிபதியாக அனுப்பப்பட்டான். இவனோ கிழவன். தாக்ஷணியமே பாராட்டாதவன்,

அவன் வந்தவுடனே மடத்திலெல்லாம் ஊழலாக இருக்கக் கண்டு, தலைமை உத்தியோகஸ்தனான மல்வாய்ஸினைக் கண்டிக்க, அவன் தனது கவனக்குறைவினால் அவைநேரிட்டனவென்றும், அவைகளைச் சீக்கிரத்தில் சீர்திருத்தி விடுவதாகவும் சொன்னான். சொன்னவன் அவ்வாறே கெட்டிக்காரத்தனமாக ஒரு நொடிப்பொழுதுக்குள் அம்மடத்தைச் சுத்த வைதீக ஆச்ரமம் போல ஆக்கிவிட்டான். அதனால் புதிதாக வந்த அப்போசிரியனுக்கு அவ்வுத்தியோகஸ்தனிடம் முதன்முதல் உண்டான கெட்ட அபிப்பிராயம் விலகிவிட்டது. ஆனால் யூதன் கொணர்ந்த ஐமேர், கடிதத்தைப் படித்தவுடன், அவனுக்கு வந்த வெறுப்புக்கும், கோபத்துக்கும் அளவே இல்லை. அதனால் அவன் மல்வாய்ஸினை வருவித்து, "என்ன! படிக்கிறது திருவாசகம் இடிக்கிறது சிவன் கோயிலாய் இருக்கிறதே! இந்த மடம் யூதஸ்திரீயோடு வியபசரிக்கத்தான் ஏற்பட்டதோ? உங்களுடைய ஆசாரம் நன்றாயிருக்கிறது! தாஸீகமனம் ஸந்யாஸிகளுக்குச் சிரேஷ்டந்தான்! நீங்கள் என்ன செய்வீர்கள்? உங்களை இவ்வாறு கண்டபடியெல்லாம் செய்ய விட்டவர்மேலன்றோ குற்றம்?" என்றான்.

மல்வாய்ஸின் திடுக்கிட்டு நடுநடுங்கிப் புலியை எதிரே கண்ட ஆடுபோல மெய்சோர்ந்து நிற்க, அவன், "உம்முடைய சலிகை இல்லாதுபோனால், கில்பர்ட்டு அவ்ரெபெகாவை இங்குக் கொணர்ந்திருப்பானா? நீதான் அவர்களை ஆதரிக்கிறாய் என்று எண்ணுகிறேன்?" என்றான். அவன் தன் எஜமானனுக்கு வணங்கி, "பூஜ்யரே! அடியேனுடைய விண்ணப்பத்தைக் கேட்டருளவேண்டும். அடியேன் பேதையாதலால் ஒன்று செய்யப்போக, அது விபரீதமாக முடிந்தது. கில்பர்ட்டு அவளுடைய வலையிற் சிக்கிக்கெட்டுப் போகாமலிருக்கட்டும் என்று அவர்களை இவ்விடத்தில் வைத்துப் பிரிக்கப்பார்த்தேன். அடிகளுடைய உத்திரவு எப்படியோ அப்படியே செய்ய சித்தமாயிருக்கிறேன்" என்றான். போமனோர், "உனக்கு அவ்யூதஸ்திரீ சூனியகாரி என்று தெரியாதா?" என்றுகேட்க, அவன், "அடிகளே! இப்பொழுதுதான் உண்மை விளங்கிற்று. அவள் மாந்திரிகக்காரியாக இராவிட்டால், நம்முடைய திடவைராக்கியமுள்ள கில்பர்ட்டை இவ்வாறு மயக்க முடியாது. நல்லவேளையாக அவர்களைப் பிரித்துவிட்டேன்" என்றான். போமனோர், "ஆனால் இதுவரையில் அவ்விருவருக்கும் தொடர்புண்டாகவில்லையா?" என்று கேட்க, அவன், "ஆ! இவ்வாச்சிரமத்திலா! தொடப்படுமா?" என்று, (நிலத்தைத் தொட்டுக்காதில் வைத்துக்கொண்டு, 'சிவ சிவ' என்று சொன்ன ருத்திராக்ஷப் பூனையைப் போல்) கையைக் குறுக்கே சிலுவைபோல் வைத்துக்கொண்டு சாதித்தான். போமனோர் அவனை நம்பி, "ஆனால், கொலுமண்டபம் அமைத்து, எல்லாரையும் வருவி. அவளைச் சூனியகாரியாவென்று விசாரித்து, சிதையிற்கட்டி எரித்துவிடுவோம். போ, சீக்கிரம்" என்றான்.

மல்வாய்ஸின் உடனே புறப்பட்டு உள்ளேசென்றதும் இதைக் கில்பர்ட்டுக்குச் சொல்லவேண்டுமென்று, அவனைத் தேடிச் சென்றான். சிறிது செல்வதற்குள்ளேயே, கில்பர்ட்டே அவனைக்கண்டு, "அடா, நான் எப்பொழுதி

அவளைக் கண்டபோதெல்லாம் அவள், என்னை அவமதித்து இகழ்கிறாளே அன்றி ஒருபோதும் பிரியத்துடன் அங்கீகரிக்கிறதில்லையடா! அக்ரமம்! அந்த நன்றி கெட்டவள்! உயிரைக்கொடுத்துத் தீயினின்றும் திருடர்களினின்றும் காத்த என்னை இகழ்ந்து வெறுக்கிறாளே! வாஸ்தவமாகச் சொல்லுகிறேன், மல்வாய்ஸின்! என் தலைக்கு மேலே கூரை உத்திரங்களெல்லாம் எரிந்து விழுகிற சமயத்தில் காத்திருந்து, அவளை எடுத்து வந்தேன். ஆயிரம் அம்புகள் என்மேல் பிரயோகிக்கப்பட்டன. எல்லாம் என் கவசத்தின் மேல 'டப்டப்' என்று பனிமழையில் ஆலங்கட்டி விழுவது போல விழுந்து சிதறிப்போயின. நான் என் கேடகத்தை வைத்துக்கொண்டு, வெகு ஜாக்கிரதையுடன் அவள் மேல் காற்றுக்கூட அடிக்கப்படாதென்று காத்துவந்தேன். அவற்றையெல்லாம் சொன்னால், அவள் என்ன சொல்லுகிறாள் தெரியுமா? 'சொழியன்குடுமி சும்மா ஆடுமோ?' என்று சொல்லுகிறாள். அது மட்டுமா? நான் அவளை அந்த மாளிகையினின்றும் தூக்கி வந்து காத்தேனே, அதுவே பிசகாம்! நான்பண்ணினதும் உபகாரமன்றாம்! நான் ஏன் அதைச் சொல்லுகிறது? அவள் சொல்லுவதைப் பார்த்தாயானால், உனக்கு அவளிடத்தில் ஜன்மத்துவேஷம் உண்டாய்விடும். எனக்குமட்டும் அவளிடத்தில் விழுந்த ஆசை மாறவில்லையென்கிறது. இன்றைக்குப்போகட்டும், இனி என்றைக்காயினும் ஒரு சமயம் அவள் 'கில்பர்ட்டு நமக்காக மிகவும் பிரயாசைப்பட்டான்' என்று நினைப்பளோ என்றால், அதுவுமில்லை. அந்த ஜாதிக்கு நன்றியென்பதே



கிடையாது. பிடிவாதமெல்லாம் சேர்ந்து திரண்டு மோகினி உருவெடுத்து ரெபெகாவாக அவதரித்திருக்கிறது. ஒரு சமயம் நினைக்கிறேன். அதற்குப் பேய்தான் பிடித்திருக்குமோ?" என்றான்.

மல்வாய்ஸின், "பேய்தானே! அது உங்களிருவருக்குந்தான் பிடித்திருக்கிறது! அடபோடா, உனக்கு எத்தனை தரஞ் சொன்னாலும் தெரிகிறதில்லை. உன்னை யாரடா எல்லாவற்றையும் விட்டுவிட்டு வைராக்கியமாயிருக்க வேண்டுமென்றார்? சற்று இலைமறை காயாக இருக்கட்டுமென்றால், அம்பலத்தில் பொதி அவிழ்க்கிறாயே! உன் உதடு அசைந்ததும் 'டம்' என்று ஓடிவரும் எத்தனை கிறிஸ்தவச்சிகள் உண்டு? அது உனக்குத் தெரியாதா? அவர்களெல்லாரும் 'இத்தனை பெரியவருக்கு எப்படி மாட்டோமென்கிறது?' என்று இணங்கமாட்டார்களா? வேண்டுமென்று பிடிவாதம் பண்ணுகிற ஒருயூதமகள் மேலேயா உனக்கு மோகம் விழவேண்டும்! இதை யோசித்துப் பார்த்தால், போமனோர் சொல்லுகிறதோ அது, உண்மையாகத்தானிருக்குமென்று நானும் எண்ணுகிறேன்" என்றான்.

உடனே கில்பர்ட்டு, "சீ! அந்தமட்டமான பேச்சை சொல்லாதே! போமனோரா, வேமனோரா! அவன் தலையில் இடிவிழ! அதுபோகட்டும். அவனுக்கு என்னவா ரெபேகா இங்கிருக்கிற செய்தி தெரிந்தது? நீ ஏன் அதை வெளிப்படும்படி செய்தாய்?" என்றான்.

மல்வாய்ஸின், "நான் என்ன செய்வேன்? என்னால் கூடியமட்டும் பிரயத்தனம் செய்து, எவ்வளவோ ரகஸ்ய

மாகத்தான் அவனை வைத்திருந்தேன். அது எப்படியோ வெளிப்பட்டுவிட்டதே! என்ன செய்கிறது? ஆனாலும் ஒன்றுண்டு. ஸாமர்த்தியமாக உன்மேலும் என்மேலும் பழுதில்லாமல் செய்துவிட்டேன். ரெபெகா சூனியக்காரி யென்றும், அவள் உன்னை மயக்கிக் கெடுத்துவிட்டாளென் றும் அவன் நினைக்கும்படி செய்துவிட்டேன். அவன் அவளை விசாரித்து, சூனியக்காரியென்று குற்றம் சாட்டி, சிதையில் வைத்து உயிருடன் கொளுத்திவிடத் தீர்மானித்து விட்டான்" என்றான்.

இல்பர்ட்டு, "ஆ! அப்படியா! ஐயோ! என் ரெபெகா வையா? அவளைக் கொளுத்துகிறான்? இதென்ன அநியாயம்!" என்றான்.

மல்வாய்ஸின், "யமன்வாய் உயிர் தப்புமா? போமனோர் செய்யவேண்டுமென்று தீர்மானித்துவிட்டால், அதை முடிக்காமல் பின்வாங்குவாரோ?" என்றான்.

இல்பர்ட்டு, "அப்பா நண்பா! உனக்குக் கோடி புண்ணியமுண்டு! அவள் தப்பியோடிவிட்டால், நீ சற்று கண் சாய்ப்பாயிருந்துவிடு. அவளை நான் பத்திரமான ஓரிடத் தில் இரகசியமாகக் கொண்டுபோய் வைத்துவிடுகிறேன். அப்பா! சற்று இந்த உபகாரம் பண்ணு!" என்றான்.

மல்வாய்ஸின், "இல்பர்ட்டு! உனக்கு ஏன் இப்படிப் புத்தி போய்விட்டது? நீ யோசிக்கிறபடி செய்தால், எவ் வாறு முடியும் தெரியுமா? உன்னுடைய அந்தஸ்து எல் லாம் போய்விடாதா? இப்பொழுது உன் பதவியை நினைத் துப்பார். இந்தக் கிழப்பயலுக்குப் பிறகு அடுத்த பட்டம் யாருக்குக் கிடைக்கும்? உன்னைத்தவிர வேறு யாராயினும்



பிருக்கிறார்களா? கிழவன் எண்ணம் என்ன தெரியுமா? உன்னைக்கண்டு அவன் பொறாமைப்படுகிறான் என்பது நீ அறியாததா? தனக்குப்பின் நீயே பட்டத்துக்கு வருவா யென்று நினைத்து உன்னை அவன் எப்படியாவது கெடுத்து விடவேண்டுமென்று எண்ணியிருக்கிறான். வெறுவாய் மெல்லுகிற அவனுக்கு நீ அவலுங்கொண்டுபோய்க் கொடுக்கிறாயே! எங்கள் முகத்தில் கரியை வழித்துத் தீற்றுகிறாயே! அவன் அற்பத்தைக்கூடப் பிரமாதமாக்கத் தயாராக இருக்கிறானே! நீ என்னடா வென்றால் சிங்கத் தின் வாயினுள் தலையைக் கொண்டுபோய்க் கொடுக்கிறாய்! சற்றுப் பொறுத்திருக்கப்படாதா? ஆயிற்று, அவனைக் காடுவாவா வென்கிறது, வீடு போ போ வென்கிறது. அவன் செத்த மறுநாளே நீ வந்து பட்டாதிபதி என்று உட் கார்ந்துவிட்டால், எந்தப் பயல்வந்து உன்னைக் கேட்கலாம்? அப்பொழுது உன்னிஷ்டப்படி யெல்லாம் நடத்துகிறது தானே! யூதச்சி, கிறிஸ்தவச்சி, துருக்கச்சி, ஜைனச்சி, பௌத்தச்சி, எல்லாரையும் அழைத்து வைத்துக்கொள்ளு; எனக்கு ஸம்மதம்" என்றான். இல்பர்ட்டு சற்று யோசித்து அவ்வறையில் குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டு, "ஆம்! ஆம்! நீ சொல்லுகிறதும் உண்மை தான். ஆயினும் இவளைக் காக்கவேண்டுமே!" என்று சொல்ல, மல்வாய்ஸின் அதைக் காதில் ஏற்றுக்கொள்ளா மல், போமனோர் கொடுத்த உத்திரவைச் செய்து முடிக்கப் போய்விட்டான். போனவன் சும்மா இருப்பனோ? ரெபெகா வைச் சூனியக்காரிதான் என்று சாதிக்கும்படி பல பொய் ஸாக்ஷிகளைத் தயார்செய்துவிட்டு எப்பொழுது ஸபை

யில் எல்லோரும் வந்து உட்காருவார்களென்று காத்திருந்தான்.

அன்று ஸத்தியாகாலம் இருபத்தைந்து நாழிகைக்குப் போடமனார் வந்து சபையில் அக்கிராஸனம் வகித்தான். அவனைச் சுற்றி அவன் பரிவாரங்கள் சூழ்ந்து தாழ்ந்த ஆசனத்தில் உட்கார்ந்தன. உடனே மல்வாயனின் மடாதிபதியின் உத்திரவைப் பெற்றுக்கொண்டு ரெபேகாவைச் சபைக்குக் கொண்டுவரப் போனான்.

அவளிருந்த அறைக்குள் நுழைந்து, அவளை நோக்கி, "ஓ! யூதகன்னியே! எழுந்திரு, என்னுடன் வா."

அவள், "ஓ! என்னை எங்கே கூப்பிடுகிறீர்?"

அவன், "அடி! அதைப்பற்றி உனக்கென்ன கேள்வி? நீ சொன்னதைக் கேட்க வேண்டியவள்தானே! ஆயினும் தெரிந்துகொள். உன்னை எங்கள் மடாதிபதியின் முன் நியாய விசாரணைக்குக் கொண்டுபோகிறேன்."

அவள், "நல்லது, இதோ வந்துவிட்டேன்! நீதியோ, அநீதியோ, நியாயசபை என்று கேட்டதுமே எனக்கு மனங்குளிர்ந்துவிட்டது" என்று புறப்பட்டாள்.

சற்றிட இடமில்லாது ஜனம் நெருங்கிய அச்சபை சேர்ந்ததும், அவள் கையில் ஒரு துண்டுக் கடிதம் யாரோ செருகினார். அவளுக்கு அது யாரால் கொடுக்கப்பட்டது என்று தெரியவில்லை. ஆயினும் அதைக் கையில் வைத்துக்கொண்டே சபை மத்தியில் பிரவேசித்தாள்.

## அத்தியாயம் 6

அக்கிராஸனாதிபதியாக வீற்றிருந்த போடமனார் ரெபேகாளை ஒரு ஆஸனத்தில் இருக்கப்பணித்து அவள் உட்கார்ந்ததும், அச்சபையோரை நோக்கிப் பின்வருமாறு பிரசங்கிக்கலானான்:—"யதிகாள்! வீர ஸைபாளிகாள்! ஜனங்காள்! நீவிர் அனைவிரும் இங்குக் கூடிய கருமம் அறிகின்றீரன்றோ? நாயினுங்கடையளாய யூதக் குடியிற் றோன்றிய ஒரு சண்டாள மாது மாயமும் மந்திரமும் பல பயின்று, நம்முடைய மடத்துச் சத்தவீரரும், நன்மார்க்க பாஷண்டகரை வதைப்பவரும், நமக்குப் பின் நம் ஸ்தானத்தைப் பெறத் தகுநரும், இணையற்ற யோக்கியருமாகிய கனம் கில்பர்ட்டை மயக்கித் தன்னை அவர் நீங்கின்று காக்குமாறு தூண்டிப் பின்னும் கோவிலில் நாய் நுழைவது போன்று நம்முடைய மடத்தினும் வந்து புகுந்திருக்கின்றனள். அன்னள் யாரோ என்னின் இங்கு நம் எதிரே இருக்கும் இவளென்றறிமின். 'இறக்கின்ற முற்பகற் செய்யிற் றமக்கின்னாப் பிற்பகற் றாமே வரும்' என்பவாகலின், இவ்வரிவை நமது குழாத்துத் தலையாயினோர் ஒருவரைக் கெடுத்தாண்ட பாவன்ற காரணத்தான், இன்று நம்முன் இரீஇயுற்று விசாரிக்கப் படுதற்குரியளாயினள். நாம் நங்குழுவினருக்குற்ற உக் கேட்டினைத்தும் தீர்க்கற்பாலேமாதலின், நன்மோ தெரிவை தனிழைத்த கேட்டினுக்கு உரை பகர்வதற்குரியள்."

ப்பிரஸங்கத்தைக் கேட்ட ஜனங்களெல்லாரும்

வாய்பேசாமல் ஸ்தம்பித்து நின்று, மேலே யாது நடக்குமோவென்று ஆவலோடு காத்துக்கொண்டிருந்தனர். ஸபை அப்பொழுது நிச்சப்தமாகவிருந்தது. ஒவ்வொருவருக்கும் மார்பு அடித்துக்கொண்டது. ஒவ்வொருவருக்கும் ரெபெகாவின்மீது இரக்கமுண்டாயிற்று. சிலர் அவளைப் புகழ்ந்தார்கள். சிலர் அவள்மீது மோகித்தார்கள். சிலர் போமனரை வைதார்கள், சிலர் மல்வாய்ஸினை வெறுத்தார்கள். இப்படி சபையோர்கலங்கி நிற்க, போமனர் மறுபடியும், "இவளுடைய வரலாற்றை அறிந்தோர் யாரேனுமுளரோ?" என்று கேட்க, மல்வாய்ஸினால் முன்னமே பொய்சான்று சொல்லத் திட்டஞ்செய்யப்பட்டிருந்த மகாபாதகர் இருவர் முன்வந்து, போமனர் முன் வணங்கக் கைகட்டி, வாய் புதைத்து நின்றனர். அவன், "உமக்கு இவளைப்பற்றி என்ன தெரியும்?" என்று கேட்க, அவர்கள் ரெபெகா பிரான்டிபோவின் மாளிகையில் நிலைத்தாள் என்றும், அவள் கோட்டைமதிளின் மேலே பறந்து ஏறி, அதைச் சுற்றிச் சுற்றி வந்தாளென்றும், கில்பர்ட்டை வசப்படுத்தி, அவன் தன்னைத் தூக்கி போகும்படி செய்தாளென்றும், கள்வர்களால் எய்யப்பட்ட அம்புகள் தன்மேல் விழாவண்ணம் மாயமந்திரம் செய்தாள் என்றும், அக்கோட்டையிலுள் இருந்த ஒரு காயம்பட்ட வீரனை மருந்து போடாமலே மந்திரத்தால் எழுந்து உலாவச் செய்தாளென்றும், மற்றும் இவைபோல்வன பல செய்தாளென்றும் கூறினர். போமனர் எல்லாம் கேட்டு, "வெட்டுக்காயத்தைக்கூட மந்திரத்தால் சொஸ்தப்படுத்தினது மிகவும் அதிசயம்! இவள் சாமானிய மாது



அல்லள்" என்றான். அப்பொழுது அக்கூட்டத்திலிருந்த ஒரு குடியானவன் முன்னே வந்து, "ஐயா! மடாதிபதியே! அம்மாது மந்திரவாதியல்லள். அவர்கள் சொல்வதனைத்தும் சூத்திரமே! இதோ பாரும், என் காலை இது முற்றிலும் முடக்கி, கூடாமலிருந்தது. அவள் அதைச் சேர்த்துக்கட்டி, ஒரு தைலம் போட்டுச் சொஸ்தப்படுத்தினளே தவிர, மந்திரம் ஒன்றும் உபயோகிக்கவில்லை. நீங்களே பாருங்கள்" என்று தன்னுடைய காலைக் காட்டினான். அதில் கொஞ்சம் ரணமும் இருந்தது. ஆயினும், போமனர் அவளைக் கொளுத்திவிடத் தீர்மானித்து விட்டதால், 'அன்பற்ற மாமிக்குக் குப்பிடும் குற்றமே' என்ற பழமொழிப்படி குடியானவன் என்ன பரிந்து பேசியும் கேளாமல், அவன் அவனை அகட்டி வெளியில் பிடித்துத்தள்ளும்படி உத்தரவு செய்துவிட்டு ரெபெகாவின்மீது அதிக வெறுப்புடன் மேல்விசாரணைக்கு ஆரம்பித்தான். குடியானவன் அழுதுகொண்டு வெளியிற் போய், மறுபடியும் திரும்பிக் கூட்டத்துள் நுழைந்து, அங்கேயே ஓரிடத்தில் நின்றுகொண்டிருந்தான்.

பிறகு மடாதிபதி ரெபெகாவை நோக்கி, "யூத மங்கை! உன்மேல் இவர்கள் எல்லாரும் சுமத்திய குற்றத்தைக் கேட்டாயன்றோ? அதற்கு என்ன உத்தரவாதம் சொல்லுகிறாய்?" என்றான். அவள், "ஐயா! நான் அநாதை. அதிலும் பேதையான ஒரு ஸ்திரீ; என் விஷயத்தில் சற்றுத் தயையாக இருக்கவேண்டுமென்று வேண்டிக்கொண்டால், நீங்கள் கேட்கப் போகிறீர்களா? அல்லது நான்தான் வேண்டப்போகிறேனா? இரண்டு

யில்லை. வியாதிஸ்தர்களைச் சொஸ்தப்படுத்தும் விஷயத்தில் கிறிஸ்தவர், யூதர் என்ற வேற்றுமை பாராது, இரு வகுப்பினரையும் ஒரே நிகராகப் பாவித்து வருவது கடவுளுக்கு உவப்பானதாயிற்றே என்றால், உம்காதில் ஏறுமா? அல்லது, இவர்கள் என்மீது இல்லாதவற்றையெல்லாம் சொல்லுகிறார்கள், அவர்கள் சொல்வதனைத்தும் பொய்யென்று சொன்னால், நான் சொல்வது உங்களுக்குப் பிரமாணமாகத் தோன்றுமா? தோன்றாதன்றோ? அதோ நிற்கிறானே கில்பர்ட், அவனைக் கேட்கிறேன். "ஓ! வீரா! இவர்கள் சொல்வதனைத்தும் கேட்டுக்கொண்டு நிற்கிறாயே! உண்மை உனக்குத் தெரியுமே! சொல்" என்றாள்.

இதைக்கேட்ட எல்லாரும் ஆச்சரியமுற்று, அவ்யூதமகளின் கம்பீரத்தையும் அவள் வாக்கின் சாதுரியத்தையும் மெச்சிப் புகழ்ந்தார்கள். சபையில் முணுமுணுப்புச் சத்தம் அடங்கச் சிறிதுநேரம்பிடித்தது. அதுவரையில் கில்பர்ட் ரெபெகாவின் கேள்விக்கு மறுமொழி கூறவில்லை. அவள் அவன் விடை தருவானென்று சிறிது நேரம் காத்திருந்தாள். அவனோ வாய்திறந்தும் பேச நாவெழாதவன்போலக் காணப்பட்டான். உடனே ரெபெகா கோபமுற்று, "ஓ! கில்பர்ட்! நீ புருஷன்தானே! கிறிஸ்தவன்தானே! வீரன்தானே! நீ உடுத்திய வீர சந்நியாசி உடையின் மேலும், உன் மதத்தின் மேலும், உன் குலத்தின் மேலும், உன் தாயின் மேலும், உன் மூதாதையர் மேலும், ஆணையிட்டுக் கேட்கிறேன்! சொல்லு" என்றாள்.

ரெபெகா இவ்வளவு சொல்லியும் அவன் மனத்



தெளிந்தானில்லை. அவன் முகத்தில் வெறி ஜோதி தோன்றிக் கூத்தாடிற்று. பேசலாம் என்று நினைக்கிறான்! ஏதோ ஒன்று நினைத்துக்கொண்டு, குனிந்துகொண்டு விடுகிறான்! ஆகாசத்தைப் பார்க்கிறான்! அசட்டுத்தனமாக விழிக்கிறான்! இப்படிப்பலதடவை அலைவுண்டப்பட்டுவிட்டுக் கடைசியாக, "அந்தத் துண்டுச்சீட்டு! அந்தத் துண்டுச்சீட்டு!" என்று கூவிவிட்டு அப்புறம் திரும்பிக்கொண்டான்.

அவன் கூறிய சொற்களுக்குப் பொருள் அங்குள்ளார் ஒருவர்க்கும் தெரியவில்லை. எல்லாரும் கில்பர்ட்டுக்கு ஏதோ பயமாகப் பிடித்திருக்கிறதென்றே நினைத்தார்கள். ஆனால் ரெபெகாமட்டும் தனக்கு முன் கிடைத்த அத்துண்டு முறியை எடுத்துப் பார்த்தாள். அதில், "உனக்கு ஏற்றுக்கொண்டு போர்புரிவோனைக் கேள்" என்றிருந்தது. போமனார், "ஓ! ரெபெகா நீ ஏவின பைசாசம் கில்பர்ட்டைவிட்டு இன்னும் நீங்கிற்றில்லை! அவனால் உனக்கு என்ன நயம் உண்டாகும்?"

ரெபெகா, "பதியாரே! இவர்கள் சொன்னவை யனைத்தும் நான் பொய் யென்கிறேன். அதை யுத்தத்தினால் ஸ்தாபிப்பேன். எனக்காக ஏற்றுக்கொண்டு போர்புரியும் வீரன் ஒருவனை நான் அனுப்பலாமா? உத்திரவாகவேண்டும்."

உடனே போமனார் "ஆ! யூதமகளே! ஒரு சூனியக்காரிக்கு யார் ஏற்றுக்கொண்டு வருவார்? அதிலும் யூதருக்கு உபகாரம் செய்யும்மனிதரும் உண்டோ?"

ரெபெகா, "கடவுளில்லையா? அவருக்கு எந்தக்காரியம் அரிது? 'அறம் வெல்லும் பாவம் தோற்கும்' என்று அவர் ஸங்கற்பித்திருக்கவில்லையா! அவர் என்விஷயத்தில் ஒருவனை அனுப்பக் கடமைப்பட்டவரல்லரோ? இந்த இங்கிலாந்தில்—பாரபக்ஷமற்றவர் நிறைந்த இந்த இங்கிலாந்தில்—எத்தனையோ பேர் கீர்த்தி ஒன்றுக்கு ஸாஹஸகாரியங்களைச் செய்யத் தயாராக இருப்பார்களே! ஒரு தர்மத்தைக் காக்க யுத்தஞ்செய்ய அவர் பின் வாங்குவாரா? எப்படி ஆனாலும் ஆகட்டும். எனக்கு ஏற்றுக்கொண்டு சண்டையிடுவானை நான் வருவிக்க விரும்புகிறேன்."

போமனோர், "ஆனால் நீ குற்றத்தை ஒப்புக்கொள்ளவில்லையா? பெண்ணே! நான் சொல்வதைக் கேள்! உன் மதத்தை விட்டு விட்டு, எங்கள் உயர்ந்த மதத்தைத் தழுவிக்கொள். உன்னை நான் மன்னித்து விடுகிறேன். நீ ஏதேனும் ஒரு மடத்தில் துறவு பூண்டு, கடவுளைத் தியானித்துக்கொண்டு, செய்த பாபங்களுக்குப் பிராயச்சித்தத்தை நாடு. இவ்வளவு இளமையில் நீ சாவது எனக்குக்கூட மனவருத்தமாக இருக்கிறது.

ரெபெகா, "ஐய! உங்கள் முன்னோர் தழுவிய மதத்தை நீங்கள் அனுசரிக்கிறதுபோல, நானும் என் மூதாதையர் மதத்தைத் தழுவி நிற்கிறேன். அற்பமான புலையனும் விரும்பாத இப்புன்புலால் யாக்கையை நிலை என மருண்டிருக்கும் அவிவேகிகளுக்கன்றோ சரீர அபிமானம்விடாது! எனக்கு இச்சரீரம் கர்மவசத்தால் வந்ததென்றும், நாம் உடுத்த உடை பழைமையானதும் கழித்தெறிந்து விடுவதுபோல், ஆன்மா இவ்வுடல் முதுமையுற்ற



தும், இதைக்கழித்து, வேறு சரீரங்களைப் பெற்றுக் கொள்ளுகிறது. அவையுமழிந்தவுடன், வேறு சரீரங்களைப் பெறுகின்றது. ஆதலால், உயிர்க்கும் உடலுக்கும் சம்பந்தமில்லை. இது உண்மை. நீர் இச்சரீரத்தைத் தானே தண்டிக்கலாம்? இச்சீவனையும் தண்டிக்கலாமோ? ஜீவனை எல்லாந் தண்டிக்க ஒருவன் உளன். அவன் எங்கும் நிறைந்தவன். எல்லாம் வல்லவன். பரிபூரணன்! ஸர்வஜ்ஞன். அவன் என்னுடைய நியாயத்தைக் கேட்கட்டும். இப்பொழுது என்னுடைய வழக்கு சண்டையால் நிரூபணிக்கப்படட்டும். இதை ஏற்றுக்கொள்ளும்!" என்று தன் கையுறையைக் கழற்றி எறிந்தாள்.

# அத்தியாயம் 7

மகா கடின சித்தமுடைய போமனூர்கூட இவளுடைய கம்பீரமான வார்த்தைகளாலும், முகக்குறியினாலும் மனம்பதறி ஒரு நாழிகைநேரம் சும்மாயிருந்துவிட்டான். அவன் பால்யமுதல் கன்னெஞ்சனாக இருந்தவனல்லன். ஏதோ காலவசத்தினால் சந்யாசம் பூண்டு, அவ்வாச்சிரமத்தில் அடிக்கடி விரதம் அனுஷ்டித்தலாலும் காயக்லேசம் செய்வதாலும் கொடுமை அதிகரித்தவனாய், தயை சாந்தி முதலிய குணங்களையிழந்துவிட்டான். மேலும் இணையற்ற ரணசூரனானபடியால் தன் கீழிருந்த பரம துஷ்டர்களான வீரஸங்யாஸிகளை அடக்கி ஆண்டு அவர்களோடு முரட்டுத்தனமாகப் பழகினமையால், மிகவும் கொடியனாகவும், நெஞ்சத்தில் ஈரமில்லாதவனாகவும் ஆய்விட்டான். எப்பொழுதும் ஒருவனுடைய குணம் அவன் வியாபாரம் செய்யும் விஷயத்தைப் பொறுத்தது அன்றோ?

இது நிற்க, போமனூர் தன் மனத்தில் தோன்றிய இரக்கத்திற்கு யாது காரணமோவென்று பலமுறையும் யோசித்துப் பார்த்தான். ஒன்றும் தோன்றாமையால், "ஐயோ! இவ்விளங்கிளியைக் கழுத்தைத் திருகவேண்டியிருக்கிறதே! மதனின் உருவத்திற்றான் வசியப்பொடி மறைந்திருக்கிறதே! என் செய்வேன்! அவ்விழியின் காந்திக்கு எதை ஒப்பிடுவேன்!" என்று தன் உளத்திலுள் எண்ணி எண்ணி நொந்து, அவளைப் பார்த்து,



"மங்காய்! உன்னிடத்தில் எனக்குண்டாகும் இரக்கமானது உன்னுடைய மாயாசக்தியினால் பிறந்ததென்றால், உன்னைப் பெருங்குற்றவாளியென்றே சொல்லவேண்டும். ஆயினும் நான் உன்னை அகாரணமாகக் கொல்லத்தலைப்படவில்லை. நான் சொல்வதைக் கேள். இனி நீ மதத்தை அநுஸரி. ஒரு மடத்தில் போயிருந்துகொண்டு, கடவுளைத் தியானித்து வா. உனக்கு நன்மையுண்டு" என்றான். அவள், "பெரியவரே! எத்தனை தாம் சொன்னாலும், எத்தனை துன்பம் செய்தாலும், வாளாலறுத்தாலும், கோலாலடித்தாலும், சிறைப்படுத்தாலும், நிலத்திற் புதைத்தாலும் என் மனம் பற்றிவைத்த ஆகமத்தை இகழ்ந்து வேறொன்றைப்பற்றேன். இனி நீர் அதைப் பற்றிப் பேசவேண்டாம். நான் குற்றவாளியல்லள். அதை நான் யுத்தத்தால் நிரூபிக்கக்காட்டுவேன்."

போமனூர் இனி ஒன்றும் பயனில்லை, என்று கண்டு, "ஓ! மல்வாய்ஸின்! அவள் கையுறையை எடு" என, அவன் அதை எடுத்துப் போமனூர் கையிற்கொடுத்தான். மடாதிபதி அவ்வுறையின் மென்மையையும், நுண்மையையும், இலேசையும் பார்த்து, "பாவாய்! உன் கையுறையையும் என்னுடைய கையுறையையும் பார், எது வலிது? இப்படியே இருக்கும், உனக்காக வந்து போராடுவோனுக்கும் வீரனுக்கும் எங்கள் வகுப்பு வீரனுக்கும் உள்ள வாசி" என்றான். அவள் "ஓ! அப்படியா! தர்மம் தலைகாக்கும் ஐயா! இப்பொழுது தராசில் என்னுடைய பட்டுக் கையுறையையும் தங்களுடைய இரும்புக் கையுறையையும் போடுங்கள். என் கையுறை தட்டே தாழும்."

அவன், "ஆனால் நீ குற்றத்தை ஒப்புக்கொள்ள மாட்டாயே?"

அவள், "நான் முன்னமே சொல்லிவிட்டேனே! கடவுள் சங்கற்பப்படி நடக்கட்டும்."

போமனோர், "சரி! அப்படியே ஆகுக; ஸகோதரர்களே! இவள் மிலேச்ச மதத்துச் சண்டாளியாயினும், பெண்ணாயும், அநாதையாயும், முகமறியாதவளாயுமிருப்பதால், நாம் அவள்விஷயத்தில் கிரமமாகவே நடக்கவேண்டும். அதுவே கடவுளுக்கு உவப்பானது. அதுவுமன்றி, நாம் புருஷரும், வீரரும், ஒழுக்கமுடையவருமாயிருத்தலால், கேவலம் ஒரு பெண்பிள்ளை அழைக்கும் சண்டைக்குப் பின்வாங்குவதும் ஆண்மையாகமாட்டாது. ஆதலால், அவளிஷ்டப்படி அவளுக்கு ஏற்றுக்கொண்டுபோர் செய்யும் ஒருவன் வரட்டும். வருகிற அவனுடன் நம்மில் யார் சண்டைக்குப் போகிறது?" என்றான்.

அங்கு ஓராஸனத்தில் இவையனைத்தையும் பார்த்துக் கொண்டிருந்த ஒரு உத்தியோகஸ்தன், "ஏன்? கில்பர்ட் இல்லையோ? அவனைவிட வேறு யார் வேண்டும்?" என்றான். உடனே மடாதிபதி, "நல்லது மல்வாய்ஸின்! அந்த மிலேச்சமகள் கையுறையைக் கில்பர்ட்டினிடம் கொடு. அவனை யுத்தத்துக்குத் தயாரிருக்கும்படி சொல்லு" என்று கூறிவிட்டு, ரெபெகாளைப் பார்த்து "மடவாய்! இன்றைக்கு மூன்றாம்நாள் மாலைக்குள் உன்னுடைய வீரனை இங்கு வருவிக்கவேண்டும். யுத்தக் கெடுத்தவறினால், நீ குற்றவாளியென்றே மதிக்கப்படுவாய்?"



அவள், "ஐயோ! அவ்வளவு சீக்கிரத்திலா?"

அவன் "நமக்கு நெடுநாள் காத்திருக்கமுடியாது"

அதற்குமேல் அவள், "சரி, அப்படியே இருக்கட்டும். ஈசன் அருட்படி நடக்கிறது. அவர்தாம் எனக்குத் துணை. ஸர்வவல்லமையுமுள்ள அக்கடவுளுக்கு ஸத்தியத்தை மெய்ப்பிக்க வேண்டுமென்னும் திருவுள்ளமிருந்தால், யுகக்கணக்கானாலும் நம்மால் ஸாதிக்க முடியாத ஒரு காரியத்தை அவர் ஓர் இமைப்பொழுதில் ஸாதித்து விடமாட்டாரா? எனக்கு அந்தவிஷயத்தில் அச்சமில்லை" என்றாள்.

போமனோர், "ஆ! நீ சொல்வது நிரம்பவும் ஸரியே! ஓ! மல்வாய்ஸின். யுத்தஞ்செய்வதற்கு இக்களத்தைச் சீர்படுத்து. இதுவே நாளைநடக்கப்போகிற போருக்கு அமைந்தகளமாக இருக்கட்டும்" என்றான்.

ரெபெகா, "ஓ! மடாதிபதி! நான் என் மனிதர்களுக்குச் சொல்லியனுப்பி, யுத்தம் செய்ய ஒருவனைத் தருவிக்கவேண்டாமா? என் ஸ்திதியை என் பிதாவுக்கு அறிவித்து, நான் சொல்லும் செய்தியைக் கொண்டுபோக ஒரு தூதன் வேண்டுமே. அவனுக்கு நான் கூலிகொடுத்து விடுகிறேன்" என்றாள்.

போமனோர், "ஓ! உன் விண்ணப்பம் நியாயமானதுதான். ஆனால், யூதப்ரஷ்டையான உனக்கு ஊழியஞ் செய்ய யார்முற்படுவார்?" என்றான்.

ரெபெகா, "ஓ! ஜனங்களே! ஓ! ஓ! தர்மிஷ்டர்களே! யாராவது ஸத்யத்தை மெய்ப்பிக்கும் பொருட்டு, பத்துப்பொன் கூலி பெற்றுக்கொண்டு, யார்க்கிலுள்ள

என் பிதாவினிடத்தில் இக்கடிதத்தைக் கொடுத்து வரக் கூடுமா?" என்று கேட்கவே, முன்னே ரெபெகாவினால் சொஸ்தம் செய்விக்கப்பெற்ற குடியானவன் தான் போவதாக ஸம்மதித்து, "அம்மா! நான் நொண்டியாயினும், மெல்லமெல்ல நகர்ந்து சென்று, உன் தகப்பனைக்கண்டு, உன் கடிதத்தைக் கொடுத்து விடுவேன். ஆயினும் கால்தாமதம் ஆய்விடுமோ வென்றுதான் அஞ்சுகிறேன்" என்றான்.

அதற்கு ரெபெகா, "அப்பா! நீ அஞ்சவேண்டாம். கடவுள் உன் காலுக்கு சண்டமாருத வேகத்தையும் தந்தருள்வார். அவர் துரும்பினாலும் மலையைத் துளைத்து விடுவரே! அவர் ஆஞ்ஞையை வஹித்துச் செல்லும் ஆமைக்கும் அசுபக்ஷியான கருடசக்தியுண்டாகுமே!" என்றாள். அந்தப்பங்கு திருப்தியடைந்து, அவள் கடிதத்தைப் பெற்றுக்கொண்டு, புறப்பட்டான்.

ரெபெகாவின் வாக்கும் பொய்த்துப் போகவில்லை. கடவுளின் கருணை அவளுக்கிருந்தமையால், அந்த முடவன் கடிதத்துடன் சிறிது தூரஞ் செல்லுமுன், ஐஸாக்கு ஒரு தோழனோடு எதிரேவரக்கண்டு, "'கும்பிடப்போன தெய்வம் குறுக்கிட்டது' என்ற பழமொழிப்படி நீ எதிர் வந்தாயே! இதோ பார்; உன் மகள் கொடுத்த கடிதம். அதில் எல்லாவிவரங்களு மிருக்கின்றன" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டான்.

அக்குடியானவன் கொடுத்த கடிதத்தைப்பிரித்து இரண்டு வரி படித்ததும், ஐஸாக்கு விஷம் தலைக்கேறியவன்போலப் 'பொத்'தென்று பூமியில்விழுந்து, "ஐயோ!



என் அருமை மகளே! என் அருமை மகளே! என்வயிற்றில் அக்கினியைச் சொரிந்தாயே! உனக்கு இந்தக் கதி வந்த பிறகும், நான் உயிருடன் இருக்கவேண்டுமா? எனக்கேன் இன்னும் காலம் குறுகவில்லை! என்ன வேளையில் ஆஷ்பிக்குப் புறப்பட்டேனோ! ஐயோ! 'பட்டகாலிலே படும் கெட்ட குடியே கெடும்' என்பது உண்மையாகவே இருக்கிறதே! ஐயோ உன் முகத்தை நோக்கி உன் தாயின் மரணத்தை மறந்திருந்தேனே! எனக்கு அந்திக் காலத்தில் நீ ஆதரவாயிருந்தாயே! கிழவயதில் எனக்கு இந்தக் கதியாவரவேண்டும்? இப்பொழுது உன் சந்திரவதனத்தை நான் எப்படிக் காண்பேன்? கடவுள் பாரபக்ஷமுடையவரல்லரென்று வேதமும் பெரியோர்களும் கூறுவதுபொய்யென்று என்னும்படி இருக்கிறதே!" என்று புலம்பியழுது, வாயிலும் வயிற்றிலும் அறைந்து கொண்டு, புரண்டு புரண்டு கதறிக்கதறிக் கடைசியில் மூர்ச்சித்துப்போய்விட்டான்.

அவன் நண்பன் ரெபெகா இறந்துபோய் விட்டாளென்றே மதித்து என்றைக்கு மரித்தாள் பார்க்கலாம் என்று ஐஸாக்கின் கையிலிருந்து கடிதத்தைப் பிடுங்கிப் பார்க்கவே, அதில், "ஓ! என்பிதாவே! உமக்கு நான் என்னுடைய அந்தியகாலத்தில் ஆயிரம் சரணமிடுகிறேன். நான் டோமளுர் மடத்தில் அடைபட்டிருக்கிறேன். என்னை அந்த மடாதிபதி சூனியக்காரி என்று நிச்சயித்து, என்மீது அபாண்டமாகக் குற்றஞ் சுமத்தி, என்னை உயிருடன் சிதையில் கட்டி எரித்துவிடத் தீர்மானித்து விட்டார். நான் இனி பிழைப்பது அரிது. ஆயினும் கடவு

ளுக்கு ஒரு நிரபராதியைக் காக்கவேண்டுமென்னும் திருவுளமிருக்குமாயின், எனக்காக ஏற்றுக்கொண்டு கில்பர்ட்டோடு சண்டைசெய்து ஜயிக்கும் ஒருவனை அனுப்புவர். தெய்வம் காட்டுமேயன்றி ஊட்டாதாகையால் மனுஷ்யப்ரயத்தனமும் வேண்டுமென்று உமக்கு இக்கடிதம் எழுதினேன். நமக்குத் தெரிந்தமட்டில் கில்பர்ட்டை ஜயிக்க வல்லவன் ஐவன்ஹோ ஒருவன்தான். அவன் இப்பொழுது கவசந்தரித்து யுத்தகளத்துக்கு வரும்படி சரீரதிடம் பெற்றிருக்கமாட்டான். நீர்போய் அவனிடம் என் ஸ்திதியைச் சொல்லுவீராகில், அவன் தன்னுடைய நண்பரில் கில்பர்ட்டை ஜயிக்கவல்ல ஒருவனை அனுப்புவான். நான் கடவுளறிய ஓரபராதமும் செய்தவளில்லை என்று அவனுக்கு உறுதி பிறக்கும்படி சொல்லும். அவன் அகப்படாமற் போனாலும் ஸரி, அல்லது அவன் உதவிசெய்யமாட்டேனென்று விட்டாலும் ஸரி. நீர் இந்தக் கொலைபாதகர் வாழும் நாட்டில் இருக்க வேண்டாம், எகிப்த்துக்குப் போய் உமது ஸகோதரரோடு வாழும். 'பிறந்த உயிரெல்லாம் சாவாதவில்லை'யாதலால், என் நிமித்தம் நீர் கவலைப்பட்டு உடம்புருகிப் போகவேண்டாம். சில காலத்திற்குள் நீரும் நானும் கடவுளின் உலகத்தில் ஸந்திப்போம். அதுவரையில் நான் உம்மையே நினைத்திருப்பேன்" என்று எழுதியிருந்தது.

ஐஸாக்கின் நண்பன், கடிதத்தை மற்றொரு முறை படித்துவிட்டு, சைத்யோபசாரத்தால் ஐஸாக்கைக் களை தெளிவித்து, "ஓ! நண்பா! முயற்சி எடுத்துக்கொண்டு, உத்ஸாகத்துடன் காரியத்தை ஸாதிக்கவேண்டிய ஸமயத்



தில் இப்படித் துக்கித்துக்கொண்டு சோர்வடையலாமா? கிறிஸ்தவர் செய்தி உனக்குத் தெரியாதா? அந்த ப்ரஷ்டர்கள் பணத்துக்காக எதையும் செய்யத் தயாராயிருப்பரே! பத்துப்பணத்துக்குப் பெற்ற தாயையும் விற்றுவிடுவரே! நான் யார்க்கில் போய், நூறு பொன் கொடுக்கிறேனென்று, கில்பர்ட்டோடு சண்டைசெய்து வெல்லவல்ல ஒருவனை அழைத்து வருகிறேன். நீயும் சும்மா இருக்கவேண்டாம். ராதர்வூடு மாளிகைக்குப்போ. அங்கே ஐவன்ஹோ இருப்பான். அவனை அவன் தகப்பன் மன்னித்து, வீட்டில் அழைத்துக்கொண்டானென்று ஊர்ப்பிரஸ்தாபமாக இருக்கிறது. அவன் மிகவும் நல்லபிள்ளை. நன்றி மறவாதவன். சொல் தவறமாட்டான். தாமதிக்காதே! சீக்கிரம் புறப்படு" என்றான்.

ஐஸாக்குச் சற்றுத் தேறி, கண்களில் நீர் பெருக்கிக்கொண்டு, ராதர்வூடு மாளிகையை நோக்கிப் புறப்பட்டான். அவன் நண்பன் நூறு பொன்னும் பின்னும் சிறிது திரவியமும் எடுத்துக்கொண்டு யார்க்கை நோக்கி வழிக்கொண்டான்.

## அத்தியாயம் 8

கோயில் வீரர்மடத்தில் ஸபைமத்தியிலே கைதியாக நின்றுகொண்டிருந்த ரெபெக்காவைப் போமனூர் சிறையில் அடைத்துப் போகும்படி மல்வாய்ஸினுக்கு உத்திரவு செய்ய, அவன் அவ்வாறே அவளைச் சிறையிலடைத்து விட்டுச் சென்றான். தனியே விடப்பட்ட அவ்யூத மங்கை வேறொன்றும் சிந்திக்கத் தோன்றாமையால், தன்னுடைய பூர்வகாலச் சரித்திரத்தை ஒன்றன்பின் ஒன்றாக நினைவுக்குக் கொண்டுவந்தாள். தனக்கு ஞாபகம் தெரிந்த நாள் முதல் அன்றுவரையில் தனக்கு ஸம்பவித்த ஸம்பத்துக்களையும் விபத்துக்களையும் எண்ணலானாள். தன்னுடைய தாய் தன்னைப் பிரஸவ அறையிலேயே விட்டிறந்ததையும், அந்தக் குறைமை தோன்றாதவாறு தன் அருமைத் தந்தை தன்னை அருமையும் பெருமையுமாக வளர்த்துவந்ததையும், தான் கல்விகற்ற விரைவையும், அதனால் தனக்கு உண்டான கீர்த்தியையும், தனக்கு ஸகல பாக்கியங்களும் நிரம்பியிருந்ததையும், இப்பொழுது தான் இழிக்கப்பட்டும், சத்துருக்கள் மத்தியில் குற்றஞ் சாட்டப்பட்டும், துரோக சிந்தையுள்ள ஒரு காமுகனால் ஒவ்வொரு ஸமயமும் தொடரப்பட்டும் தவிப்பதையும் எண்ணி, "தெய்வமே! உன்னுடைய மாயமன்றோ இது? நான் அந்தக்கரண ஸாக்ஷியாக இந்த ஜன்மத்தில் பாபம் செய்யவில்லை. பூர்வ ஜன்மத்தில் என்ன பாபம் செய்தேனோ? இருவினைகளாகிய புண்ணிய பாவங்கள் செய்தோரைப் பற்றித்தொடரும் என்பதை



'பல்லாவு ளுய்த்து விடினுங் குழக்கன்று
வல்லதாந் தாய்நாடிக் கோடலை—தொல்லைப்
பழவினையு மன்ன தகைத்தே தற்செய்த
கிழவனை நாடிக் கொளற்கு'

என்ற ஆன்றோர் வாக்கால் அறிகின்றோம். ஆதலால், நான் பூர்வஜன்மத்தில் ஒரார்மீது அபாண்டமாகப் பழி சுமத்தி இருப்பேன். அதனால்தான் இப்பொழுது நான் வீண் அபவாதம் கேட்கிறேன். நான் சிறையில் அகப்பட்டிருப்பதற்கும் காரணமிருக்க வேண்டும்.

'இரும்பார்க்கும் காலராய் ஏதிலார்க்கு ஆளாய்க்
கரும்பார் கழனியுட் சேர்வர்—சுரும்பார்க்கும்
காட்டுளாய் வாழும் சிவலும் குறும்பூழும்
கூட்டுளாய்க் கொண்டுவைப் பார்'

என்று நீதி கூறுகின்றமையால், நான் பறவைகளை வழிதெரியக் கூட்டிலடைத் திருப்பேன். எத்தனையோபேரைச் சேர்ந்துவாழாமல் நான் கெடுத்து, மனஸ்தாபம் விளைவித்து விட்டேனோ? அந்த வினைதான் எனக்கு இப்படி வந்திருக்கிறது" என்றிவ்வாறு எண்ணிக்கொண்டு, எங்கும் நிறைந்த பரிபூரணானந்தத்தை நினைத்து, நெஞ்சமுருகக் கண்களில் ஆனந்தபாஷ்பம் பொங்க, உடலில் மயிர்க்குச் செறிய, எங்கும் வேர்க்க, ஏகாக்ரசித்தையாயிருந்துகொண்டு, ஆகாயத்தை அண்ணாந்து பார்த்தபடியே, சில பாடல்களைச் சொல்லிக் கடவுளை வந்தனம் செய்தாள். அவளுக்குத் தன்னையறியாது உடலிற் பரவசமுண்டாயிற்று. மூடிய அவள் கண்களுக்குள்ளே ஐவன்ஹோ குதிரையேறி, 'உரிமை நீக்கப்படவில்லை' என்று தங்க எழுத்துக்கள் வெட்டப்பெற்ற கேடகம் தாங்கி, கன்னிகை

களின் மனங் கவரும் கம்பீரத்துடன், யுத்தவைராகனுக்குருவதுபோலத் தோன்றிற்று. உடனே அவள் உடல் தூக்கி வாரிப்போட, விழித்துக்கொண்டாள். எதிரே சுவரும், கூரையும், கதவும் இருக்கக்கண்டு, 'ஹா! சிறையிலிருக்கும் நமக்கு வீண்சிந்தனை எதற்கு?'' என்று எண்ணிக்கொண்டாள்.

இத்தருணத்தில் அவள் சிறையின் கதவு சிறிது திறந்து, ஒருக்கணிக்கப்பட்டது. அவள் திடுக்கிட்டு, "யார் அங்கே?" என்றாள். வெளியிலிருந்து, "உள்ளே வரலாமா?" என்ற ஒரு குரல் கேட்டது. ரெபெகா, "சத்துருவா, மித்துருவா? சத்துருவானாலும் வரலாம், மித்துருவானாலும் வரலாம். மித்துருவந்தால் எனக்கு லாபம், சத்துருவந்தால், நான் வாராதே என்பேனானால் நிற்கப்போவதில்லை" என்றாள். உடனே கதவு செவ்வையாகத் திறக்கப்படவும், கில்பர்ட்டுப்பாவி, "நான் சத்துருவாகப் போகிறேனோ, மித்துருவாகப் போகிறேனோ, எனக்கு அது தெரியாது. எல்லாம் உன் கைக்குள் இருக்கின்றன. என்னை நீ மித்துருவாக்கினாலும் ஆக்கலாம்; சத்துருவாக்கினாலும் ஆக்கலாம். உன் தயவைப் பொறுத்தது அது" என்று சொல்லிக்கொண்டு, உட்பிரவேசித்தான்.

அப்பொழுது நாழிகையோ நடுநிசி! கூப்பிடவோ, அவளுக்கு உற்றார் யார்? இடமோ வெறுந் தடியர்களான பரம அயோக்யர்கள் வாழும் ஸ்தானம்! பெண்பிள்ளைகள் என்ற பேச்சே அம்மடத்துள் கிடையாது! மேலுக்கு மட்டும் வேஷம் தரித்து, யோக்யர்கள் போல நடிப்பதும், தாஸிகமனம், ஸுராபானம், பரதார



ப்ரதிக்ரகம், சூது, கொலை, களவு, பொய் முதலியவைகளை விருத்தியாக வைத்துக்கொண்டு, மதோன்மத்தர்களாகத் திரிவதும், ஆசைகாட்டி மோசஞ்செய்வதும், அநாதையான ஸ்திரீகளைக் கெடுப்பதும், இன்னும் என்னென்ன கொடுமை, துரோகம், பாதகம் முதலியன உண்டோ அவையனைத்துஞ்செய்வதுமே இவர்களுக்குப் பொழுதுபோக்கு.

இம்மடத்திலுள்ள இப்படிப்பட்ட மகா புருஷர்களுக்கு ஜகத்குரு நமது பரம அயோக்ய சிகாமணியான கனம் கில்பர்ட்டு மகாபுருஷரே! இவர் அந்த நிசிவேளையில், பாதாள அறையான அச்சிறைச்சாலையில் நுழைந்தவுடன், ரெபெகா திடுக்கிட்டுப் போய்விட்டாள் என்றால், அது ஒரு ஆச்சரியமா? ஆயினும் தலைக்குமேல் ஓடிய வெள்ளம் சாணேறிலென்ன, முழமேறிலென்ன? என்று அவள் துணிவுற்று, எழுந்து அந்த அறையின் ஒரு கோடியிற் போய் நின்றுகொண்டு, வேட்டையிற் துரத்தப்பட்ட ஒரு புலி, ஓட வேறு வழியில்லாமல், திரும்பி நின்று, எதிர்ப்போர்மேல் பாய்ந்துவிழ நிச்சயித்து, தீச்சொரியும் கண்களால் உறுக்கி விழித்துப் பார்ப்பதுபோல, கில்பர்ட்டை விழித்து நோக்கினாள். அத்தீவிழியின் நோக்கினால், அச்சமென்பதையே அறியாத கில்பர்ட்டும் சிறிது அச்சமுற்று, கால் தடுமாற, நின்றவிடத்திலேயே நின்றவனாய், முகத்தில் அசடு தட்ட, சிறிது புன்னகை கொண்டவன்போல நடித்து, "ஹே! கன்னீ! நீ அஞ்சவேண்டிய காரணமில்லையே! அதிலும் என்னைக்கண்டு நீ சிறிதேனும் சந்தேகிக்கவும் நியாயமில்லை. இங்கிருந்து கூப்பிடு தூரத்திற்குள் காவலாளர்

கள் விழித்திருந்து, காவல்காத்திருக்கின்றனர். அவர்கள் உன்னைக் கொலைக்களத்துக்கு இழுத்துப் போவார்களே ஒழிய, உன் மூலமாக நான் ஆசை தணித்துக்கொள்வதை ஸம்மதித்திருக்கமாட்டார்களே!" என்றான்.

ரெபெகா, "ஹே! காமுகா! அக்கொலையாளிகளுக்கு இரண்டு விஷயத்தில் வந்தனம். ஒன்று, என் பெண் மானத்தை அவர்கள் காப்பதற்காகவும், மற்றொன்று என்னுடைய இப்பிரபஞ்ச துக்கம் சீக்கிரத்தில் ஒழியும்படி என்னைக் கொலைக்களத்திற்கு இழுத்துப் போவதற்காகவும் இருக்கட்டும்" என்றாள். கில்பர்ட்டு, "ஹா! நீ பிராணனைவிடும் விஷயத்தில் இவ்வளவு துணிந்து விடுவாயென்று நான் எண்ணினதில்லை! முன்பு நீ கோட்டை மதிளிலிருந்து விழுவேன் என்று சொன்னது என்னைச் சிறிது பயமுறுத்துவதற்கென்று நினைத்தேன். இப்பொழுதுதான் உனக்கு மரணத்தில் அலக்ஷியம் தோன்றியிருக்கின்றதை அறியலானேன். என்னைப்போன்ற வீரர்கள் யுத்தத்தில் ஒரு சூலத்தாக்கலோடு சட்டென மாண்டுபோகின்றனர். நீயும் கோட்டை மதிளிலிருந்து விழுந்திருந்தால், அநாயாஸமாக மாண்டுபோயிருப்பாய். ஆனால் இப்பொழுது உனக்கு விதிக்கப்போகும் தண்டனையோ லகுவில் பிராணன் போகும்படியானதன்று. உன்னைச் சிதையில் கட்டி உயிருடன் எரிக்க உத்தேசித்திருக்கிறான் அந்த மகாபாபி போமனர். அதை நீ ஸகிக்கமுடியாதே என்றுதான் நான் அஞ்சுகிறேன்" என்றான்.

ரெபெகா, "துரோகீ! உனக்கு அச்சங்கூடவா?



போரிலேயும் கொள்ளிவைத்து மார்பிலேயும் அடித்துக் கொள்ளுகின்றவனல்லனோ நீ! நீதானே என்னைக் குற்றவாளி என்று ருஜுப்படுத்தக் கங்கணம் கட்டிக்கொண்டிருப்பவன்! எனக்கு எதிர்க்கக்ஷியில் போர்செய்பவன் நீதானே! என் கையுறையைக்கூட வாங்கிக்கொண்டாயே!" என்றாள்.

கில்பர்ட்டு, "ஐயோ! எல்லாம் எனக்கு விரோதமாகவே ஸம்பவிக்கின்றனவே! நான் ஒன்றுக்கு யுக்தி செய்தால், தெய்வம் அதைக் கெடுத்து விடுகின்றதே! வேலிக்கு முள்ளிடக் காலுக்கு ஆனதுபோல், நான்செய்த யுக்தி எனக்கே விரோதமாக முடிந்ததே! நீ போமனர் ஸபைக்குச் சென்றபொழுது, உன் கையில் ஒரு துண்டுக்கடிதம் செருகப்பட்டதே, அது யாராலென்று நினைக்கின்றாய்? என்னைத்தவிர வேறு யார் அவ்வாறு செய்யவல்லவர் என்றிருக்கிறாய்? அதனால், நான் செய்ய நினைத்திருந்தது என்ன தெரியுமா? நீ அக்கடிதத்தில் கண்டபடி 'சண்டையால் என் வழக்குத் தீர்க்கப்படட்டு'மென்று சொல்லுவாய். அப்பொழுது போமனர் தன் மடத்திலுள்ள வீரரில் எவனையாவது உன் கக்ஷிக்கு எதிர்க்கக்ஷியிலிருந்து பொரும்படி ஆஜ்ஞாபிப்பான். மல்வாய்ஸின், நான் முதலியவர் மேல் உத்தியோகஸ்தராதலால், எங்களில் எவனையும் ஆஜ்ஞாபிக்க மாட்டான். இந்த மடத்திலாகட்டும், இதைத்தவிர வேறு எந்த நாட்டிலாகட்டும் என்னை ஜயிக்கவல்லார் இருவர்தாம். ஒருவன் ஐவன்ஹோ. மற்றவன் ரிச்சேர்டு. இவ்விருவருள் ஒருவன்தான் சாகக்கிடக்கிறான்! இல்லை,

செத்துத்தான் போய்விட்டானோ? என்னவோ, அது தெரியவில்லை! மற்றவன்தான் ஆஸ்ட்ரியாவில் சிறையில் கிடந்து மடிக்கிறான்! ஆகக்கூடி போமனூர் எவனையாவது ஒருவனைச் சண்டை செய்யும்படி நியமித்தால், நான் ஒரு காரியஞ்செய்வதாக நிச்சயித்திருந்தேன். என்னவெனில், நான் யாரோ ஒரு நாடோடி வீரன்போல உருமாறி வந்து, உனக்காக ஏற்றுக்கொண்டு, போமனூர் நியமித்த வீரனை ஒரே குத்தில் மண்ணோடு சேர்த்துவிட்டு, உன்னை நிரபராதி என்று ருஜுப்படுத்தலாமென யோசனைசெய்திருந்தேன். அப்படியெல்லாம் நான் நினைத்திருந்த பிரகாரம் நடந்திருந்தால், என்னை நீ அங்கீகரித்திருக்க மாட்டாயா?" என்று பச்சைச்சிரிப்புச் சிரித்துக்கொண்டு சொன்னான்.

ரெபெகா, "ஓகோ! இந்தச் சூது, ஆள்மாறாட்டம் எல்லாம் செய்தும், கடைசியில் நீ அடையும் பலன் என்ன மோசம் செய்வதுதானே! நீ என்னை அநாதை என்று மதித்து, அருளினால் ரக்ஷிக்கத் தீர்மானித்தாயானால், நீ செய்யும் காரியத்திற்கு நான் நன்றிபாராட்டக் கடமைப்பட்டவள். அப்படிக்கின்றி நீயே என்னை ஆபத்தில் அகப்படுத்திவிட்டு, திரும்பவும் நீயே என்னை விடுவிக்கின்றேன் என்று பேர்வைத்துக்கொண்டு விடுவித்தால், நீ செய்தது உபகாரம் என்று நான் நினைப்பேனோ? நான் பிராணனைக் காப்பதால், யார் பயனை அடையப் போகிறார்கள்? இத்தனை பிரயாசைப்பட்டு ரக்ஷித்த என்சரீரத்தை ஸத்பாத்திரத்தில் அர்ப்பணம் செய்யவேண்டுமே ஒழிய உன்னைப்போன்ற .. கண்டகனிடத்து ஒப்பிக்கலாமோ?



எனக்கு உயிர் பிழைத்திருக்க விதியிருந்தால், எவ்விதத்திலும் நான் தப்புவேன். இல்லை என்று நான் மரிக்கவேண்டியது விதியாயின், உன்னாலும் என்னைக் காக்க முடியாது. உன் மடாதிபதியிருக்கிறாரே, போமனூர், அவராலும் முடியாது. ஏன் என்னிடத்திற்கு வந்து என்னைத் துன்பம் செய்கிறாய்! நான் இவ்வுலகில் இருப்பது சொல்பகாலந்தான். அந்தக் காலத்தை ஸத்விஷயத்தில் கழிக்கிறேன். என்னைவிட்டு அகல்" என்றாள்.

கில்பர்ட்டு, "ஓ! பெண்ணே! நீ வீணாக என்மீது பழிசுமத்தாதே! நான் உன்னை இங்கெடுத்து வருகையில் இந்த மட்டப்பயல், போமனூர், வந்திருக்க மாட்டானென்று எண்ணியிருந்தேன். அவன் என் கஷ்டகாலத்தினால் இவ்வேளையில் இங்கு வந்துவிட்டான். அது போகட்டும். உன்மீது நான் ஒரு குற்றமும் சாட்டவில்லை. எல்லாம் போமனூரும் மல்வாய்ஸினும் செய்தவை. இப்பொழுதும் ஒன்றும் கெட்டுப்போய் விடவில்லை. இவ்விரவே நீயும் நானும் இக்கோட்டையினின்றும் வெளிப்பட்டு, அப்புறம் போய்விடுவோம். போமனூருடைய வீரர்கள் என்னைத் தொடர முடியாது. நாம் ஓரிடத்திலும் தங்காது, பாலஸ்தீனுக்குப் போய்விடுவோம். அங்கே என்னுடைய நண்பனொருவன் மடாதிபதியாக இருக்கிறான். அவன் எனக்குப் பிராயச்சித்தம் செய்வித்து, என்னை இந்த வீர ஸந்யாஸி ஆச்ரமத்தினின்றும் விலக்கி க்ருஹஸ்தாச்ரமம் கொள்ளும்படி அநுமதி கொடுப்பான். அதன்பிறகு நீயும் நானும் கல்யாணஞ் செய்துகொண்டு, பட்ட பாட்டுக்கெல்லாம் விமோசனமாக இன்பம் நுகர்ந்துகொண்டு, நெடுங்

காலம் வாழலாம். என்னுடைய யுத்த ஸாமர்த்தியத்தைப்பற்றி உன்னிடத்தில் நான் அதிகமாகச் சொல்லிக்கொள்ள வேண்டியதில்லை! என் பராக்ரமத்தால் நான் ஒரு ராஜ்யத்தை ஸம்பாதிக்க முடியும்! ஆ! ஹோ! அப்பொழுது நான் மன்னனாக முடிதரித்தும், நீ ராணியாகக் கிரீடம் பூண்டும், சிங்காதனமேறியிருந்து வாழுங்காலம் வந்து விடுமாயின்!!— * * * *

ரெபெகா, "ஐயோ! இப்படியும் ஒரு பித்தனுண்டா? எல்லாம் ஆகாசக்கோட்டை கட்டுவதாக இருக்கின்றனவே! ஐயோ! நீ என்ன செய்வாய்? உன் ஜன்மம் அப்படியாயிற்று! இப்படியே தான்தோன்றியாக அலைந்தும், ஆறுவார் அடக்குவாரற்றுத் திரிந்தும், நன்மை தீமை பாராது மனம் போனபடியே செய்தும், லோககண்டகனாகி விட்டாய்! நீ முதலில் இந்த வீரஸந்யாஸி ஆச்ரமத்தைக் கொள்ளுமுன் மண்ணாசை பெண்ணாசை பொன்னாசை என்ற மூன்றையும் விட்டுவிட்டேனென்று பிரமாணம் பண்ணிவிட்டுத்தானே இதைக் கொண்டாய்? இப்பொழுது என்னைக் கண்டவுடன், உனக்கு அந்தப் பிரமாணங்களெல்லாம் விளையாட்டுக்குச் செய்யப்பட்டனபோலத் தோன்றுகின்றன! இனி என்னிலும் அழகிய ஒருத்தியைக் கண்டவுடன், 'கடவுளறிய உன்னைக் கைவிடேன்' என்று சொல்லும் இச்சொல்லும் அப்பொழுது விளையாட்டுக்குச் சொன்னவை போலத் தோன்றாதா? மேலும் நீ கிறிஸ்தவன்; நான் யூதச்சி. உனக்கும் எனக்கும் ஸம்பந்தம் ஒவ்வாது. நீ கிறிஸ்தவமதத்தைத் துறக்க இஷ்டப்பட்டாலும், நான் என் யூதமதத்தை இழக்கமாட்



டேன். மதத்தை அற்பமான ஒரு கொள்கையென்று, பழந்துணிகளைக் கழித்தெறிவதுபோல மாற்றிக்கொள்வது என் ஸ்வபாவமன்று" என்று சொல்லிவிட்டாள்.

கில்பர்ட், "அடி பெண்ணே! இளங்கன்று பயமறியாது என்பதுபோல், உனக்கு என்ன விளையப்போகிறது என்பது தெரியவில்லையே!" என்றான்.

ரெபெகா, "எது விளைந்தாலும், உயிர்போவதைக் காட்டிலும் அதிகமாக ஒன்றும் எனக்கு விளையப்போவதில்லையே! அந்த மரணத்தை நான் ஆனந்தத்துடன் ஏற்கின்றேன். நீ போகலாம்" என்றாள்.

கில்பர்ட், "ஹா! உன் முகத்தில் கோபம் அதிகரிக்க அதிகரிக்க, அழகுமன்றோ அதிகரிக்கின்றது! ஐயோ! உன்னைவிட்டுப் போவதற்கு எனக்கு மனம் வரவில்லையே! நான் விடிவதற்குள் இறந்து, உன்னைச் சிதையிற்கட்டி எரிப்பதை நோக்கி வருந்தாமல் போய் விடுவதை விரும்புகிறேனே! நிச்சயமாக உனக்குப்பிறகு நான் ஜீவித்திருக்கப் போவதில்லை! என் உயிர்போவது இப்பொழுதோ, இன்னும் அரைநாழிகையிலோ என்றுதானிருக்கின்றது! ஓ! கிளியே! இவ்வளவு பால்யத்தில்! இந்த ஸுந்தர உருவத்தை எப்படியம்மா நீ சிதையில் வைக்கப்போகின்றாய்!! ஐயோ! நான் என்ன செய்வேன்? நீயும் நானும் ஏன் ஸந்தித்தோம்? நீ நாளைக்குத் தீயில் கிடந்து வெயிலிலிட்ட புழுப்போலத் துடிப்பாயே! அப்போது உன்னைப்பார்ப்பவர் என்னவாய் ஸஹிப்பார்கள்? போமனூர்தான் எவ்வாறு ஸஹிப்பான்? ஆ!

உன்னை நோக்குந்தோறும், நீர் மறந்த இக்கண்கள் நீர் பெருக்குகின்றனவே! ஆ! தெய்வமே! இவளை நான் காணும்படி ஏன் செய்தனையோ? அத்தியந்தம் நண்பர்களான இருவருடைய கப்பல்களும் புயலின் வசப்பட்டு, மூடுபனியின் அந்தகாரத்தினால், ஒன்றையொன்று அறியாமல் மோதுண்டு, உடைந்துபோவதுபோல், விதி என்னும் புயலால் நாமிருவரும் பிரிந்துபோக நேர்ந்துவிட்டது. என்ன செய்வது? என்மீது குற்றமில்லை. என்னை மன்னித்தருள்வாயா? கடைசியாக நீயும் நானும் பிரியும்போது மனஸ்தாபமில்லாமல் பிரிவோம்! என்னை மன்னித்தாயா? சொல்" என்று கெஞ்சினான்.

ரெபெகா அவன் முகத்தில் துக்கமும், கண்களில் குறுநீரும் தோன்றக்கண்டு, "ஆ! நீயும் என்ன செய்வாய்? உன்னை மன்னித்தேன்போ!" என்றாள்.

வில்பர்ட்டு துக்கம் நெஞ்சில் அடைத்துக்கொள்ளச் சட்டென அவ்வறையைவிட்டு வெளியே போய்விட்டான்.

## அத்தியாயம் 9

லாக்ஸிலியிடத்திலிருந்து செலவு பெற்றுக் கொண்டு, அவன் கொடுத்த கொம்பையும் கழுத்திலணிந்தவனாய்ப் புறப்பட்ட நமது கறுப்புவீரன், அப்பெருங் காட்டைக் கடந்து, ஐவன்ஹோ சிகிச்சை செய்யப்பெற்றுக் கிடக்கும் ஸெயின்டு போடால்பு மடத்தை அடைந்தான். அங்கு அவனைக் கண்டதும், அவன் சிறிது சொஸ்தப்பட்டு, எழுந்திருக்கவும் சக்தியுடையவனாயிருப்பதை நோக்கி, அளவுகடந்த ஆனந்தங்கொண்டு, அவனைக் கட்டித்தழுவி, "அப்பா! நீ தீயில் மாண்டிருந்தால், நான் என்ன செய்திருப்பேன்!" என்றான். இத்தருணத்தில், அம்மடத்துத் துறவியும் அங்குவந்து சேர்ந்தார். அவர் கறுப்பு வீரனைக் கண்டதும், மிகுந்த பயபக்தியுடன் அவனை உபசரித்து, யோகக்ஷேமங்களை விசாரித்தார்.

அன்று முழுமையும் நம் கறுப்புவீரன் அம்மடத்திலேயே தங்கி, ஐவன்ஹோவோடும் அத்துறவியோடும் கலந்து ஆலோசனைசெய்தான். அம்மூவரும் இவ்விவ்வாறு செய்வதென்று தீர்மானம் செய்துகொண்டார்கள். மறுநாள் கறுப்புவீரன் குறிப்பிட்டவிடம் செல்லுவதற்குப் புறப்பட்டான். அக்காட்டுவழியில் அவனுக்கு வழி காட்டும்பொருட்டு, வாம்பாவை அழைத்துப் போகும்படி ஐவன்ஹோ அவ்வீரனுக்கு யோசனை சொல்ல, அதுவே ஸரியென்று, வீரன் வாம்பாவுடன் புறப்பட்டான். புறப்படுமுன், வீரன் ஐவன்ஹோவை நோக்கி, "ஓ! சிறுவா! நீ சிறு பிள்ளைத்தனமாக எழுந்து, புறப்பட்டு

விடாதே. இன்னும் இரண்டு நாளைக்குப் பிறகுதான் நீ எழுந்து நடமாடவேண்டும். அதற்குள் நீ பிரயாணத்துக்கு எத்தனிப்பாயானால், நமக்கு உன்னிடத்தில் அதிருப்தி உண்டாகுமென்று அறிந்துகொள். நாளைப்போக மறுநாள் நீ அதெல்ஸ்டேன் மாளிகையில் நம்மை வந்து கண்டுகொள். எம்மை உன் தகப்பன் விருந்துக்கு அழைத்திருக்கிறார். அப்பொழுது உன் விஷயமாக ஏற்பாடு செய்வோம்" என்று சொல்லித் திட்டஞ்செய்து விட்டுப் புறப்பட்டான்.

கறுப்புவீரன் வாம்பாவைத் தன்னிடத்தில் ஒரு வாரத்திற்கு இருக்கும்படி ஸிட்ரிக்கைக் கேட்டுக்கொண்டிருந்தமையால், எஜமானன் உத்திரவுப்படி அவ்விகடன் கறுப்பு வீரனுடைய அடிமைபோல, அவனுக்கு ஊழியஞ் செய்து வந்தான். ஆயினும் கறுப்புவீரன் அவனை ஒரு தோழன்போல நடத்தி வந்தமையால், அவன் குதூகலத்துடன் செல்லும் வழிநெடுக உல்லாஸமாகக் கதைகள் சொல்லுவதும், பாட்டுப்பாடுவதும், விகடம் செய்வதுமாகப் போனான். கறுப்புவீரன் திருப்தியடைந்து, தானும் ஆனந்தமாகச் செல்ல; இருவரும் மல்வாய்ஸின் கிராம எல்லையை அடைந்தனர்.

அப்பொழுது வாம்பா, "ஐய! வீரரே! இப்பொழுது நாம் செல்லும் பிரதேசம் இன்னதென்று உமக்குத் தெரியுமா? என்றான். கறுப்புவீரன், "இது மல்வாய்ஸின் கிராமமென்று கேள்வி" என்றான். வாம்பா, "அம்மல்வாய்ஸின் ஆட்களின் செய்தி உமக்குத் தெரியுமா? வழிமறிக்கும் தொழிலில் நவமணிகள். கொலை என்றால் அவர்களுக்கு



ஜலபானம். இப்பொழுது அந்த மகா புருஷர்களில் நாலைந்துபேர் நம்முன் வந்து நின்றால், என்ன செய்வீர்?" என்றான். வீரன், "ஆ! அவர்கள் வந்து நம்மை என்ன செய்யக் கிடக்கிறது? கொல்லனுலையில் ஈக்களுக்கு என்ன வேலை? இரும்புத் தூணைச் செல் அரிக்குமா?" என்றான்.

வாம்பா, "நாலைந்து பேருக்குத்தான் இப்படிச் சொல்லிவிட்டீர்; பத்து இருபது பேர் வந்து விட்டால், அப்பொழுது என்ன சொல்லுவீர்?" என்றான்.

வீரன், "பத்து இருபது என்றால், அவை எப்படி இருக்கும்? கடல்போல எலிகள் ஒலித்தக்கால் என்னும்? நாகம் மூச்சுவிடப் பறந்துபோமல்லவா?" என்றான்.

வாம்பா, "ஐயா! வீரரே! அந்த லாக்ஸிலி கொம்பு மிகவும் அழகாக இருக்கிறதே; நான் சற்று அதைப் பார்க்கக் கூடாதா?" என்றான்.

வீரன் "இந்தா! இதை வைத்துக்கொள்" என்று கொடுக்க, வாம்பா அதைக் கழுத்தில் அணிந்துகொண்டு, லாக்ஸிலியின் ஸ்நேகபாவத்தைப் புகழ்ந்தான்.

இவ்வாறு அவ்விருவரும் உல்லாஸமாகப் பேசிக்கொண்டு, சிறிது தூரஞ் சென்றதும், எதிரே ஒரு அடர்ந்த புதரைக்கண்டு, வாம்பா, "வீரசிங்கமே! இதுவரையில் நாம் விளையாட்டாக இருந்தாயிற்று. இனி நாம் காரியத்தின்மேல் கண்ணாயிருக்கவேண்டும். இதோ தெரிகிற புதர் மிகவும் அபக்கீர்த்தி பெற்றது. இதைத் தாண்டிச் சென்றவர்களில் உதைபடாமல் தப்பினவர் மிகச்சிலரே. ஆதலால், உமது தலை உறையை முகத்தில் கவிழ்த்துக் கொள்ளும். என்னதான் சூரத்துவமிருந்தாலும் காலம்,

இடம், வர்த்தமானம் என்ற மூன்றையும் கவனிக்கவேண்டும். ஜலத்திலே மிகப்பெரியயானையையும் வெல்ல வல்ல முதலையானது நிலத்தில் வந்துவிட்டால், அதை ஒரு நாயும் இழுத்தெறிந்துவிடுமன்றோ? ஆதலால் நீர் ஜாக்ரதையாக இருக்கவேண்டும். அதுவுமன்றி, அதோ பளபளவென்று தெரிகிறதே, அது வாளோ, வேலோ தெரியவில்லை!" என்றான்.

கறுப்புவீரனும் அதைப் பார்த்துத் தன் தலையுறையை முகத்தில் கவிழ்த்துக்கொண்டு, கேடகத்தையும் மார்பிற்கு நேரே நகர்த்தி, சரிப்படுத்திக் கொண்டான். இது செய்து ஒரு நொடிப்பொழுதுகூட இராது! மூன்று பாணங்கள் 'விர்' என்று, அப்புதரினின்றும் புறப்பட்டு வந்து, ஒன்று அவ்வீரன் தலையுறையிலும், இரண்டு அவன் மார்பிலுள்ள கேடகத்திலும் தாக்கின. ஆனால் அவை இரண்டும் எஃகினால் செய்யப்பெற்றனவாதலால், அப்பாணங்கள் குன்றில் முட்டிய குருவிபோல மழுங்கிக் கீழ்வீழ்ந்தன.

கறுப்பு வீரனுக்கு வந்த ஆத்திரத்திற்கு அளவே இல்லை! அவன் காலனைப் போலச் சீறி எழுந்து, வடவாமுகாக்னி என்னக் கண்களினின்றும் கனலைச் சொரிந்து, "ஓ மசகங்களே! என்னைத் தீப்பிழம்பென்றறியாது கனி என்று கருதி மொய்க்க வந்தீர்களோ! காலன்வாயில் ஏன் வலிய நுழைகிறீர்? அவனே வலுவில் 'வாவா' என்றுகையால் அழைக்கின்றீர்களே!" என்று சொல்லிக் கொண்டு, தன் குதிரையை அப்புதருக்கருகில் உய்த்து, உருவிய வாளுடன் சென்றான்.



அங்கு மறைந்து பதுங்கியிருந்த எழெட்டுக் கொலைபாதகர்கள், அவனைச் சூழ்ந்துகொண்டு, கெழித்தும், உரப்பியும், 'ஹாஹா' வென்று அட்டஹாஸஞ் செய்து கொண்டும், "கொடுங்கோலா! இற" என்று கத்திக் கொண்டும், பாணப்பிரயோகங்களும், ஈட்டி, வாள் முதலிய சஸ்த்ரப்ரயோகங்களும் செய்தனர்.

போர் எனக் கேட்டபோது பொருப்புத்தோள் பூரிப்பானென ரிச்சேர்டு பகைவரில்லாமல் தோள் தினவுற்றிருந்தமையால், வீச்சுக்கு ஒருவர் இருவராக வீசி, வெள்ளரிக்காய் சீவுவதுபோலச் சீவி, அச்சிறுபடையாகிய கடலை மந்திரம் போன்ற தன் தோள்வலியால் கலக்கி, எதிரிகளைச் சின்னபின்னமாக்கிவிட்டான். அவர்களில் எஞ்சியவர் இவனுடைய அமானுஷ்ய பலத்தையும், போர் செய்யும் சாமர்த்தியத்தையும், நோக்கி, "ஐயோ! இவன் கூற்றமே! விதி கொண்டுவந்து உந்தியதனால், இங்கு இவனிடத்தில் வந்து நாம் அகப்பட்டுக்கொண்டோம்" என்று பின்னிட்டார்கள்.

இதுவரையில், நேரில் கைகலக்க வேண்டாமென்று ஒதுங்கியிருந்த ஒரு நீல உடை தரித்த வீரன், "ஓ கோ! மோசம் வந்துவிட்டதே! இவன் உயிர் என்ன சாச்வதமா? இவன் சிரஞ்சீவிப்பட்டம் பெற்றிருக்கிறானா? அல்லது யுத்தத்தில் அபஜயம் பெறப்படாதென்று வரம் வாங்கியிருக்கிறானா? அதைத்தான் பார்ப்போமே!" என்று சொல்லிக்கொண்டு, தன் குதிரையைக் கனவேகமாக ஓட்டி வந்து, கறுப்புவீரன்மேல் மோதி, அவன் குதிரையை வெட்டிக் காயப்படுத்தி விட்டான்.

அது நெடுந்தூரம் வழிப்பிரயாணஞ்சென்று ஏற்கனவே களைத்துப்போயிருந்தமையால், சீக்கிரத்தில் அவ்வாளின் வெட்டுக்காயத்தால் சோர்ந்துபோய்க் கீழே விழுந்துவிட்டது. குதிரை விழவே, அதன் எஜமானனான கறுப்புவீரனும் விழுந்துவிட்டான்.

இவன் விழுந்தருணத்தை எதிர்பார்த்திருந்த அந்த நீலஉடைக் கொலைபாதகன், எங்கே அவன் மறுபடி எழுந்து விட்டுப்போகிறானோ வென்று அஞ்சி, அவன் எழும் முன்னமே அவனை வதைத்துவிடத் தீர்மானித்து, தன் ஆட்களைச் சேர்த்துக்கொண்டு, கறுப்புவீரனை அணுக, இதுவரையில் திக்ப்ரமை கொண்டு, உடல் நடுங்கி, மெய் சோர்ந்திருந்த வாம்பா, ஐயோ! மோசம் வந்து விட்டதென்று, தன் கழுத்தில் அணிந்திருந்த கொம்பை எடுத்து மும்முறை முழக்கினான்.

இம்முழக்கங் கேட்டவுடன், அவ்வாட்கள் திடுக்கிட்டு, மூலைக்கு ஒருவராக ஓடத் தலைப்பட்டனர். அதை நோக்கிய நீலஉடையோன், "ஓ! பயங்கொள்ளி நாய்களா! சீ சீ! நீங்களும் புருஷர்களென்று வெட்கமில்லாமல், முகத்தில் மீசை வைத்துக்கொண்டிருக்கிறீர்களே! கையாலாகாத கபோதிப்பயல்களே! கேவலம் ஒரு விகடன் கொம்பூதுகிறான், அதற்கு நீங்கள் அஞ்சி ஓடுகின்றீர்களா? சிச்சி! உங்கள் ஜன்மத்தைச் சுட! ஒரு மனுஷ்யனுக்கு அஞ்சியோடுகிற நீங்கள் உங்கள் பெண்டாட்டிகள் முகத்தில் எப்படியடா விழிக்கப்போகிறீர்கள்! அவர்கள் உங்கள் முகத்தில் காறியுமிழமாட்டார்களா? சீ!" என்றான்.

இதைக்கேட்ட அவர்களெல்லாரும் கனத்த சோகங்



கொண்டு, மறுபடியும் வீரனைச் சூழ்ந்துகொண்டார்கள். வீரனோ இப்பொழுது ஸுமார் நாற்பது பேர்களால் சூழப்பட்டு, நாலு பக்கங்களிலும் எதிர்க்கப்படவே, அவன் ஒரு பெரிய விருக்ஷத்தில் சார்ந்துகொண்டு, பின்புறம் நீங்கலாக, மற்ற மூன்று புறங்களிலும் எதிர்த்துவரும் காதகர்களைத் தன் வாளுக்கு இரை கொடுத்துவர, நீல உடை வீரன் தன் கக்ஷியார் நிமிஷத்துக்கு நிமிஷம் குறைந்து கொண்டு வருவதைக் கண்டு, "இனி தாக்ஷணியம் பார்க்க முடியாது. நம் கையாலேயே எதற்கும் இவனைக் கொல்ல வேண்டுமென்று பார்த்தோம்! அது சாத்யமன்றுபோலத் தோன்றுகிறது!" என்று சொல்லிக்கொண்டு, தன் சூலத்தால் ஒரே குத்தாகக் குத்திக் கறுப்புவீரனை மரத்தோடு சேர்த்துத் தைத்துவிடுகிறதென்று, குதிரையைக் கனவேகமாகச் செலுத்திவந்தான். இந்த அனர்த்தத்தை நோக்கின வாம்பா, "ஐயோ! மோசம் வந்துவிட்டது." என்று அஞ்சி, தன் குதிரையை வேகமாகச் செலுத்தி, நீலஉடையோன் குதிரையின் வயிற்றில் தன் சூலத்தைப் பாய்ச்சி, அதை வீழ்த்திவிட்டான்.

இந்த அகஸ்மாத்து அபாயத்தை எதிர்பாராதவனாகிய அந்நீல வீரன் குதிரையின் கீழ்த் தானும், தன் மேல் குதிரையுமாக விழுந்துவிட, கறுப்புவீரனைத் தாக்கி நின்ற வீரரில், சிலர் கோபமுற்று, "இந்தத் தடவையோடு இவ்வீரனை யமலோகம் அனுப்பிவிடுகிறது" என்று நிச்சயஞ் செய்துகொண்டு, தலைகால் தெரியாமல், ஆக்ரஹத்தோடு ஓடிவரவே, அவர்களுள் மூன்றுபேர்மீது மூன்று பாணங்கள் எங்கிருந்தோ புறப்பட்டு வந்து தைத்து,

அவர்களை வீரசொர்க்கம் அனுப்பி விட்டது.

அடுத்த க்ஷணத்தில், "ஹோ!" என்ற சத்தத்துடன் அக்காடு கிடுகிடுக்க, பூமியதிர, திசைகள் செவிடுபட, ஒரே கூட்டமாக ஆயிரம் காட்டாள்கள் ஏககாலத்தில் வில்லுங் கையுமாக ஆகாயத்திலிருந்து குதித்தவர்போலத் தோன்றி, கருப்புவீரனைச் சூழ்ந்து நின்ற காதகரை வளைத்துக்கொண்டு, மர்த்திக்கத் தொடங்கினர். அவர்கள் "ஐயோ! அப்பா!" என்று அலறிக்கொண்டும், "நாங்கள் செய்தது தப்பு! இனியோக்யர்களா யிருக்கிறோம்!" என்று கதறிக்கொண்டும், "நாங்கள் சம்பளக் கூலியாள்கள்தாம்! எங்களை அந்த நீல உடைப் பாதகர் தாம் இவ்வேலைசெய்யச் சொன்னார்!" என்று புலம்பிக் கொண்டும், உயிர்ப்பிச்சை கேட்டனர். இக்காட்டாள்களுக்குத் தலைவனாய் லாக்ஸிலி வந்து, கருப்புவீரன் முன்னின்று, "ஐயா சற்று முன்னேயே இக்கொம்பை ஊதும்படி சொல்லப்படாதா? நான் உங்களுக்குத் தக்க ஸமயத்தில் உதவும் பாக்கியத்தைப் பெறப்படாதா?" என்று உபசாரம் சொல்ல, கருப்பு வீரன், "ஐயா! நீங்கள் சிறிது முன் வரவேண்டியது அனாவசியமே! இப்பொழுது வந்ததே எனக்குப் பரமோபகாரம். நீர் சொல் நவருநவரும், பெரிய மனுஷ்யத்தன்மையு முடையவருமாகவிருக்கிறீர்" என்றுசொல்லி, வாம்பாவையழைத்து, "நண்பா! யாதொரு பகைமையுமின்றி நம்மிடத்துப் பகைமை காட்டி, இவ்வளவு காரியமும் செய்த இந்நீலவீரன் யாரென அறியவேண்டாமா? அவன் தலையுறையைக் கழற்று; அவன் முகத்தைப் பார்ப்போம்" என்றான்.



வாம்பா அவ்வாறு செய்யலும், அந்தத் துரோகியின் முகம் வெளிப்பட்டது. அதைக் கண்டதும், கருப்புவீரன் பிரமித்துப்போய், முகத்தில் கோபாக்னி ஜ்வலிக்க அருகிற் சென்று இரகசியமாக, "அடா வால்டிமர்! நீதானா இப்படிக் கொலைக்கு ஏற்பட்டவன்? அடா! என்ன ஆச்சரியம்? உனக்கு நம்மிடத்தில் என்ன த்வேஷமடா? நீயேதான் இந்த ஸத்விஷயத்தில் பிரவர்த்தித்தாயோ, அல்லது உன்னைத் தூண்டியவன் வேறு யாராவது உண்டோ?" என்றான்.

வால்டிமர், "இது நான் செய்த காரியமன்று, என்னை ஆவேசப்படுத்தி இவ்வேலையில் பிரவர்த்திக்கும்படி தூண்டினவன், தங்கள் திருத்தம்பியே!" என்றான். இதைக் கேட்டவுடன் கருப்புவீரன் தலையில் அடித்துக் கொண்டு, "என் குடும்பம் இப்படியா சந்தி சிரிக்க வேண்டும்! என்ன அநியாயம்! வெட்கக்கேடு!" என்று விசனித்து, வால்டிமரை நோக்கி, "ஓ! அற்பனே! நீ சிங்கத்தினிடத்தில் அகப்பட்டுக் கொண்டிருக்கிறாய் என்று அறிந்தும் நிர்பயமாக இருக்கின்றாயன்றோ!" என்றான். அதற்கு வால்டிமர், "ஓ! மிருகேந்திரன் வாயிலகப்பட்ட ஒருவன் எதற்கு அஞ்சவேண்டும்!" என்றான்.

கருப்புவீரன், "சீ! சீ! போ! உன்னையும் ஒரு வீரன் மனுஷ்யனென்று மதிப்பனோ? சிங்கம் சிறிதும் முயலைக் கொல்லுமோ? போ; இன்றுமுதல் நாள் மூன்றுக்குள் நீ இவ்விங்கிலாந்தை விட்டு அப்புறம் போயிருக்க வேண்டும்! அக்கெடுவைத் தாண்டி ஒரு நிமிஷமாவது

இங்கு நீ தாமதித்திருப்பதாக அறிந்தேனாயினும், உன் உயிர் உனதன்று" என்று சொல்ல, அவன் தலைவணங்கி, வாலைக் கவட்டிக்குள் நுழைத்துக் கொண்டும், உடம்பைக் கூனிக்கொண்டும், தலையை இறக்கிச் சாய்த்து ஒருக்கணித்துப் பார்த்துக்கொண்டும் ஓடும் ஒரு தோற்ற நாய் போலச் சென்றான்.

அவன் போவதை நோக்கிய லாக்ஸிலி, "ஐயா! வீர சிங்கமே! அந்தப் பாவியை என் உயிருடன் விட்டு விடவேண்டும்! நீர் செய்தது உமது காருண்யத்திற்கும் பெருந்தன்மைக்கும் அழகேயானாலும், வெகு ஜனவிரோதியை உலகில் வைக்கப்படாதென்று நீதி கூறுகின்றதே! நான் அவன் ஜீவனைக் கிரஹிக்குமாறு இப்பாணத்தை அனுப்புகிறேனே!" என்றான். வீரன், "அப்பா! நண்பா! நீ சொல்லும் நீதி எனக்கும் தெரியும், ஆயினும் ரிச்சேர்டு தன்னுயிரை வவ்வமுயலும் அற்பர் உயிரை வாங்குவதில்லை" என்றான்.

ரிச்சேர்டு என்ற பேர் கேட்டார்களோ இல்லையோ, அங்குள்ளார் எல்லாரும் திடுக்கிட்டு, ஒன்றும் தோன்றாராய், மரம்போல ஸ்தம்பித்து நிற்க, லாக்ஸிலி சிறிது மனோதிடங்கொண்டு, அவன் பாதத்தில் வீழ்ந்து, "பிரபோ! மகாராஜா! சிறியேம் செய்த பிழைபொறுத்தருள வேண்டும்! எம்மை ரக்ஷிக்கவேண்டும்! அறியாமற் செய்தவைகளைத் திருவுள்ளத்தில் கொள்ளக்கூடாது!" என்று வேண்டிக்கொண்டான். அரசன் பெரிதும் மகிழ்ந்து, லாக்ஸிலியைக் கைப்பிடித்துத் தூக்கி எழுப்பி, "நீங்கள் குற்றஞ் செய்ததாக எமக்குத் தெரியவில்லை.



அப்படி எமக்குத் தெரியாதவாறு ஏதேனும் குற்றம் செய்திருப்பீரானால், இன்று நீங்கள் உங்கள் அரசனுக்குச் செய்த பேருபகாரத்தால் மன்னிப்பைப் பெற்றீர்கள். இனி நீங்கள் நல்ல பிரஜைகளாவீர்கள். லாக்ஸிலி! 'உம்மை நாம் கட்டிக்கொள்ளுகிறோம்!'" என்றான். கள்வர் தலைவன், "பிரபோ! இனி என்னை லாக்ஸிலி என்று அழைக்கவேண்டாம்! அடியேன் மகா பாபி என்று அபக்யாதி பெற்றிருக்கும் உலக கண்டகன். என் பெயரை யானே சொல்லிக்கொள்ள வெட்கப்படுகிறேன். என்னை ராபின்ஹூடு * என்று அழைப்பார்கள்" என்றான்.

உடனே அரசன் வியப்புற்று, தேடிச்சென்ற பொருள் பாதத்தருகில் காணப்பெற்றவன்போல மகிழ்ந்து, "ஹா! நீதானோ ராபின்ஹூடு? உன்னை யாம் காணவேண்டுமென்று பலநாளாக எண்ணியிருந்தோம்! நீர் எதற்கும் அஞ்சவேண்டாம். உமது ஞாபகம் நமக்கு என்றைக்குமிருக்கும்" என்றான். உடனே தடிச் சந்நியாசி, மன்னவன் பாதத்தில் வீழ்ந்து, தன்னை மன்னிக்க வேண்டுமென்றும், தான் அவனைத் தடியினால் அடித்ததை மறந்துவிட வேண்டுமென்றும் வேண்டினான். அவனையும் வேந்தன் ஆதரித்து, எல்லாரையும் மகிழ்வித்தான்.

* இவன் சரித்திரத்தை நாம் பிரத்தியேகமாக எழுதி முடித்துள்ளோமாதலால், அதில் ஸவிஸ்தாரமாக இவன் செய்த அற்புதங்கள் காணப்படும்.

# அத்தியாயம் 10

கறுப்புவீரனால் போடால்பு மடத்தில் விடப்பட்ட ஐவன்ஹோ, அக்கறுப்புவீரன் சென்ற இரண்டு நாழிகைக்கெல்லாமெழுந்து, துறவியினிடத்திற் சென்று, "ஐயா! ஸந்யாஸியே! எனக்கு இருப்புக்கொள்ளவில்லை, நான் அரசருடன் கூடப்போகாது தங்கிவிட்டேனேயென்று பச்சாத்தாபப்படுகிறேன். இப்பொழுது நான் புறப்பட வேண்டும்" என்றான். துறவி, "ஹோ! என்னடா நீ வைத்தியக்காரப்பிள்ளையாயிருக்கின்றாய்! உன்னுடம்பு ஸ்திதி என்ன? நீ யோசிக்கிற காரியமென்ன? நன்றாயிருக்கிறது! இரண்டு நாளைக்கு நீ வீட்டைவிட்டு அப்பாலடிவைக்கப்படாது" என்றார்.

அதற்கு ஐவன்ஹோ, "இல்லை ஐயரே! எனக்கு உடம்பு ஒன்றுமில்லை. சற்றுத் திடக்குறைவாகவிருந்துவிட்டால், அவ்வாறு சொல்லுவேனோ? நீங்கள் என்னைப்பற்றி விசாரப்படவேண்டாம். நான் புறப்படுகிறேன்" என்றான்.

துறவி கூடாதென்று மறுபடியும் தடுக்க, அவன், "அடிகளே! நான் புறப்படுவது பல காரியங்களை உத்தேசித்து என்று நினையுங்கள். அரசருக்கும் வேறொருவருக்கும் யுத்தம் நேருமானால்மட்டும் நான் உதவிசெய்யக் கூடாதவனாயிருப்பேனே ஒழிய, வேறு ஒரு விஷயத்தில் நான் அவருக்குப் பரம ஸகாயஞ் செய்யக்கூடும். நமது மன்னவர் இப்பொழுது எனது தந்தையின் வீட்டுக்குப் போகிறார். ஒருவேளை அவர் இவரை அரசரென்று



கண்டுகொண்டு விட்டால், ஸிட்ரிக்கு அதெல்ஸ்டேன் இறந்த துக்கத்தில் இவரைச் சிறைசெய்தாலும் செய்யலாம். குடிக்கத் தெரியாத பூனைக்குக் கவிழ்க்கத் தெரியும் என்பதுபோல, பொறாமையினால், என்ன செய்தாலும் செய்யலாம். 'எல்லாம் வெகுண்டார் முன்தோன்றாக் கெடும்' என்பது அநுபவமாதலால், நான் இவ்வேளையில் நமது வேந்தரைத் தனியே விட்டுவிட்டு, இங்கே சும்மா இருக்கப்படாது. என் தந்தை என்மீது வெறுப்புற்றிருந்தபோதிலும், என் வீட்டிலுள்ளார்க்கு என்மீது விச்வாஸமுண்டென்று நம்புகிறேன். அவர்கள் என் சொல்லுக்குக் கட்டுப்படலாம். இல்லை என்று அனர்த்தமே விளைவது கடவுள் ஸங்கற்பமாயின், நானும் மன்னரோடு மரித்துவிடுகிறேன்" என்று சொல்லிப் புறப்பட்டான்.

துறவி சிறுவனுடைய ராஜ விச்வாஸத்தை மெச்சி, 'போய்வா அப்பா' என்று ஆசீர்வதித்தனுப்பினார். கர்த்து பின்தொடர, ஐவன்ஹோ காட்டு வழியெல்லாம் கடந்து, அரசன் ராபின்ஹூடுடன் பேசிக்கொண்டிருந்த இடத்தை அணுகியவுடன், வில்லும் வாளுமாக ஆயிரக்கணக்கான திருடர் மன்னனைச் சூழ்ந்திருப்பதையும், கீழே பல வீரர்கள் கைவேறு, கால் வேறு, உடல் வேறு, குடல் வேறாகச் சின்னபின்னப்பட்டு, உதிரம் பெருக்கெடுத்து வண்டோலஞ் செய்ய, பூமி பயங்கரமாக விளங்குவதையும் கண்டு, அரசனை அக்கள்வர் கையில் சிறைப்பட்டு விட்டானென்று ஸந்தேகித்து, திகைத்து நிற்க, ரிச்சேர்டு, "ஓ! ஐவன்ஹோ! அஞ்சாதே; இவர் நமது பரம ஸ்நேகிதர். இவரால்தாம் நாம் இக்கொலைபாதக

ரிடத்திருந்தும் தப்பினோம்" என்றான்.

ஐவன்ஹோ ராபின்ஹூடை வாழ்த்த, ராபின் அவனையும் அரசனையும் அழைத்துக்கொண்டு, காட்டின் மற்றோர் புறத்திலுள்ள ஒரு அகன்ற வெளியின்கண் அவ்விருவருக்கும் விருந்து செய்வித்தான். விருந்து முடிந்தவுடன், எல்லாரும் ஸந்தோஷமாகப் பேசிவிட்டு, மேலே செய்ய வேண்டுவனவற்றை ஆலோசிக்கத் தொடங்கினர்.

ஐவன்ஹோவும் ராபின்ஹூடும் அதெல்ஸ்டேன் மாளிகைக்கு அரசன் செல்லவேண்டிய மார்க்கத்தில் ராஜத்துரோகிகள் இன்னும் பதுங்கி இருப்பார்களோ வென்று சந்தேகித்து, அவ்வழியைப் பல இருடர்களைக் கொண்டு பரிசோதிப்பித்தனர்.

சென்ற தூதர் திரும்பிவந்து, வழி நிர்ப்பயமாக இருக்கின்றதென்று உறுதி கூறியதன்மேல், அரசனும் ஐவன்ஹோவும் கர்த்துவாம்பா என்ற இருவரும் பின் தொடர, அதெல்ஸ்டேன் மாளிகையினுள் நுழைந்தனர்.

## அத்தியாயம் 11

மிகப்பழையதும், பூர்வகால நாகரீகங்கள் அமைந்ததும், பல யுத்தவீரர்களால் காக்கப்பெற்றதும், இரவில் நோக்குங்கால் கன்னங்கரேலென்று பயங்கரமாக விளங்குவதுமான அதெல்ஸ்டேனுடைய மாளிகையினுள்ளே, ஸிட்ரிக்கு மிக்க விசனம் கொண்ட முகக்குறியுடன் அதெல்ஸ்டேனது அபரக்கிரியைகளைச் செய்வதற்கு ஏற்பாடுகள் பண்ணிக் கொண்டிருக்கும் போது, நமது ரிச்சேர்டும் ஐவன்ஹோவும் உள்ளே நுழையக்கண்டு, மரியாதையுடன் முன்வந்து, இருவருடனும் கைகுலுக்கி, நல்வரவு கூறி, உள்ளே அழைத்துச் சென்றான்.

ஆங்குள்ள பல வளங்களையும் விநோதங்களையும் அவர்களுக்குக் காட்டிக்கொண்டு, ஸிட்ரிக்கு, "கறுப்பு வீரரே! உமக்கும் உமது நண்பரான இவருக்கும் நான் நல்வரவு கூறி, இருவரையும் உபசரிக்கின்றேன். இவர் உமக்கு நண்பரானபடியால், எனக்கும் நண்பர்தாம். கறுப்பு வீரரே! இவர் திருநாமம் யாதோ?" என்று வினவினன்.

கறுப்புவீரன், "ஐய! ஸிட்ரிக்கு! இவர் எனக்கு அத்தியந்தம் ஸ்நேகிதர். இவர் ஜீவனும் என்ஜீவனும் ஒன்று. இருவர்க்கும் உடல்மாத்திரம் வேறே ஒழிய, மற்ற நோக்கம், குணம் முதலிய ஸகலமும் ஒன்றுதான். இவர் திருநாமம் 'கறுப்புவீரலகா' என்றான்.

ஸிட்ரிக்கு, "ஓ! கறுப்புவீரலகாவே! உம்முடைய வரவு நல்வரவாகக் கடவது. நான் உம்மையும் உமது நண்பர் கறுப்பு வீரரையும் அதெல்ஸ்டேனது தாய் எடுத்-

துச் சீமாட்டியினிடம் அழைத்துப் போகிறேன்" என்று சொல்லி, விசாலமான அறை ஒன்றில் ஒரு நாற்காலியில் விசனமுகத்துடன் உட்கார்ந்து, சிந்தித்துக்கொண்டிருந்த அச்சீமாட்டியின் முன் இவ்விருவரையும் அழைத்துச் சென்று, அவளை நோக்கி, "ஓ! அம்மணி! இவர்தாம் நமது குழந்தை அதெல்ஸ்டேனைப் பிராண்டிபோயின் கோட்டையினின்றும் விடுவிக்க ஸகாயம் செய்து எல்லாரையும் காத்தவர். இவர் அவருடைய பிராணஸகா. இவ்விருவரும் நமது மாளிகைக்கு உம்மைத் துக்கப்பிரச்னம் செய்யும் பொருட்டு வந்திருக்கின்றனர்" என்றான்.

அவள் எழுந்து, இருவரையும் வரவேற்று, "ஐயா கறுப்புவீரரே! உமக்குப் பலகோடி வந்தனம். நீர் ஜீவ காருண்யம் என்னும் வலைக்குள்பட்டு என் புதல்வனை ரக்ஷித்தீர்; எல்லாம் 'மேலைத் தவத்தளவே யாகும்.' போன ஜன்மத்திற் செய்த அவைதாம் மண்ணிற் பிறந்தார்க்கு வைத்த பொருள். 'ஊழிற்பெருவலியாவுள? மற்றொன்று சூழினும், தான் முந்துறு' மன்றோ? பூர்வ ஜன்மத்தில் நான் நல்ல கர்மாவைச் செய்திருந்தால், இந்த ஜன்மத்தில் நற்பயனைப் பெற்றிருப்பேன். வெறும்பானை மேலேபொங்குமா?" என்றாள். வீரன் அவள் துக்கத்தை ஆற்றும் பொருட்டுச் சில மொழிந்தான். அவள், "ஐயன்மீர்! நீங்கள் இருவரும் எனது இல்லத்திற்கு நாங்கள் துக்கஸாகரத்தில் மூழ்கி இருக்கும் இந்த ஸமயத்தில் வந்து, ஆறுதல் சொல்லி, எங்களைக் கௌரவப்படுத்தினீர்களே, அதற்கு நான் என்ன பிரதி செய்யப்போகிறேன்! ஐயா! ஸிட்ரிக்காரே! நமது நண்பர்களும் விருந்



தினர்களுமான இவர்களுக்கு ஒரு குறைவுமின்றி உபசாரம் செய்யும்" என்று சொல்லினள்.

ஸிட்ரிக்கு அவ்விருவரையும் ரொவேனா இருந்த அறைக்கு அழைத்துச் சென்று, "அம்மணி! உனக்குத் தான் நமது கறுப்புவீரரைத் தெரியுமே; இவர் அவருடைய அத்தியந்த ஸ்நேகிதர். இவருக்கும் நீ வந்தனம் அளிக்க வேண்டும். கறுப்பு வீரருடைய ஸகா யார்யாரோ, அவரெல்லாரும் நமக்கும் ஸ்நேகிதர்களே!" என்றான்.

ரொவேனா கறுப்புவீரனைக் கைகுலுக்கிவிட்டு, ஐவன்ஹோவின் கையில் கைபோட்டாள். போடவும், அவன் கை நடுநடுங்குவதைக் கண்டு, அவன் முகத்தை உற்று நோக்கினள். முகம் தலை உறையால் மூடப்பட்டு முழுவதும் மறைக்கப் பெற்றிருந்தமையால், காரணம் விளங்காமல் மயங்கினாள். இவ்விஷயம் ஸிட்ரிக்கினால் கவனிக்கப்படவில்லை யாயினும், கறுப்புவீரன் அதைக் கண்டுகொண்டு, ஐவன்ஹோவின் காதோடு, "சற்றுப் பொறு; அப்பால் எல்லாம் கடவுள் அருளால் நன்மையாய் முடியும்" என்றான்.

இச்சொற் கேட்டதும், ஐவன்ஹோ அதிகம் திடுக்கிட்டுத் திரும்பி, உடல்நடுங்கக் கறுப்புவீரன்மீது சாய்ந்தான். க[illegible]புவீரன் மறுபடியும் ஐவன்ஹோவுக்கு அநு சாதே[illegible]று அபயமளித்தும், அவன் தெளியாது, தளித்துக்கொண்டு, ஸிட்ரிக்கைப் பின்பற்றி, வேறோரறைக்குச் சென்றான்.

இங்கே ஸிட்ரிக்கு அவ்விருவரையும் நிறுத்தி, "என் அதிதிகளே! யான் வேறுசில காரியங்களை மேல்விசாரணை

செய்யப்போகிறேன். இதோ மேஜையின்மீது உங்களுக்குச் சிற்றுண்டி படைத்திருக்கின்றது. ஆஸ்வால்டு வேண்டியன அளிப்பான். எனக்கு உத்திரவு கொடுங்கள்" என்று வெளியிட எத்தனிக்கவும், கறுப்புவீரன், "ஐயா! தனிகரே! நீர் எனக்கு ஒருவரம் அளிப்பதாகச் சொன்னீரே, அது ஞாபகமிருக்கின்றதா?" என்றான்.

ஸிட்ரிக்கு, "ஆ! நான் அதை மறந்துவிடுவேனா! அது ஏது? இமயமலை மாறினாலும், தீயது குளிர்ந்திட்டாலும், நான் இசைந்ததைக் கொடுத்தே தீர்வேன்; என்றைக்கும் சொற்பின் வாங்கேன்" என்றான்.

கறுப்புவீரன், "தனிகரே! இதுவரையில் என்னை நீர் கறுப்புவீரனென்றுதானே அறிவீர். இனி என்னை இங்கிலாந்து ரிச்சேர்டு என்று அறியும்" என்றான்.

ஸிட்ரிக்கு இச்சொல் காதில் விழுந்ததும் திடுக்கிட்டுப்போய், இரண்டு மூன்றடி பின் நகர்ந்து, நிற்கச் சக்தியற்றவனாய், ஒரு சுவரில் சாய்ந்துகொண்டான். ரிச்சேர்டு, "ஹோ! ஹோ! எம்மை உமது அரசனென்று அறிந்தும் தலை வணங்கினீரில்லையே!!!" எனவும், அவன், "ஓ! ஒரு நார்மனுக்கா இச்சிரம் வணங்குவது? அது ஒருநாளுமில்லை" என்றான்.

ரிச்சேர்டு, "அதுவும் அப்படியோ? நாம் உமது வழிபாட்டைப் பெறுவதற்குப் பாத்திரரென்று காட்டுவோம். உமக்கு நார்மன் ஜாதியாரிடத்து உண்டாயிருக்கும் வெறுப்பு இயல்பாக உண்டாகக்கூடியதுதான். ஆயினும், எந்தப்பொது விதிக்கும் விலக்குவிதி யுண்டாகையால், எம்மிடத்து உமக்குத் தேவதாவிச்வாஸம் உண்டாகும்படி



நாம் நடந்துகொள்வோம், பாரும். அது கிடக்கட்டும். நாம் கேட்டவரத்தைச் சொல்லி விடுகிறோம். உமது மகன் ஐவன்ஹோவை நீர் அங்கீகரிக்க வேண்டும். அவன் யோக க்ஷேமங்கள் எம்முடையவை. நீர் உமது வார்த்தையைக் காக்கவேண்டும். எவன்தான் கொடுத்த வாக்குப்படி செய்யத்தவறுகிறானோ, அவன் புருஷனல்லன்" என்றான்.

அச்சமயத்தில் ஐவன்ஹோவும் தன் பிதாவின் பாதத்தில் வீழ்ந்து, "அப்பா! அப்பா! அடியேனை அங்கீகரியும்! சிறியேன் செய்த சிறு பிழையைப்பொறுத்தருளும்" என்றான்.

ஸிட்ரிக்கும், 'அன்பிற்கு முண்டோ, அடைக்குந் தாழ்? ஆர்வலர் புன்கணீர் பூசல்தரும்' என்பது போல, பலநாள் பிரிந்து, ரணகாயம்பட்டுப் பிழைத்து, ராஜாவின் தோழமையும் பெற்றுச் சிறப்புடன் வந்திருக்கும் பிள்ளையைக் கண்டவுடன் கண்களில் நீர் பெருக, மகனை வாரியெடுத்து, "அப்பா! நீ என்ன அபராதம் செய்திருந்த போதிலும் மகாராஜா அவர்களின் வேண்டுகோளுக்காக உன்னை மன்னித்தேன். நீ நீடூழி வாழ்க! ஸிட்ரிக்கு வாக்குத் தவறினான் என்ற பேர் வரப்படாது. ஹேர்வார்டு மகன் ஸிட்ரிக்கு உயிர் போனாலும், உரை தவறான் என்ற கியாதி என்றும் நிலை நிற்கட்டும்" என்றான்.

அத்தருணத்தில் ஐவன்ஹோ புன்சிரிப்புக்கொண்டு தந்தையின் முகத்தை நோக்க, ஸிட்ரிக்கு, "ஓகோ! ஸரி, ஸரி! உன் அபிப்பிராயம் தெரிந்துவிட்டது. ரொவேனாவை நீ இனி கல்யாணஞ்செய்துகொள்வதில் ஆக்ஷேபனையில்லை;

ஆயினும், அவள் அதெல்ஸ்டேனுக்கென்று நிச்சயம் செய்யப்பட்டிருந்தவளாதலால், இரண்டு வருஷகாலம் அவனுக்கென்று அவள் துக்கங் காக்கவேண்டியவள். அப்படிச் செய்யாமல், அவன் தலைசாய்ந்ததும் சாயாததுமாக, அவளுக்கு விவாகம்என்று ஆரம்பித்தால், இறந்தவனுடைய ஆவேசம் பூமியைப் பிளந்துகொண்டு வந்து, நம்மெதிரில் நின்று நம்மைப் பார்த்துச் சிரிக்காதா? வாசாதத்தம், மனோதத்தம் என்ற இரண்டும் கிரியாதத்தத்துக்கு ஸமானமே ஒழிய வேறல்ல. நான் இக்கேவலத்தனமான காரியத்திற்கு உடன்படேன்" என்றுசொல்லுகையில், ஸிட்ரிக்கு வாக்குத்தான் பலித்ததோ என்று ஐயுறும்படி, அம்மூவரும் நின்றுகொண்டிருந்த அறையின் ஒருக்கணித்தகதவு 'பட' ரென்று திறக்கப்பட்டு, இம்மூவருக்கும் திடுக்கிடலை உண்டாக்க, ஒருருவம் வெண்மையான உடைதரித்து, முகத்தில் உயிர்க்களையே இல்லாமல், பாழிக்கண்ணுடனும், பம்பைத்தலையுடனும், இளைத்த சரீரத்துடனும் வாயிற்படியில் நின்று, இவர்களை உறுக்கி விழித்தது!

என்ன செய்வான் ஸிட்ரிக்கு! காலம் பகலாயிருந்தும், துணைக்கு இரண்டு அளஹராய சூரர்பக்கத்தில் நின்றுகொண்டிருந்தும், அவன் நடுநடுங்கிப்போய், கைகால் விலவிலக்க நிற்கச்சக்தியற்றவனாய்க் கறுப்புவீரன்தோளில் ஒருகையும், ஐவன்ஹோ தோளில் ஒருகையுமாகப் போட்டுக் கட்டிக்கொண்டு, "ஓ! அதெல்ஸ்டேன் ஆவேசமே! உனக்கு நான் ஒன்றும் அபராதம் செய்யவில்லையே! நீ சரீரங்கொண்டு மனிதனாக இருந்த பொழுது உன்னை நான் தெய்வமாகவும் அரசனாகவும் மதித்து, என் அருமைமகளையும் இழந்து தவித்தேனே! உன்னை நினைத்துத் தானே இவ்வளவு பக்திசிரத்தையுடன் இக்காரியங்களை எல்லாம் செய்துகொண்டிருக்கிறேன்! நீ ஏன் என்னை இவ்வேளையில் வந்து அச்சுறுத்துகிறாய்? நீ ஆவேசமா, அல்லது ஆள்தானா? உண்மையைச் சொல். உன் திருப்திக்கு இன்னும் நான் யாது செய்யவேண்டுமோ, அதைச்சொல்லிவிடு; உடனே அதைச் செய்துவிட்டு மறுவேலை பார்க்கிறேன். என்னைக் காத்தருள்" என்று பிரார்த்தித்தான்.



அண்டம் புரண்டு, ஆழிகள் திரண்டு, திசைகள் இருண்டு, தெய்வங்கள் மருண்டு, பிரளயகாலம் ஸமீபித்த போதும் மனம் சிறிதும் கலங்காது, மதோன்மத்த ஸ்வபாவத்துடன் கம்பீரமாக எதிர்த்து நின்று, கண்டீரவம் போல ஆண்மையுடன் போர்செய்யவல்ல ரிச்சேர்டு மகாவீரனும் இவ்வேளையில் சிறிது சங்கை கொண்டான். பேயானாலும், தாயானாலும், சேயானாலும் பாராது தன் மன்னனுக்கு உறும் ஆபத்தை விலக்க முற்படும் ஐவன்ஹோவின் கைவாட்பிடியைத் தேடிற்று!

இத்தருணத்தில் அப்பூதம் உள்ளே நுழைந்துவந்து, "மாமா! ஸிட்ரிக்காரே! நீர் அஞ்சவேண்டாம். நான் ஆவேசமல்லேன், உமது மருமானே! நான் இறந்துபோனதாக எண்ணி என்னை நீர் இரும்புப்பெட்டியில் போட்டுப் புதைக்க ஏற்பாடு செய்துவிட்டீர். நான் மூர்ச்சித்தே கிடந்தேன். இன்று காலை மூர்ச்சை தெளிந்து எழுந்ததும், நல்ல வேளையாக மேல்மூடி திறந்திருந்தமையால், வெளிக்கிளம்பி வந்து, உம்மைக் காணும் பாக்கியத்தைப் பெற்றேன். பூட்டியிருந்தீர்களோ, நான் என்ன கத்

றிக் கூப்பிட்டாலும், ஒருவருக்கும் கேட்கப்போகிறதில்லை. அப்படிக் கேட்டாலும், பிசாசம் கூப்பிடுகிறது, இதில் ஏதோ மோசமிருக்கின்றதென்று அஞ்சி, எல்லாரும் உடனே என்னைப் புதைக்க ஆரம்பித்திருப்பீர்கள். ஏதோ என் தலையின் எழுத்து வலுவாயிருந்தது! நான் பிழைத்து வந்தேன்; ஆஷ்பி யுத்தத்திலும் பிழைத்தேன்; பிராண்டிபோ மாளிகையினின்றும் வெளிப்பட்டேன். காலதூதன் போன்ற அந்தக் கில்பர்ட்டினால் பட்ட அடி இன்னும் இம்மண்டையில் வலி தோன்றிக்கொண்டிருக்கின்றது. மாமா! எனக்குப் பசி இவ்வளவவ்வளவென்பதில்லை. என்னுடைய ஆத்மாவுக்கென்று செய்துவைத்த பதார்த்தங்களை நான் சரீரத்தோடேயே வந்து உண்கிறேன். வாரும்" என்று, ஸிட்ரிக்கின் கையைப் பிடித்து இழுத்தான்.

இப்பொழுதுதான் ஸிட்ரிக்குக்கு நல்ல ஞாபகம் வந்தது! அவன் அதெல்ஸ்டேனை மார்புறத் தழுவிக்கொண்டு ஸந்தோஷத்தினால் உடல் பூரிக்க, ஆனந்த பாஷ்பம் பெருக்கினான். ஸிட்ரிக்கின் ஆலிங்கனத்தினின்றும் விலகினதும் அவன் ஐவன்ஹோ பக்கத்தில் நிற்கக் கண்டு, "ஆ! என் நண்பா! நீ பிழைத்தாயா? உன் காயங்கள் செவ்வையாய் ஆறினவோ?" என்று யோகக்ஷேமங்கள் விசாரித்து, ரிச்சேர்டை நோக்கிக் கறுப்புவீரரே உம——" என்று ஏதோசொல்ல ஆரம்பிக்க, முழுவதும் அவன் சொல்லுமுன், ஸிட்ரிக்கு, "அப்பா! மருமானே! இவர் ஸாமான்யக் கறுப்பு வீரரல்லர். நார்மண்டி தேசத்து ரிச்சேர்டு" என்றான்.



இச்சொற் கேட்டதும் அதெல்ஸ்டேன் "ஹா! இவர் நமது அரசரா?" என்று சொல்லிக்கொண்டு, ரிச்சேர்டு பாதத்தில் வீழ்ந்து வணங்க, ஸிட்ரிக்கு, "ஓ! பிள்ளாய்! நீ ஆல்ப்ரடு (Alfred) வம்சம் என்பதை மறந்தாய் போலும்! அன்னிய நார்மனுக்குத் தலைவணங்கினாய்! உன் பிதுரார்ஜித பாத்யதையை இழக்க எண்ணினாய்! உன் ஜன்மம் என்ன ஜன்மம்?" என்று இகழ்ந்தான்.

அவன், "மாமா! நீர் போகாத ஊர்க்கு வழி தேடுகிறீர். முடவன்கொம்புத்தேனுக்கு ஆசைப்பட்டால், கிட்டுமோ? நான் முன்போல ஆகாயக்கோட்டை கட்டும் எண்ணத்தை விட்டுவிட்டேன்" என்றான்.

ஸிட்ரிக்கு, "ஆனால் நீ என் ரோவேனாவையும் கைவிட்டு விடுவாயோ? அதுமட்டும் நீ செய்யமாட்டாயென்று நம்புகிறேன்" என்றான்.

அதெல்ஸ்டேன், "ஐயா! நீர் கிழவர். உமக்கு உலக வியாபாரத்தில் ஒழிவு பிறந்துவிட்டது. ஸ்திரீகளின்மனத்தை அறியும்படியான காலமும் உமக்கு இல்லை. என்னைவிட வயதில் இளையவனும், அழகில் மேலானவனும், குணத்தில் சிறந்தவனும், பராக்கிரமத்தில் மிக்கவனும், ஆண்மையில் பெரியவனுமான இந்த ஐவன்ஹோவை ரோவேனா மணக்க எண்ணுவளா, கேவலம் கிராம்பிய வாலியும், கருநாடகப் பிரபுவுமான என்னை லக்ஷியம் செய்வளா? அவளிஷ்டப்படி விட்டுவிடுதலே எனக்கு ஸம்மதம்" என்று கூறிவிட, தன்மேல் [illegible] ஸிட்ரிக்கு அதெல்ஸ்டேன்மீது வெறுப்புற்றவனாய், [illegible] மண்டபத்தை யடைந்தான்.

## அத்தியாயம் 12

மைந்தன் திரும்பிய செய்தி கேட்ட எடித்து சீமாட்டியின் ஆனந்தத்தை யாரால் எடுத்துரைக்க முடியும் ?

“ இழந்தமணி புற்றரவு எதிர்ந்த தெனலானாள்
பழந்தன மிழந்தன படைத்தவரை யொத்தாள்
குழந்தையை யுயிர்த்த மலடிக்குவமை கொண்டாள்
உழந்துவிழி பெற்றதோர் உயிர்ப்பொறை நிகர்த்தாள்.”

அதெல்ஸ்டேனும் தான் தப்பித்துவந்த வரலாற்றைத் தன் மாதாவுக்கும் ஒருமுறை கூறிவிட்டு, ஸிட்ரிக்கையும், ரிச்சேர்டையும், ஐவன்ஹோவையும் உணவு கொள்ளும்படி அழைக்க, அப்போது, ஐவன்ஹோவைக் காணாமல், அவன் எங்கே என்று விசாரித்தான். சில வேலைக்காரர்கள் ஓடிவந்து, “ ஐயா ! ஒரு யூதன் அவரைத் தேடிக்கொண்டு வந்தான். இருவரும் ஏதோ சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்தனர். பிறகு ஐவன்ஹோ கர்த்தைக் கூப்பிட்டுத் தமது கவசம் ஆயுதம் முதலியவற்றை எடுத்து வரும்படி ஆஜ்ஞாபித்தார். அவன் அவைகளைக் கொணர்ந்தவுடன், ஒரு குதிரையின்மீது ஏறிக்கொண்டு இருவரும் பறந்துபோய் விட்டார்கள்” என்றார்.

அதன்மேல் அதெல்ஸ்டேன், “ ஐயா ! ஸிட்ரிக்கு மாமா ! நமது அரசரையும் காணோமே ! அவர் எங்கே ?” என்று கேட்க, ஸிட்ரிக்கு, “ என்ன அப்பா ஐவன்ஹோ போகிறானென்றால், அரச சிங்கம் இங்கே தங்குமா ?” என்றான். உடனே அதெல்ஸ்டேனும் சீக்கிரமாக உணவு கொண்டு அவ்விருவரையும் தேடப் புறப்பட்டான்.



கோயில்வீரர் மடத்தில் ரெபெகாவுக்கு என்ன ஸம்பவித்தது என்று சற்றுக் கவனிப்போம். மகாதுரோகியான கில்பர்ட்டினால் அவள் பலமுறையும் கண் கலக்கம் செய்யப்பெற்று, தற்கொலை செய்து கொள்ளலாமா வென்றுகூட சில ஸமயம் நினைத்தாள். அவளுக்குக் கொடுத்திருந்த மூன்று நாள் கெடு நெருங்கலாயிற்று. மூன்றாம் நாளில் சுற்றுப்புறத்திலுள்ள ஜனங்களெல்லாம் யூதமகளின் கதியைப் பார்க்க வேண்டுமென்னும் ஆவலினால் மடத்து முற்றத்தில் வந்து கூடினார்கள். போமனோர் ஆசனம் வகித்தவுடன், மல்வாய்ஸினை நோக்கி, “ ஓ ! மல்வாய்ஸின் ! நான் அந்த யூத நாய்க்குக் கொடுத்திருந்த கெடு இன்றையோடு கழிந்து போகின்றதன்றோ? அவளை இங்கு இழுத்து வரச் சொல்லு” என்று ஆஜ்ஞாபித்தான். அவ்வாறே அவளைக்கொண்டு ஸபைமத்தியில் நிறுத்தினார்கள். பல்லாயிரம் புலிகள் மத்தியில் ஒரு புள்ளிமான்போலத் தவித்து, மருளமருள விழித்துக்கொண்டு, ஜகத்காரணபூதரான கடவுளின் திருவடியைத் தவிர வேறு துணையை எதிர்பாராமல், ஒவ்வொரு நிமிஷமும் மரணத்தை எதிர்நோக்கியிருந்த ரெபெகாவைக் கண்ட அந்த ஜனங்கள், மிகவும் இரக்கங்கொண்டு, அவளுக்குச் சார்பாகப் பேச ஆரம்பித்தனர். சில ஸ்திரீகள் அழத்தொடங்கினர், சில சிறுமிகள் போமனோரை வையத்தொடங்கினர். சில புருஷர்கள் கில்பர்ட்டைச் சபிக்கத் தொடங்கினர். சில யௌவன குமாரர்கள் அவளுக்கு ஏற்றுக்கொண்டு போருக்கு எத்தனம் பண்ணினர்! ஆனால் கில்பர்ட்டின் ஸோதியும்,

அவனுடைய மூர்க்கத்தனமும் நினைவுக்கு வரவே, அவர்கள் கருடனைக் கண்ட ஸர்ப்பம் போலத் தலையிறங்கிப் போய்விட்டனர். ரெபெகாவுக்குத் தான் அனுப்பிய கடிதம் ஐஸாக்கினிடத்திற் போய்ச் சேர்ந்த ஸமாசாரங் கூடத் தெரியவில்லை. அவள் மனம் கொள்ளிமேல் எறும்பு போலக் குழைந்து, ஸதா காலமும் கடவுளின் திருவடியைத் தியானிக்கத் தலைப்பட்டது. அவள் அவருடைய சரணகமலங்களில் நிறுத்திய சித்தத்தோடு ஆகாயத்தை அண்ணாந்து பார்த்தபடியே பெருமூச்சு விட்டுக்கொண்டு நின்றுகொண்டிருந்தாள். அவளுக்கு எதிரே ஒரு பெரும் சிதையொன்று அடிக்கப்பட்டிருந்தது. அது மலைபோலக் குவிந்து, அவளைக் ‘கவளீகரிக்கின்றேன், வா!’ என்று அழைப்பதுபோல விளங்கிற்று! அதைப் பார்த்த ஒவ்வொரு ஸ்திரீயும் நடுநடுங்கி ‘ஹோ’ வென்று அலறத் தலைப்பட்டனள்! சிலர் வேறு பக்கம் திரும்பிக்கொண்டனர். சிலர் கண்களைப் பொத்திக்கொண்டனர்! கில்பர்ட்டு கூட அதைக் கண்டு தேகமும் உடலும் பதறினன். ரெபெகாமட்டும் அக்காஷ்டத்தை அன்புடன் நோக்கி, “ஓ! என் அருமை உடன்பிறந்தானே! உனக்கு வந்தனம்! உன்னிடத்தில் நான் அடைக்கலம் புகுந்துவிடுகிறேன். உன்னாலே இச்சரீரம் சுத்தீகாரஞ் செய்யப்படட்டும். இது இப்பொழுது ஒரு பாபியின் ஸ்பரிசத்தினால் அபரிசுத்தமுற்று, வைத்துக் கொள்வதற்கு அகர்ஹமாக விருக்கிறது” என்று முணுமுணுத்துச் சொன்னாள்.

இவ்வாறு இவள் மனம் லோகாந்தரத்தில் திரிந்து



கொண்டு, பிராகிருத ஸம்பந்தத்தை ஒழித்து நிற்க, போமனர், “அடி யூத பதிதை! உன—” என்று வாயெடுத்தவுடன், தூக்கத்தினின்று அலறி விழித்தவள் போல ரெபெகா திடுக்கிட்டுத் திரும்பி, போமனரைப்பார்த்தாள். அவன், “அடீ சூனியகாரி! யாரிடத்தில் உன்னுடைய ஜாலத்தைக் காட்டுகிறாய்? ஏதோ பிரமாதமாக அஞ்சினவள்போலப் பாசாங்கு செய்கிறாயே! உன் மந்திரசக்தியால் இக்காஷ்டத்தைக்கூட எரியாமல் செய்துவிடுவாயோ! எரிந்தாலும், உனக்கு அது நீர்போலக் குளிர்ந்திருக்குமோ! அது கிடக்க, நாழிகையோ அஸ்தமனமாகப்போகிறது! உனக்காக ஏற்றுக்கொண்டு வருவானையும் காணோம். இன்னும் இரண்டு நாழிகைதான் நீ உயிரோடிருக்கலாம்! பிறகு நீ அக்கினிப்பிரவேசம் செய்துவிட வேண்டும்” என்றான்.

அவள், “ஐயா! இரண்டு நாழிகையாவது எனக்கு அவகாசம் கொடுத்தீர்களே! அதற்குக் கோடிவந்தனம்! கடவுளுக்கு அருளுண்டாகில், அக்காலத்திற்குள் எவ்வளவோ காரியங்களை அவர் செய்து விடுவாரே! இவ்வண்ட சிருஷ்டி அவருக்கு இச்சாமாத்திரத்தினால் ஆய்விட்டதென்றால், அவ்வண்டத்தின் ஒரு ஜீவனான என்னை ரக்ஷிக்கின்றதற்கு அவருக்கு எவ்வளவு காலம் வேண்டும்?” என்றாள்.

போமனர் அவளுடைய அழகைவிட அவளுடைய பேச்சின் சாதுர்யத்தை அதிகமாக மெச்சி, “அடி பெண்ணே! ஏன் இவ்விளமையை வீணாக்குகிறாய்? உன்னுடைய அஞ்ஞான மதத்தை விட்டுவிடு. கிறிஸ்தவமதத்

தை ஏற்றுக்கொள். உன்னை நான் பிராயச்சித்தம் செய்வித்து வாழ்விக்கின்றேன்" என்றான்.

ரெபெகா, "ஐய! துணிகளை உடுத்து உடுத்து எறிவதுபோல மதத்தைத் தழுவித்தழுவி நீக்குவது நியாயமோ? இன்று உமது தண்டனைக்கு அஞ்சி நான் கிறிஸ்தவச்சியாய் விட்டால், நாளை ஒரு முகம்மதியனிடத்து அகப்பட்டுக்கொள்ளும்படி நேர்ந்தால், துருக்கச்சியாகவன்றோ ஆகவேண்டும்? கடவுளிடத்துச் செல்ல ஆசைகொண்டிருக்கும் இவ்வுயிர் சரீரமென்னும் சிறையிலடைபட்டு வருந்துகின்றது. இச்சிறையினின்றும் அதை நீங்கள் விடுவித்துப்போடுவீர்களானால், நான் உங்களுக்கு வந்தனமளித்துப் போவேனே! அக்கிரமமான ஒரு காரியத்தைச் செய்து, இப்பாழுடலை ஏனோ சுமந்திருக்கவேண்டும்? நானே துர்மரணமாகப் பிராணனை விட்டால், கடவுளுடைய ஆணையைக் கடந்தவளாவேனாதலால், இத்துர்மரணத்தினின்றும் நான் என்னைக் காத்துக்கொள்ளும்பொருட்டே, என் தந்தைக்குக்கடிதம் அனுப்பினேன். மனுஷ்யப்பிரயத்தனத்தை வஞ்சனையின்றிச் செய்து விட்டால், அப்புறம் நடப்பது தெய்வ யத்தனமாகும்" என்று பதில் கூறினும், பாமகிராதக நெஞ்சமுடைய போமனார் கண்ணிலும் ஜலம் வந்து விட்டது. அவன் கூறிய நியாயம் தனக்கு இதுவரையில் விளங்கியதில்லையே என்று துக்கிக்கவும் தொடங்கினான். ஒரு நாழிகை வரையில் அவன் வாய்திறந்து ஒன்றும் பேசவில்லை! ரெபெகாவினது பேச்சின் சாதுரியத்தையும், அழகின் சிறப்பையும், கல்வியின் முதிர்ச்சியையும், புத்தியின்



தீக்ஷணியத்தையும், மனத்தின் உறுதியையும், குணத்தின் மிகுதியையும் எண்ணி எண்ணி ஆனந்திப்பதும், அவளது கதியை நினைத்துத் துக்கிப்பதும், அவளைப் புகழ்வதும், இகழ்வதுமாகத் தன் மனமானதப்பி மனோராச்சியம் செய்து கொண்டிருக்கையில், யுத்தகளத்தில் துரகாரூடனாய் காலோடு தலைக் கவசந்தரித்து ஆயுதம் பூண்டு, சுற்றிச்சுற்றி உலாவி வந்துகொண்டிருந்த வில்பார்ட், அடுக்கியிருக்கும் காஷ்டத்தைப் பரிசோதிப்பான் போல வந்து, அதனருகில் நின்றுகொண்டு, தியானபரையாய் கண்களை மூடிக்கொண்டிருக்கும் ரெபெகாவை, "அடி என் கண்ணின் கருவிழியின் பாவாய்! உன் உருவம் என் மனத்தைப் புண்படுத்துகின்றதே! இப்பொழுதுகூட உன்னை நான் விடுவிக்கக்கூடும். சட்டெனப் பாய்ந்து, இக்குதிரையின் மீதேறி என் பின்னே வந்து உட்கார். அண்டம் புரண்டும், திசைகள் மருண்டும் போகுமாறும், பத்துலக்ஷம் வீரர்கள் கடல்போல ஒலித்துக்கொண்டு வந்து, என்னை மடக்கினாலும், ஒரு நொடிக்குள் அவர் எல்லாரையும் ஹதம் செய்து, உன்னைக் கண்ணில் வைத்து இமையால் மூடிக்கொண்டு போய்த் தேசாந்திரத்தில் சேர்த்துவிடுவேன். அங்கே நீ அரசியும் நான் அரசனுமாக இருந்து வாழலாம்" என்றான்.

ரெபெகா இதைக்கேட்டவுடன் செவிகளைப்பொத்திக்கொண்டு, "ஐயோ! இந்தவாசகம் இன்னும் ஏன் என் காதில் விழவேண்டும்? அடா பாதகா! உனக்கு இன்னும் வெட்கமில்லையே! உன்னுடைய அயோக்யத்தனத்தை என்னிடத்திலா காட்டுகிறாய்! இதோ இருக்கின்றதே,

இந்தக்காஷ்டம் என்னை உன்னிடத்தினின்றும் காத்து, உன்னைப்பார்த்துச் சிரிக்கப்போகிறது! இது கொழுந்து விட்டு, ஆகாயத்தை அளாவி, 'ஹே! ஜனங்களே! அசேதனமான யான் ஐயறிவுள்ள கில்பர்ட்டு என்ற ஒரு பாபியைக் காட்டிலும் அறிவுள்ளவனாய், அவனை இகழ்ந்து, ஒரு நிர்தோஷியான கன்னியை ரக்ஷித்துக் கொண்டிருக்கிறேன்! இந்த ஸத்காரியத்தில் நான் தலையிட்டுக்கொண்டமையால்தான், எனக்கு இவ்வளவு தேஜஸும் உச்சஸ்திதியும் வந்திருக்கின்றன! என்னோடு புராணிய கில்பர்ட்டு பாவி மண்ணினுள் புதையுண்டு, மறைந்து, பேர், கீர்த்தியின்றி, மடிந்துபோகப் போகிறான். என் கீர்த்தியும், நான் ரக்ஷிக்கும் அக்கன்னியின் கீர்த்தியும் உலகுள்ளளவும் நிலைத்திருக்கப் போகிறது!' என்று சொல்லிக்கொண்டு, ஜ்வலிக்கப்போகிறது. நீ ஏன் அடிக்கடி வந்து என்னை நிர்ப்பந்தம் பண்ணிப் போகிறாய்? என்முன் நில்லாதே! உன்னால் இன்னும் என்னென்ன கொடுமைகள் செய்யக்கூடுமோ அவை யாவற்றையும் செய்! உன்னைக் காண என் கண்கள் நாணுகின்றன" என்றாள்.

இவ்விருவரும் பேசிக்கொண்டிருப்பதைப் போமனோர் கவனிக்க வில்லையாயினும் மல்வாய்ஸின் கவனித்து, "ஓகோ அனர்த்தம் வந்துவிட்டது" என்று அவர்களிடத்திற் சொல்ல, கில்பர்ட்டு அவ்விடத்தைவிட்டு நழுவி விட்டான். ரெபெகா ஸந்தோஷித்து, மனத்துக்குள் மல்வாய்ஸினை வாழ்த்தி, கில்பர்ட்டின் வாதை ஒழிந்தமையால், கடவுளைத் தியானிக்கத் தொடங்கினாள்.

இதற்குள் சூரியனும் மேற்றிசையில் மறையத்



தலைப்பட்டான். பக்ஷிகளெல்லாம் மல்வாய்ஸினையும், கில்பர்ட்டையும், போமனோரையும் வைதுகொண்டு செல்லுகின்றனபோலக் 'கூ கா' வென்று கத்திக்கொண்டும், "இந்தக் கொடுமையைக் காணவொண்ணாது" என்று கதறிக்கொண்டும் மறைவதுபோல அதிவேகமாகப் பறந்து போய்விட்டன. ஜனங்களில் சிலர் அழுதுகொண்டும், சிலர் புலம்பிக்கொண்டும், சிலர் பேசுவதற்குப் பிடிக்காமல் மௌனம் சாதித்துக்கொண்டும் அவ்விடத்தைவிட்டு அகலத் தலைப்பட்டனர். காற்றுக்கூட அடுத்தக்ஷணம் ஸம்பவிக்கப்போகிற கோரமான ஸம்பவத்தைக் காண ஸகியாததுபோன்று, உலாவாமல் ஸ்தம்பித்து, நின்றுவிட்டது. அவ்விடத்திலே அப்பொழுது நின்ற சிலர் போமனோரை வேண்டிக்கொள்ள ஆரம்பித்தனர். அவனும், 'ஏனடா அப்பா! இந்தக் கஷ்டத்தில்மாட்டிக்கொண்டோம்!' என்று தன்னையே நொந்துகொண்டான். குவித்திருக்கும் காஷ்டத்தில் நெருப்பு வைப்பதற்குத் திட்டஞ்செய்யப்பட்டிருந்த கொலையாளி தீவர்த்தியுடன் அந்தக் களத்தை அணுகினான். அதைக்கண்ட எல்லாரும், "ஹா! ஹா! ஹா!" என்று அலறினர். போமனோரும் அவனை அப்புறம் போகும்படி ஆஜ்ஞாபிக்க வாயெடுத்தான். அத்தீவர்த்தியைக் கண்டு மல்வாய்ஸின் ரெபெகா என்ற இருவர்மட்டுமே சந்தோஷப்பட்டார்கள். கில்பர்ட்டுக்கோ எரிகின்ற அத்தீவர்த்தி எமன் போலத் தோன்றிற்று. அதைக் கண்டதும் அவன் உடம்பு பதறினான். அவன் கண்களில் தீப்பொறி பறக்கலாயின. அவ்வேளையில் மல்வாய்ஸின் அவன் பக்கத்தில்

வந்து, "ஹே! கில்பார்ட்டு! நீ அரேபியாவின் பாலைநில வெளியிலே ரிச்சேர்டு அரசனைக்கொல்லச் சூழ்ச்சி செய்தாயே! அப்பொழுது உனக்கு மனத்தில் பாபம் செய்வதாய்த் தோன்றவில்லையே! ஒரு மூட்டைப் பூச்சியை நசுக்கும்போது எவ்வளவு அலக்ஷியம் தோன்றுமோ, அவ்வளவு அலக்ஷியந்தானே அப்பொழுது உனக்குத் தோன்றிற்று. இப்பொழுது ஏதோ நினைத்துக்கொண்டு தடுமாறுகிறையே! இந்தச்சண்டாளி உனக்கு மந்திரம் போட்டுவிட்டாள் என்பதே உண்மை" என்றான்.

கில்பார்ட்டு மிகவும் கோபித்து, "ஹே துரோகி! உன்னாலன்றோ நான் இந்தக் கதிக்கு வந்தது! என்முன் நில்லாதே! நானோ இந்தச் சிதையில் எரியுண்டு மாளப்போகிறேன். என்னை இன்னும் கெடுக்க முயலாதே" என்றான்.

இத்தருணத்தில் சூரியன் மறைந்து போயினன். ரெபெகா எரிக்கப்பட வேண்டியவளாய் விட்டாள். மல்வாய்ஸின் அவளைக் காஷ்டத்தில் ஏறும்படி ஆக்ஞாபிக்கப் போனான். ஆயினும் போமனுருடைய உத்திரவைக் கேட்போமென்று திரும்பிவர, அதுவரையில் சிந்தை மயங்கிக் கொண்டிருந்த போமனுர், சூரியன் மறைந்ததையும், மல்வாய்ஸின் வருவதையும் நோக்கி, அவன் எண்ணத்தை ஊகித்தறிந்து, எவ்வாறு அக்கொடிய உத்திரவைக் கொடுப்பதென்று கலங்கினன். இவ்வேளையில் எல்லாருடைய மனத்திலும் ஒரு குதூஹலம் தோன்றும்படி ஒரு கொம்பொலி கேட்டது.

எல்லாரும் ஒலி கேட்டவிடத்தை நோக்கினார்கள். நெடுந்தூரத்திற்கப்பால் ஒரு குதிரைமேல் ஒருவன்பறந்து



பறந்து வருவதைக் கண்டு, "ஓகோ! ஒருவீரன் வந்தான்! அவன் நிச்சயமாகக் கில்பார்ட்டை வெல்வான். இவள் பரிசுத்தை!" என்று கோஷித்தனர். இவர்கள் பேசும் ஆரவாரம் அடங்குமுன், வந்தவீரன் அவர்கள் மத்தியில் பிரவேசித்து விட்டான். அவன் தன்னுடைய சிரமத்தையும் தன் குதிரையின் களைப்பையும் பாராது, போமனுரைப் பார்த்து, "ஓ போமனுர்! நான் ரெபெகாவுக்கு ஏற்றுக்கொண்டு வந்தவன். அவள் நிரபராதி என்று ருஜுப்படுத்த இக்கில்பார்ட்டோடு யுத்தஞ்செய்வதற்குத் தயாராக இருக்கிறேன். நான் சண்டைக்கு ஆரம்பிக்கலாமா?" என்றான். அதற்கு மல்வாய்ஸின், "ஓ! வீர! நீ யார்? உன் பெயரும் குலமும் யாது?" என்றான். அதற்கு அவன், "ஐய! நான் ஒரு ஸத்புருஷனே! குலத்திலும் உயர்ந்தவன்தான்" என்றான்.

மல்வாய்ஸின், "வீர! நீ யோக்யனுயிருக்கலாம் உயர்குலத்தோனுயிருக்கலாம், ஆனால், கோயில் மடத்துச் சுத்தவீரர்கள் ஒரு வீரனை யோக்யனென்றும் நல்ல குலத்தில் வந்தானென்றும் நிதரிசனமாக அறிந்தாலொழிய, அவனோடு யுத்தம் செய்யமாட்டார்கள்" என்றான்.

வந்தவீரன், "ஓ! மல்வாய்ஸின்! என் பெயரும், குலமும் இப்பொழுது தெரிகின்றன வல்லவா?" என்று சொல்லிக்கொண்டு, தன் தலையுறையைத்தூக்கி முகத்தைக்காட்டினன். மல்வாய்ஸின் திடுக்கிட்டு, "நீயா!" என்றவுடன், அவன், "ஆம்! நான்தான்! ஐவன்ஹோவென்று தெரிகிறதா? என்குலம் உன் குலத்தைக் காட்டிலும் மேலானதென்று நான் சொல்லவேண்டியதில்லையே!" என்றான்.

உடனே கில்பர்ட்டு, "ஓ! ஓ! நீ இங்கு வரவே படாது! நீ யாரடா பயல், வெறிபிடித்த காளை! 'சிறியோர்க்கிடங்கொடாதே, செம்புக்குப் புளி ஊற்றாதே' என்ற பழமொழி உண்மையாயிருக்கிறது! கிடந்தால் கிடக்கிறது சிறுபயலாயிற்றே என்று ஒரு தடவைக்கு இருதடவையாக விட்டுக்கொடுத்தால், தலைமேல் ஏறுகிறாய்! பயலே! உன் உடம்புக் காயங்கள் ஆறினவாடா! என்னோடு சண்டை போடுவதற்கு? ஆ! ஆ! நல்ல குதிரையில் ஏறி வந்திருக்கிறாய்! உனக்கு ஜீவித்திருக்க எண்ணமில்லாதுபோனால், எங்கேயாவது ஒரு கற்பாறையில் முட்டிக்கொண்டு சாகேன். ஏன் என் காலின் கீழ் விழுந்து பிராணனை விடுகிறாய்! இந்த ஸ்திதியில் உன்னோடு நான் யுத்தம் செய்யமாட்டேன்! நீ உன் காயங்களை ஆற்றிக்கொண்டு திடசரீரியாய் வந்து சேர். அப்பொழுது உன் கைவன்மையைப் பார்க்கிறேன்" என்றான்.

ஐவன்ஹோவுக்கு வந்த கோபத்திற்கு அளவே இல்லை. அவன் சிங்கம்போலப் பொங்கி எழுந்து, "அடா மமதை பிடித்து அலைகின்றவனே! துரோகிப் பயலே! கிராதகா! உனக்கு வாய்ப் பேச்சைத் தவிர வேறு என்னடா யோக்கியதை! இந்த வேல்முனையின் முன் நிற்கச் சக்தியில்லாது இரண்டுமுறை விழுந்து மண் கவ்வியது நினைவில்லையா! ஏகர்ஸ்தலத்தையும், ஆஷ்பியையும் நினைத்துப்பார். ஸெட்ரிக்கின் 'ரதர்வூடு' மாளிகையில் ஒரு பெண்பிள்ளைக் கெதிரில் பிரமாதமாகப் பேசினையேயடா! 'ஐவன்ஹோமட்டும் இங்கிலாந்தில் வந்து என்னோடு சண்டை செய்வானானால்,



அவனை யுத்தத்தில் ஒருகை பார்த்து விடுகிறேன்' என்றாயே! வெட்கமிருந்து, சொன்ன சொல்லைக் காக்க வேண்டுமென்னும் ஆண்மையுமிருந்தால், என் முன் வந்து நில்! பயங்கொள்ளிப் பயலே! வீரனென்று ஏனடா வீண் பெயர் சுமக்கின்றாய்? நீ இப்பொழுது என்னோடு சண்டைக்கு வாராது போனால், உன்னை இங்கிலாந்திலுள்ள ஒவ்வொரு ராஜஸபையிலும், உன்னுடைய வகுப்பின் ஒவ்வொரு மடத்திலும், ஐரோப்பா முழுவதும், 'கில்பர்ட்டு பயங்கொள்ளித்தனமாக ஐவன்ஹோவோடு யுத்தத்திற்குவரப் பின் வாங்கினான்' என்று பகிரங்கப் படுத்துவேன்" என்றான்.

இதைக் கேட்டவுடன் கில்பர்ட்டு, கோபமும் ரோஷமும் பொங்க, அம்பேறுண்ட வேங்கைபோல ஆத்திரங்கொண்டு, கண் தீத்திரள் சொரிய, "அடா! ஸாக்ஸன் நாயே! வேலை எடுத்துக்கொள்ளடா மசகமே! சாகு! உன்னையமன் பிடர்பிடித்து உந்துகிறான்! யாருக்கும் காலானுகுணமாகத்தானே புத்தியும் தோன்றும்! வந்து நில்லடா பயலே!" என்று, தன் குதிரையை அவனுக்கெதிரே திருப்பினான்.

ஐவன்ஹோ போரசிரியனை நோக்கி, "நான் யுத்தத்திற்கு ஆரம்பிக்கலாமா?" என்று கேட்க, அவன், "நீங்கள் ஒருவரை ஒருவர் சண்டைக் கழைக்கும்போது நான் தடுப்பதால் பயனென்ன? நீ ரெபெக்காவுக்கு ஏற்றுக் கொண்டு போர்செய்கின்றாயென்றால், அவள் உன்னைத் தன் மனுஷ்யனென்று ஒப்புக்கொள்ளுகிறாளா வென்றதுதான் விசாரிக்க வேண்டியது" என்றான்.

உடனே ஐவன்ஹோ ரெபெக்கா பக்கம் திரும்பி,

"பெண்ணே! உனக்காக நான் போரலாமன்றோ? என்னை உன் மனுஷ்யனென்று ஒப்புக்கொள்வாயன்றோ?" என்றான்.

அவள் கண்களில் நீர் மல்க, அழுதுகொண்டு, "ஐயோ! உம்மையா நான் என் மனுஷ்யரில்லை என்று சொல்லுவேன்? உமக்கு இப்பொழுது சூலத்தாக்கினைத் தாங்க வலியிராதே! ஐயோ! நானொரு பெண் பிறந்து எவ்வளவு நல்லோருக்குத் தீங்கு விளைத்து வருகிறேன்! கடவுளே! கடவுளே! ஏன் என் உயிரை இன்னும் உம்மிடத்திற்கழைத்துப் போகவில்லை! ஐவன்ஹோ வீரரே! நான் இறந்துபோகிறேன்! நீர் ரோவேனாவுக்காக ஜீவித்திரும்! இந்தக் கடாப்புலி, கில்பர்ட்டோடு இப்பொழுது போராடவேண்டாம். என்றைக்கும் இவன் உமதுவேலுக்கு இரைதான்" என்றான்.

இவள் பேசியது ஐவன்ஹோ காதில் விழவே இல்லை. இவள் எப்பொழுது இவனைத் தன்மனுஷ்யன்தானென்று ஒப்புக்கொண்டு விட்டாளோ, அப்பொழுதே அவன் கில்பர்ட்டோடு போர் ஆரம்பித்துவிட்டான். இருவருடைய குதிரைகளின் மோதலினாலும், வேல்களின் தாக்கலினாலும், அட்டஹாஸத்தின் கோஷத்தாலும், திசைகள் செவிடுபட்டன. கில்பர்ட்டின் ஒவ்வொரு தாக்கலுக்கும் ஐவன்ஹோ நிலைதவறித் தத்தளித்தான். ஐவன்ஹோவின் மோதலினாலே கில்பர்ட்டிற்கு ஓரபாயமும் விளையவில்லை ஆனாலும், அவன் உற்சாகத்தோடு மட்டும் போர் புரிவானாகக் காணப்படவில்லை. கடைசியாக ஐவன்ஹோவின்வேல் கில்பர்ட்டின் தலையுறையில் பாய்ந்து, உட்



சென்றுவிட, அக்கோயில் வீரன் குதிரையினின்றும் 'பொத்' தென்று விழுந்து விட்டான்.

அதைக் கண்ட ஐவன்ஹோ சட்டெனக் குதிரையை விட்டுக் குதித்து, விழுந்து கிடக்கும் கோயில் வீரன் மார்பின்மீது ஏறி நின்றுகொண்டு, வாளை உருவி, அவனைத் தீர்த்துவிடப் போகையில், போமனோர் ஓடி வந்து, "ஐவன்ஹோ! ஐவன்ஹோ! அவனைக் கொன்று விடாதே! அவன் தோற்றதாக நாம் ஒப்புக்கொள்ளுகிறோம். அவன் பிராணன் போகுமுன், அவனுக்குச் சில பிராயச்சித்தங்கள் செய்ய உத்தேசிக்கிறேன்" என்று சொல்லித்தடுத்து, கிடப்பவன் தலையுறையை எடுப்பிக்க, கில்பர்ட்டு மாண்டு கிடந்தான்.

அதன்மேல் போமனோர் அப்பிரேதத்தை மல்வாய்ஸின் வசம் ஒப்பித்து, மேல் ஆகவேண்டிய காரியத்தைச் செய்யும்படி திட்டம் செய்து, பிறகு ஐவன்ஹோவை நோக்கி, "வீர! உன் ஸாமர்த்தியத்தையும் உன் நன்றியறிவையும் குணத்தையும் மெச்சினோம். ரெபெகா உன்னால் ஜயிக்கப்பட்டவளானாள். அவள்மேல் எனக்கு இனி ஒரு பாத்யதையுமில்லை" என்றான்.

இவன் இது சொல்லி வாய் மூடுமுன், ஒரு கொம்பொலியும், அதிவேகமாகப்பறந்து பறந்து வரும் இரண்டு குதிரைகளின் காலடிச்சத்தமும்கேட்டன. எல்லாரும்சத்தம் கேட்டவிடத்தை நோக்க, ஒரு வீரனும் ஐயாக்குக் கிழவனும் அணுகுவதைக் கண்டனர். கிட்டி வந்தவுடன், அவ்வீரன் ஐவன்ஹோவை நோக்கி, "ஆ! அந்தப் பாவியை நீயே கொன்று விட்டையா? ஆனன்றோ அவன்

ஆவியை உறிஞ்ச எண்ணியிருந்தேன்!" என்றான்.

ஐவன்ஹோ! "ஆ! அப்படிபாவிக்கு அந்தப் பதமும் கிடைக்குமா? அவன் நாற்றவுடல் நாய், நரி, கழுகுகளுக்கு இரையாக வேண்டும்" என்றான்.

இத்தருணத்தில் போடால்பு மடத்து ஸ்பாஸியும், அவரோடு நூற்றுக்கணக்கான மகா வீரர்களும் துரகாரூடராய் வந்து, அங்கு நெருங்கினர். அவ்வீரருள் ஒருவன், மல்வாய்ஸினை அணுகி, "நில்; உன்னை நான் சிறைபிடித்தேன்" என்றான்.

இதைக் கேட்டதும் போமனூர், "யாரடா நீ? என் மடத்துக்குள் வந்து, என் மனுஷ்யனைச் சிறைபிடிக்க! ஜாக்ரதை! இது கோயில் வீரர் மடமென்று நினை!" என்றான்.

இதைக் கேட்டதும் ஐவன்ஹோவோடு பேசிக்கொண்டிருந்த வீரன் தன் தலையுறையை எடுத்து, எல்லாரும் பார்க்கும்படியாக முகத்தைக் காட்டி, "ஓ! போமனூர்! இங்கிலாந்து மகாராஜா ரிச்சேர்டாகிய நமது ஆஞ்ஞையைத் தாங்கி குற்றவிசாரிணைத் தலைமை அதிகாரி 'ஹென்ரி போகன்' சிறைப்படுத்துகிறான்" என்றான்.

போமனூர் ரிச்சேர்டு முகத்தையும், அவனைச் சூழ்ந்து வந்திருந்த சுத்த வீரருடைய ஸங்கையையும் நோக்கி, இங்கிலாந்தைவிட்டு, பிரான்ஸுக்குப் போய்விட்டான். ரிச்சேர்டு ஆஸ்ட்ரியாவிலிருந்து தப்பி, இங்கிலாந்தில் வந்துவிட்ட செய்தியைக் கேள்வியுற்ற தேசத்து ஜனங்கள் எல்லாரும் அவன் கக்ஷியிற் சேர்ந்துகொண்டார்கள். ஜான் தனக்கு உதவுவார் ஒருவருமில்லை என்று



கண்டு, தமையனுடன் ஸ்நேகம் செய்துகொண்டு, பிரான்ஸுக்குப் போய்விட்டான். வால்டிமரும், டீப்ரேஸியும் தேசாந்தரம் போய்விட்டார்கள். மல்வாய்ஸின் நியாயாதிபதிகளால் விசாரிக்கப்பட்டு மரணதண்டனை விதிக்கப்பெற்றான்.

ரிச்சேர்டு பகைவரையும் ராஜத்துரோகிகளையும் அழித்துச் சிங்காதனம் ஏறினான். ஸிட்ரிக்கு ரொவேனாவை ஐவன்ஹோவுக்கு மணம் செய்வித்தான். அவ்விருவருடைய கல்யாணத்திற்கு ரிச்சேர்டு அரசனும் அவனுடைய ராஜாங்கத்து உத்யோகஸ்தர்களும் வந்திருந்து, அவர்களைக் கௌரவப்படுத்தினர். பல நாள்களாகப் பிரிவுற்றிருந்து, கஷ்ட நிஷ்டூரங்களை எல்லாம் அனுபவித்துக் கடைசியில் கூட்டுவிக்கப்பட்ட ரொவேனா. ஐவன்ஹோ என்ற இருவருடைய தாம்பத்யவாழ்க்கை மிகவும் ஒருமையானது என்று நாம் கூறவும் வேண்டுமோ?

இது நிற்க, ரெபெகா தன் அருமைப் பிதாவினிடத்திற் சேர்ப்பிக்கப்பெற்று, நிர்ப்பயமாகச் சிலநாள் இங்கிலாந்தில் வஸித்திருந்து, பிறகு அயல்நாடு சென்றாள்.

அராபியப் பாலைவனத்திலும் ஆஸ்ட்ரியாவிலும் படாத கஷ்டங்களையும் பட்ட ரிச்சேர்டு சிங்காதனமேறியதும்,

'ஒன்னலர் மணிமுடி உரிஞ்சு தாவினன்
தன்னவிற் றேளினன் கமலக்கண்ணினன்
தன்னுயிராமென உலகிற் றங்கிய
மன்னுயி ரனைத்தையும் புரக்கும் மாட்சியான்'

என்றும்,

114

'பொருசிலை வேனில்வேள் அனைய பொறபினன்
அருவரை யாமென அகன்ற மார்பினன்
கரைபொரும் உடைதிரைக் கடலந் தானையான்
திருகுவஞ் சினக்களிறு அனைய சீற்றத்தான்.'

என்றும்,

'வெங்கலி யிருள்கெட வெண்ணிலா வுமிழ்
திங்களங் கவிகையான் திகிரி ஒன்றினல்
அங்கண் மாநில முழுதுஅளிக்கும் ஆற்றலான்
மங்குலின் ஏழுமடங்கு உதவும் வண்கையான்'

என்றும், 1680

'அருவினது உறையுள் நல அறத்தின் வேலிசொல்
தெருளுறு கல்வியம் தெய்வமாக்கடல்
குறைகடற் புவிபுகழ் குணக்குன் றம்சுடர்
எரிதவழ் அலங்கல்வேல் அரசர் ஏறனன்'

என்றும் எல்லா ஜனங்களும் புகழ்ந்தனர். அவன் அரசு செய்த காலத்தில்,

'கல்லாது நிற்பார் பிறரின்மையின் கல்வி முற்ற
வல்லாருமில்லை; அவை வல்லர் அல்லாருமில்லை
எல்லாரு மெல்லாப் பெருஞ் செல்வமும் எய்தலாலே
இல்லாரு மில்லை; உடையார்களு மில்லை மாதோ?'

என்றும் உலகம் கொண்டாடிற்று. ரிச்சேர்டு சிங்கமோ

'எய்யென எழுபகை எங்கு மின்மையால்
வெய்யபெரு நிலவிரும் முழுவுத் தொழிலன்
வையகம் முழுதும் விருந்தோம்புமோர்
செய்யெனக் காத்தினிது அரசு செய்கின்றுன்!'

முற்றுப்பெற்றது.

Madras: G.C. Loganadham Bros, The Guardian Press, Mount Road.